# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 24 வியாழக்கிழமை (11.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 350


# அத்துமீறி நாவற்குழியில் நேற்று குடியேறின சிங்களக் குடும்பங்கள்

## யார் தடுத்தாலும் அங்கேயே இருப்போம் எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவம்பர் 11

யாழ்ப்பாணத்துக்குத் திடீரென வந்து தங்கியிருந்த சிங்களக் குடும்பங்கள் சந்தடி ஏதுமின்றி - எவரது அனுமதியுமின்றி நேற்று எதிர்பாராத வகையில் நாவற்குழியில் வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் குடியேறியுள்ளன. இதனால் அந்தப் பிரதேசத்தில் மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

ரயில் நிலையத்தில் தங்கியிருந்த சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே நேற்று கம்புகள், தடிகள் சகிதம் தடாலடியாக வீடமைப்பு அதிகார சபைக் காணிக்குள் நுழைந்து கொட்டில்களை அமைக்க ஆரம்பித்தனர்.

மளமளவெனக் கொட்டில்கள் அமைக்கும் பணியில் அவர்கள் நேற்று முழு நாளும் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் வீடுகளை அமைப்பதற்கு சீருடையினரும் உதவிகளை வழங்கினர் என அப்பகுதியில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

சிங்கள மக்களின் இந்த அத்துமீறிய திடீர் குடியேற்றம் குறித்துத் தனக்கு எதுவுமே தெரியாது என யாழ். அரச அதிபர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அனுமதி இன்றியே சிங்கள மக்கள் கொட்டில்களை அமைத்து வருகின்றனர் எனவும் அது தொடர்பில் தான் வீடமைப்பு

(28ஆம் பக்கம் பார்க்க)



உள்ளே


**கடமைக்கு சமுக மளிக்காத தாதியர் வேலையை இழப்பர்**
போராட்டத்தில் ஈடுபடும் தாதியர்களுக்கு சுகாதார அமைச்சு எச்சரிக்கை — பக்கம் 02

**உயர் அதிகாரிகளால் பெண்களுக்கு பாலியல் தொல்லை**
அரச அதிபர் வெளியிடும் தகவல் — பக்கம் 07

**இலங்கையின் வளர்ச்சி**
இலங்கையின் பொருளாதார நிலை பற்றி ஆராயும் கட்டுரை — பக்கம் 15


**கல்விச் சுடர்**

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கான கணிதம் Iஇல் பகுதி (A), (B) கணிதம் IIஇல் பகுதி (A), (B) இற்கான வினாக்கள்.

## நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ். பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்காக காலை 9 மணி முதல் 11 மணி வரை குருநகர் கலாசார மண்டபத்திலும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்காக முற்பகல் 11.30 மணிமுதல் ஒரு மணி வரை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்காக (28ஆம் பக்கம் பார்க்க)

## விபசார விடுதிகள் சுதந்திரமாக இயங்க அரசின் சட்டமூலம் வழிசெய்யப் போகிறது

**ஐ.தே.கட்சி கண்டனம்**

கொழும்பு,நவ11

சூதாட்ட விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் ஊடாக நாட்டில் சட்டவிரோதமாக இயங்கி வரும் விபசார விடுதிகளை முறையாக ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கின்றது என்று ஐ.தே.கட்சி எம்.பி. ஜோஸப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சூதாட்ட விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-(28ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு உதவக் குழு

யாழ்ப்பாணம்,நவ.11

புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைந்து வாழ உரிய ஒழுங்குகளைச் செய்வதற்கென குழுக்கள் உருவாக்கப்படவுள்ளன.

தேசிய ரீதியிலான தலைமையின் கீழ் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இதில் மாவட்ட அரச அதிபர்கள், சமூக மற்றும் சமயத் தலைவர்கள் உள்ளடக்கப்பட உள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த 12 ஆயிரம் முன்னாள் போராளிகளில் இதுவரை (28ஆம் பக்கம் பார்க்க)

## படுவான்கரையில் சிறுமி மீது வல்லுறவு

மட்டக்களப்பு, நவ. 11

கிழக்கு மாகாணம் படுவான்கரையில், நேற்றுமுன்தினம் சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேச, கோயில்போரைதீவு கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடத்தி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட 17 வயதுடைய சிறுமியை நேற்று அதிகாலை 1 மணியளவில் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மீட்டனர்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற வளாகத்தில் கவன ஈர்ப்புப் போராட்டம்

கொழும்பு, நவ.11

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக்கக் கோரி மேல் நீதிமன்ற வளாகத்தில், சரத் பொன்சேகாவின் பாரியாரான அனோமா பொன்சேகா தலைமையில் கவனயீர்ப்பு மௌனப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கவனயீர்ப்பு மௌனப் போராட்டமானது நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு நடத்தப்பட்டதோடு, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆதரவாளர்கள், 'சரத் பொன்சேகாவை விடுதலை செய்' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம்(28ஆம் பக்கம் பார்க்க)

**பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி**

## அனைத்து மதத் தலைவர்களும் மஹிந்தவிடம் தூது செல்ல முடிவு

கொழும்பு, நவ.11

சரத்பொன்சேகாவை விடுதலை செய்யும் கோரிக்கையுடன் அனைத்து மதத்தலைவர்களும் ஜனாதிபதியிடம் தூது செல்வதற்கு முடிசெய்யப்பட்டுள்ளதாக மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சுமங்கல தேரர் நேற்றுத் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் பாரியாரான அனோமா பொன்சேகா மற்றும் கட்சியின் பிரமுகர்கள் உள்ளிட்ட குழுவினர் மல்வத்த விகாரையில் பீடாதிபதியை நேற்றுக்காலை சந்தித்து சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து பேச்சு நடத்தினர். இதன்போதே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இது விடயமாக இரு தடவைகள் கோரிக்கை முன்வைத்துள்ளேன். எம்மால் முடிந்தவரையில் நாம் முயற்சித்தோம். இருந்தாலும் மீண்டும் ஒருமுறை பொன்சேகாவுக்கான

(28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆஸியில் தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட அகதிகளுக்கு 5 இலட்சம் ரூபா வழங்க முடிவு

## நாடு திரும்பி தொழில் வாய்ப்பைத் தேடிக் கொள்ள

கன்பரா, நவ.11

அவுஸ்திரேலியாவில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட அகதிகள் மீளவும் தமது நாட்டுக்குத் திரும்பி தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கு வசதியாக நாலாயிரம் டொலர் - இலங்கை நாணயத்தில் சுமார் 5 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட அகதிககளை சுயமாக நாடு திரும்புவதற்கு ஊக்குவிக்கும் நோக்கிலேயே அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. என்றும் இதற்கென அவுஸ்ரேலிய அரசாங்கம் 5 மில்லியன் டொலரை வருடாந்தம் ஒதுக்கவும் முடிவு செய்துள்ளது. என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் தீவில் நிரம்பி வழியும் அகதிகளுக்கான தடுப்பு முகாம்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் குறைக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. என்றும்

இந்த நிதியை அகதிகள் நேரடியாகப் பெறமுடியாது என்று அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவன் தெரிவித்தார்.

இந்த நிதி புலம்பெயர்ந்தோருக்கான அனைத்துலக நிறுவனம் ஊடாக தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு அல்லது சிறு தொழில் முயற்சியை ஆரம்பக்க உதவியாக வழங்கப்படும். என்றும் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் சுயமாக நாடு திரும்புவதை ஊக்குவிக்கவே இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

## ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவை முன்னிட்டு

# 65 ஆயிரம் பேர் சாப்பிடக்கூடிய பெரிய பாற்சோறு தயாரிக்கப்படும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு விழாவை முன்னிட்டு சுமார் 65 ஆயிரம் பேருக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய வகையிலான உலகில் மிகப் பெரிய பாற்சோறு தயாரிக்கப்படவுள்ளது. இது கின்னஸ் சாதனையாகவும் பதிவு பெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி உலகில் மிகப்பெரிய இந்த பாற்சோற்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிமுகப்படுத்தி வைப்பார்.

500 சமையல் கலைஞர்கள் இணைந்து தயாரிக்கும் இந்தப் பணியில் ஐந்து விடுதிகள் இணைந்து பணியாற்றவுள்ளன.

1200 கிலோ பச்சை அரிசி, 300 கிலோ முந்திரிகைப் பருப்பு, 250 கிலோ சர்க்கரை (கருப்பட்டி), 250 கிலோ உலர்ந்த திராட்சை, 150 கிலோ எண்ணெய், 150 கிலோ தேன், 24 கிலோ உப்பு, 1,500 தேங்காய்கள், 3,500 லீற்றர் தண்ணீர் என சுமார் 7ஆயிரம் கிலோ எடையுள்ள பொருள்கள் இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

இதைத் தயாரிப்பதற்கு 20 பெரிய அடுப்புகள், 120 பெரிய சாடிகள், 360 பிரமாண்டமான வேக வைக்கும் பாத்திரங்கள், 120 அளவு கோல்கள், 600 கையுறைகள், 120 கரண்டிகள் என்பனவும் பயன்படுத்தப்படவுள்ளன.

இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# கோப்பாய் நாவலர் வித்தியாலயத்துக்கு 5 மில்லியன் செலவில் கட்டடம்

## ஊவா மாகாணசபை அமைக்கிறது

யாழ்ப்பாணம், நவ.11

இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் ஊவாமாகாண சபையினால் 5 மில்லியன் ரூபா செலவில் கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்துக்கு கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறுசிங்க, ஊவா மாகாணசபை அதிகாரிகள், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-15)

# இணைப்பு ஆசிரியர் சம்பளப் பட்டியலில் கையொப்பமிடலாம்

யாழ்ப்பாணம், நவ.11

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் கார்த்திகை மாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் யாழ்.கல்வி வலயத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப்பட்டியலில் ஒப்பிடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ)

# கொழும்பு - யாழ்.தனியார் பஸ்களை உடன் பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் சேவைகளில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களின் உரிமையாளர்களை 14 நாள்களுக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலக தலைவர் பொ.கெங்காதரன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சங்கத்தின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சீரான போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளும் வகையிலும் பஸ்களுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட வீதி அனுமதி பத்திரக் கட்டணத்தைக் குறைக்கும் நோக்குடனும் இதுவரை அனுமதி பெறாது சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் -

உடனடியாக பஸ்களை பதிவு செய்வதன் மூலம் எமக்குக் கிடைக்கும் வசதிகளைப்பெற்றுக் கொள்வதுடன் நாம் ஒன்றாக நின்று எமது சீரான போக்குவரத்து சேவையையும் மக்களுக்கு வழங்க முடியும். இதன் மூலம் நாமும் எமது தொழிலை இலாபகரமாக மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற எமது பஸ் உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கான சகல வழிமுறைகளும் கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தங்களின் பதிவுகளை உடனடியாக யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகத்தில் மேற்கொள்ள முடியும் - என்றுள்ளது. (ஒ)

# நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்வாக ஞாயிறன்று சைக்கிள் ஓட்டப் போட்டி

## 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றலாம்

யாழ்ப்பாணம், நவ. 11

இலங்கை மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான விழிப்புணர்வுச் சைக்கிள் ஓட்டப் போட்டி யாழ்.பிரதேச செயலகங்கள் ரீதியாக நடத்தப்படவுள்ளது.

உலக நீரிழிவு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தச் சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

15 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றும் இப்போட்டி நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, அளவெட்டி, வேலணை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு நோய் சிகிச்சை நிலையத்தில் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையில் பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டியில் பங்கு கொள்பவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் முதல் மூன்று பேருக்கு விசேட பரிசுகள் வழங்கப்படும் எனவும், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் வகையிலான இப்போட்டியில் பங்கு பற்று மாறும் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

# சனியன்று நாள் முழுவதும் சாயி நிலையத்தில் பஜனை

யாழ்ப்பாணம்,நவ.11

உலகம் முழுவதும் அமைதியும், சாந்தியும் வேண்டி 175 நாடுகளிலுள்ள சாயி நிலையங்களில் ஒரே நேரத்தில் 24 மணிநேர பஜனை நடத்துவதற்கு பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை தொடங்கி மறுநாள் காலை 6 மணிவரை நடத்தபடவுள்ளது.

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் மாலை 6 மணிக்கு ஓம்காரம், காயத்திரீ ஜெயத்துடன் ஆரம்பித்து ஒவ்வொரு மணித்தியாலமும் பஜனைகள் இடம்பெற்று மறுநாள் காலை 6 மணிக்கு மகா மங்களாராத்தியுடன் நிறைவு பெறும்.

இந்தப் பஜனையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சாயி சேவா நிலையத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

# கைத்தொழில் முயற்சியாளருக்கான கண்காட்சியும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், நவ.11

முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் யாழ்ப்பாணத்தில் கண்காட்சியும், செயலமர்வும் நடத்தப்படவுள்ளன.

வடபகுதிக்கான சிறிய நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான இயந்திர உபகரண கண்காட்சியும் செயலமர்வும் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் சகல கைத்தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவிப்பாளர்களையும் கலந்து பயனடையுமாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபை பதில் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகங்காதரன் கேட்டுள்ளார்.

(204-311-313)

ஆணவம் அழிகிறது...



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இருந்து நேற்று சூரன் தலைகாட்டிய போது.

# யாழ்.பல்கலை துணை வேந்தர் பதவிக்கு 8 பேர் நியமனப் பத்திரம் தாக்கல்

## அவர்களில் ஒருவர் கல்விசாரா ஊழியரின் முன்னாள் தலைவர்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பதவிக்கு பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற் சங்கங்களின் முன்னாள் தலைவர் எஸ்.கே.தனேந்திரன் உட்பட எட்டுப்பேர் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர்.

புதிய துணைவேந்தரை தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இறுதித்தினம் நேற்று முடிவடைந்திருந்தது.

இந்தப்பதவிக்கு கீழ்க்கண்டவர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

- பேராசிரியர் நா.சண்முகலிங்கன்- துணைவேந்தர்.
- [illegible] துறை யாழ்.விவசாயபீடம்.
- பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிரேஷ்ட பேராசிரியர் -உயிரியல் விஞ்ஞானத்துறை, யாழ்.மருத்துவபீடம்.
- பேராசிரியர் என்.ஞானகுமரன் -கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.
- பேராசிரியர் இரத்தினஜீவன் எச் கூல்.
- பேராசிரியர் வி.எஸ்.இராசரத்தினம்.
- பேராசியிரியர் எஸ்.சத்தியசீலன் -பீடாதிபதி, பட்டப்பதிப்புக்கள் பீடம்.
- எஸ்.கே.தனேந்திரன் -யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவர்.

விண்ணப்பித்தவர்களின் கல்வித் தகைமை,தொழில் அனுபவம் ஆகியன தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 13ஆம் திகதி விசேட குழு கூடவிருக்கிறது. மூதவையின் மூன்று உறுப்பினர்களும் சிரேஷ்ட பேராசிரியர்களும் அக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

இந்தக் குழு முடிவு செய்யும் பெயர் விவரங்கள் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

பேரவை தேர்தலை நடத்தும் பேரவையின் தேர்தலில் முன்னுரிமை கூடுதல் வாக்குகள் பெற்றவர்களின் விவரங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். ஜனாதிபதி துணைவேந்தரை தேர்ந்தெடுப்பார். (ஒ-ஐ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைக்கு சமுமளிக்காத தாதியர் வேலை இழந்ததாக அரசு அறிவிப்பு

## போராட்டம் தொடரும் என்கிறது தாதியர் சங்கம்

கொழும்பு,நவ.11

அரச வைத்தியசாலைகளில் ஒருநாள் சுகவீன லீவு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாதியர் அனைவரும் வேலையிழந்தவர்களாகக் கருதப்படுவர் எனசுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் அடாவடித்தனத்துக்கு தாம் அஞ்சப் போவதில்லை என்றும், தாதியர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் பதிலடி கொடுத்துள்ளது அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம்.

இதுகுறித்து அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணப்பிரிய தெரிவிக்கையில்,

எமது சங்கத்தின் ஆறு கோரிக்கைகளுக்கும் உடனடியாகத் தீர்வு பெற்றுத் தருமாறு கோரி நேற்றுக் காலை வரை ஏழு மணி முதல் நாளை காலை (இன்று) 24 மணித்தியால பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்தோம். தீர்வுகளைப் பெற்றுத் தராது பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் வேலை இழந்தவர்களாகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று 75 சதவீதமான தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சர் எம்மைப் பயமுறுத்துவதற்காகவே இவ்வாறு அறிவித்துள்ளார் - என்றார்.

அதேவேளை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இன்று (அதாவது நேற்று) விடுமுறை பெற்றுக் கொண்ட அனைத்து அரச தாதியரும் வேலையிழந்தவர்களாகவே கருதப்படுவர்.

நேற்றைய தினம் விசேட காரணங்கள் ஏதுமின்றி விடுமுறை பெற்றுக் கொண்ட தாதிமார்கள் தொடர்பாகத் தகவல்களை வழங்குமாறு அரச வைத்தியசாலை அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

அத்துடன் அம்பாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இன்று (அதாவது நேற்று) கடமைக்கு வந்த தாதியர்களை அச்சுறுத்தி, அவர்களை அடித்தும் உள்ளனர் என முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளோம் - என்றுள்ளது. (ஒ-சி)

## யாழ்ப்பாணத்திலும் தாதியர் போராட்டம்

யாழ்ப்பாணம்,நவ.11

அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையிலும் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கச் செயலாளர் பா.சிவயோகன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமான இந்தப் பணிப் புறக்கணிப்பு இன்று காலை 7 மணிவரை தொடரும் என்றும் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகள் எவற்றிலும் தாதியர்கள் கடமையாற்றவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சுடன் இன்று அல்லது நாளை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற இருப்பதாகவும் அதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-15-319-26)

வடமராட்சியில் இருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்படும்

# மாணவியின் வைத்திய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

வடமாராட்சி,நவ.11

பருத்தித்துறை பாடசாலை மாணவி ஒருவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அந்த மாணவியின் வைத்திய அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதி சமர்ப்பிக்குமாறும், சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறும் பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து மாணவியையும் நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

குறிப்பிட்ட 13 வயதான மாணவி பருத்தித்துறையில் பெரிய தாயாருடன் கடந்த எட்டு வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளார். அருகில் விமல் என்பவரின் வீடு உண்டு. விமலுக்குச் சொந்தமான லொறியின் சாரதியாக நீர்கொழும்பைச் சேர்ந்த சிவன் என்பவர் கடமையாற்றி வந்துள்ளார். சிவனுக்கும் மாணவிக்கும் நீண்டகாலமாக தொடர்பு இருந்துள்ளது.

கடந்த 3ஆம் திகதியன்று மாணவியை பருத்தித்துறை நகருக்கு வருமாறு தொலைபேசி மூலம் சிவன் அழைப்பு விடுத்து நெல்லியடியில் வைத்துச் சந்தித்துள்ளார், பின்னர் சிவன் அம்மாணவியை கொடிகாமத்திற்கு அழைத்துச்சென்று அங்கிருந்து வவுனியா போய், அன்றிரவே கொழும்பைச் சென்றடைந்ததாகவும் -

அங்கு பேலியகொட என்ற இடத்தில் வீடொன்றில் வைத்து மாணவியை பலாத்காரம் செய்ததாகவும் தொடர்ந்து சுகததாஸ ஸ்ரேடியத்தில் ஜபார் என்பவரிடம் ஒப்படைத்ததாகவும், ஜபார் என்பவர் விமலின் தந்தையின் கடையில் வேலை பார்த்தவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விமலின்தந்தை அருணாசலம் மாணவியை பருத்தித்துறைக்கு அழைத்து வந்து பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்ததாகவும் பொலிஸ் தரப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மாணவியை சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி மூலம் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், இச்சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களைக் கைதுசெய்யுமாறும், நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-236)

# மழை காலம் நெருங்குவதால் சுத்திகரிப்புக்கு சிறப்புப் படை

யாழ்ப்பாணம், நவ.11

மாநகர சபை நடவடிக்கை

மழைகாலம் நெருங்குவதால் யாழ்.மாநகரப் பகுதியில் வடிகால்களில் காணப்படும் பற்றைகள், செடிகொடிகளை வெட்டி அகற்றுவதற்கென சிறப்புப் படையணி ஒன்று உருவாக் கப்படும் என யாழ். மாநகர சபையின் சுகாதாரக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சுகாதாரக் குழுத் தலைவர் ம.மங்களநேசன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். மாநகர சபை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

நில உரிமையாளர்கள், நிறுவனங்களின் கழிவுகளை மாநகர சபை வடிகால்களில் சேர்ப்பதற்குக் கட்டணம் அறவிட வேண்டும் என மராமத்துப் பொறியியலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையும், இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி வீட்டின் அளவு, குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.


தற்போது கழிவுகளை அகற்றுவதற்கான கட்டணவரவு அதிகரித்துள்ளதாகவும் கடந்த மாதத்தில் மாநகர சபைக்கு இதன் மூலம் ரூபா 11லட்சத்து 30 ஆயிரத்து 861 ரூபா கிடைத்துள்ளதாகவும் இங்கு கூறப்பட்டது. (த-7)

# மர நடுகை

தென்மராட்சி,நவ.11

ஜனாதிபதியின் 65 ஆவது பிறந்த தினத்தையொட்டியும் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டும் அனைத்துப் பாடசாலைகளிலும் மரக்கன்று நடுகைக்கு கல்வி அமைச்சினால் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.7 மணிக்கு மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அந்தந்தக் கல்வி வலயங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)



கிராமப்புறங்களில் உள்ள 1000 பாடசாலைகளைத் தரம் உயர்த்தும் அபிவிருத்திக் கூட்டம் நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மங்கள விளக்கேற்றுகிறார் முன்னாள் பேராயர் அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன். அருகில் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி காணப்படுகிறார். (படம்:ரட்ணம்)

# கொக்குவில் இந்து பரிசளிப்பு நாளை

யாழ்ப்பாணம்நவ.11

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேற்படி கல்லூரியின் பழைய மாணவரும் சமூக புரவலருமான மாணிக்கம் சுப்ரமணியம் கலந்து கொள்வார். மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியாரான திருமதி மாலதி சுப்ரமணியம் வழங்குவார்.

ஆசியுரையை கொக்குவில் கிருபாகர சிவசுப்ரமணிய ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ். சிவதாசக் குருக்களும், வாழ்த்துரைகளை நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.மாணிக்கராஜா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி எஸ். சகாதேவன் ஆகியோர் நிகழ்த்துவர். (த-201)

# வடக்கு மாகாணத்தில் 110 பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கு நேற்றுத் தீர்மானம்

## 5 ஆண்டுத் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்.நவ.11

வடக்கு மாகாணத்தில் 110 பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பிலான இறுதித் தீர்மானம் நேற்று புதன் கிழமை எடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் 1000 பாடசாலைகளைத் தரமுயர்த்தும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில் வடமாகாணத்தில் 90 பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்குக் கல்வியமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. எனினும் வடமாகாண ஆளுநர் ஜி.எ. சந்திரசிறியின் வேண்டுகோளுக்கு அமைய மேலும் 20 பாடசாலைகளை இணைத்து 110 பாடசாலைகளைத் தரம் உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கூட்டம் நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே இறுதித் தீர்மானம் எட்டப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உட்பட்டதாக இருக்கும் எனவும் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஆகக் குறைந்த தொகையாக 5 மில்லியன் ரூபாவும் அதிக பட்ச தொகையாக 60 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளதாக இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கிராமப் புற மாணவர்களுக்கும் கல்வியில் சம வாய்ப்பு வழங்கப்படுவதுடன், நவீன கல்வி முறைகளை சகல மாணவருக்கும் கிடைக்கச் செய்தல் என்பனவே இதன் நோக்கம் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது

இந்தக் கூட்டத்தில் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

வடமாகாணம் போரினால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் அடிப்படை வசதிகள் அற்றவையாக உள்ளன. இவ்வாறானதொரு நிலையில் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர்த்து வளங்கள் குறைந்த கிராமப் புற பாடசாலைகளை உள்ளடக்குமாறு பாடசாலை அதிபர்களினாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்களினாலும் இந்தக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அபிவிருத்திக்கென தெரிவு செய்யப்பட்ட 110 பாடசாலைகளின் அதிபர்கள் இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் பாடசாலையின் அமைவுகள் தொடர்பாகவும், பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பாகவும் வலயக் கல்விப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறும் இந்தக் கூட்டத்தில் கோரப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி, வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாநகரசபை முதல்வர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சமயத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-15-311-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதி மாதவனின் போதனையை மதிக்கும் நாட்டில் சூதாட்டத்துக்கு அங்கீகாரமா?

இன்று சூதாட்ட வலயங்களை ஏற்படுத்தும் அரசு, நாளை விபசார வலயங்களுக்கும் அங்கீகாரம் வழங்கும். எதிர்கால சந்ததியினரை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் - என்று அபாய அறிவிப்பு ஒன்றை விடுக்கின்றார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி.

நேற்று நாடாளுமன்றில் சூதாட்ட விசேட ஏற்பாடுகள் சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது. இதனால் உறுப்பினர்களின் உரைகளும் சற்றுக் காரசாரமாகவே இருந்தன.

சூதாட்டம் தொடர்பான இந்தச் சட்டவரைவு கடந்த ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி பிரதமரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமான டி.எம். ஜயரத்தினவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வழமையான கேள்வி பதில் மற்றும் பிரேரணைகள் முன் அறிவித்தல்களின் பின் சூதாட்ட விசேட ஏற்பாடுகள் சட்டவரைவு தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமானது.

பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம சட்டவரைவு தொடர்பாக விளக்கமளித்து விவாதத்தை ஆரம்பித்தார்.

### பிரதியமைச்சர் விளக்கம்

இன்று நாட்டில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. வெளிநாட்டுச் செலவாணியைப் பெறும் வகையில் உல்லாசப் பயணிகளைக் கவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் ஓர் அங்கமே சூதாட்ட நிலையங்களை ஒழுங்கமைக்கும் விசேட சட்டவரைவும் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பிரதி நிதி அமைச்சர் விளக்கம் அளித்தார்.

எதிர்க்கட்சிகளின் தரப்பில் ஜோசப் மைக்கல் பெரெரா விவாதத்தைத் தொடர்ந்தார்.

ஜோசப் மைக்கல் பெரேரா ஆரம்பத்திலேயே ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையைத் தொட்டுப் பேசினார். இது ஆளும் தரப்பு உறுப்பினர்களை உசுப்பி விட்டது.

### கேலிக்குரிய சட்டம்

மதுபானம், போதைப் பொருள் பாவனையற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவேன். தாய் தந்தையரை மதிக்கும் சமூகமாக மாற்றுவேன் என்று ஜனாதிபதி தனது மஹிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான நிலையில் சூதாட்ட நிலையங்களை அங்கீகரித்து ஒழுங்குபடுத்தும் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது கேலிக்குரிய விடயமாகும் - வெட்கப்படவேண்டும் - என்றார் மைக்கல் பெரேரா.

ஆனால் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் தொடர்ந்து இடையூறு செய்துகொண்டே இருந்தனர்.

ஆளும் தரப்பு உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிக்கொண்டே இருந்தார்.

எனினும் தொடர்ந்தும் உரையாற்றிய ஜேசப் மைக்கல் பெரேரா, எங்கள் பக்கம் இருந்து விரட்டியடிக்கப்பட்ட சில பைத்தியக்காரர்கள் இப்போது கூச்சல் இடுகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன தனது உரையை அமைதியாக நிகழ்த்தினார்.

### தேவையற்ற அலட்டல்

என்ன இது, இப்போது இந்த நாட்டில் இல்லாத ஏதோ ஒன்றைப்பற்றிப் பேசுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அலட்டிக்கொள்கின்றனர். ஊருக்கு ஊர் மூலைக்கு மூலை சட்டவிரோதமாக இயங்கிக் கொண்டிருக்கும் சூதாட்ட நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்காகவே இந்தச் சட்டவரைபு கொண்டுவரப்படுள்ளது என்று தனது பேச்சின்போது குறிப்பிட்டார் பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா விஜேவர்த்தன.

அமைதியான இப்பேச்சைத் தொடர்ந்து ஆக்ரோசமாக வெடித்தார் ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி.

ஐயா, இது ஒரு பௌத்த நாடு. புத்த பெருமானின் போதனைகளைக் கடைப்பிடிக்கும் நாடு. இங்கு மதமும், பாரம்பரியமும், கலாசாரமும் பாதுகாக்கப்பட வேண்டும். மதுபானங்களையும், சூதாட்டத்தையும் ஒழிக்கவேண்டிய அரசு இன்று அவற்றை சட்டபூர்வமாக அங்கீகரிக்கின்றது.

### இன்று சூதாட்டம் நாளை விபசாரம்

சூதாட்ட மையங்களை ஒழுங்குபடுத்தி வகைப்படுத்தும்போது புனித பிரதேசங்களான கண்டியிலும், அனுராதபுரத்திலும் சூதாட்ட வலயங்கள் ஏற்படுத்தப்படும். பிரயாணிகளைச் சந்தோஷப்படுத்துவதற்காக இன்று சூதாட்ட வலங்களை உருவாக்கியவர்கள் நாளை விபசார வலயங்களையும் உருவாக்குவார்கள்.

நாளை சமுதாயத்தை அதலபாதாளத்தில் தள்ளப்போகின்றனர் என்றும் அபாய அறிவிப்பு ஒன்றை விடுத்துத் தனது பேச்சை முடித்துக்கொண்டார் ஹந்துன் நெத்தி.

பிரதியமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்டினார். அதாவது இன்று கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் மட்டும் எட்டு சூதாட்ட நிலையங்கள் இயங்கிவருகின்றன. பிர

## கேள்வி எழுப்புகிறார் சுனில் ஹந்துன்நெத்தி

பல பாடசாலைகள் வணக்க தலங்கள் பல உள்ளன. ஆனால் இதைப் பற்றி எதிர்க்கட்சியின் எதுவும் பேசவில்லை. இவ்வாறான சூழ்நிலையை மாற்றி அமைப்பதற்காகவே இந்தச் சூதாட்ட நிலையங்களை ஒழுங்குபடுத்தும் சட்டவரைபு கொண்டுவரப்பட்டுள்ளது என்று அவர் விளக்கமளித்தார்.

அப்போது சபையில் சிறிது அமைதி காணப்பட்டபோதும், தயாசிறி ஜயசேகர உரையாற்றும்போது சபையில் பொறி பறந்தது.




ஐயா, எங்கள் ஜனாதிபதி பிரதி மாதமும் அலரி மாளிகையில் போதி பூஜை நடத்துகின்றார். அது ஏன்? ஒரு புது இலங்கையை உருவாக்கவே என்றார்.

பிக்குமார்களும், கிறிஸ்தவமதத் தலைவர்களும், இந்த மதகுருமாரும் சூதாட்ட சட்டவரைவைப் பிற்போடுமாறு கேட்டுக்கொண்டனர். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டன என்றார் ஜயசேகர.

இந்தவேளையில் அமைச்சர் டிலான் பெரேரா, பின் வரிசையில் நாமல் ராஜபக்ஷவின் அருகில் இருந்துகொண்டு அடிக்கடி இடையூறுகளைச் செய்துகொண்டிருந்தனர்.

இதனால் சபையில் காரசாரமாக வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. கழுதைகள், நாய்கள், பன்றிகள் போன்ற வார்த்தைகள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன.

டிலான் பெரேராவின் குறுக்கீடுகள் அதிகரித்துக்கொண்டே போனதால் தயாசிறி ஜயசேகர ஆத்திரமடைந்த நிலையில் வாய்ச் சொல்வீரர் இந்த டிலான் பெரேராவுக்கு வாய் மட்டும்தான், செயலில் எதுவும் இல்லை. ஒன்றுக்கு ஒன்று மேலும் ஒன்று என மூன்று பெண்களைக் கலியாணம் முடித்தார்.

மூன்று பெண்களுமே அவரை விட்டு விட்டுப் போய்விட்டனர். என்னிடமும் அவர்கள் வந்தனர். நான் எனக்கு வேறு வேலை இருக்கின்றது என்று அவர்களைத் தட்டிக்கழித்து விட்டேன். இந்த டிலான் பெரோவுக்கு எதுவுமே செய்ய முடியாது, வீட்டிலும் வேலை இல்லை. அதனால்தான் இங்கே வந்து வாய்ச் சவடால் அடிக்கிறார் என்றார் ஜயசேகர. இதையடுத்து டிலான் பெரேரா கப்சிப் ஆனார்.

ஆனால் அஸ்வர் எம்.பி. உடனே எழுந்தார். ஒழுங்குப் பிரச்சினை என்றார். ஓர் உறுப்பிணரின் தனிப்பட்ட நடத்தை பற்றிச் சபையில் பேசுவது தடுக்கப்பட வேண்டும் என்றார்.

### அஸ்வரும் ஜமாய்க்கலாம்

அஸ்வர் ஐயா, கவலைப்படாதீர்கள். இப்பொழுது நிறைய கஸினோ கிளப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பெஸ்ட் டிரிங்ஸ், பெஸ்ட் புட், பெஸ்ட் கேர்ள் எல்லாம் கிடைக்கும் வயதான காலத்தில் நீங்களும் கூட அங்குபோய் அனுபவிக்கலாம் என்றார் தயாசிறி ஜயசேகர.

இதனால் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது. வாக்கெடுப்பு நடைபெற்ற வேளையில் விமல் வீரவன்ஸ உட்பட முன்வரிசை அமைச்சர்கள் பலர் சபையில் இருக்கவில்லை. ஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருக்கவில்லை.

### நேற்று நாடாளுமன்றத்தில்

* திறைசேரி செயலாளர் (பிரதிநிதியின் பெயர் குறித்த நியமனம்) சட்டமூலம்.
* சூதாட்டம் (விசேட ஏற்பாடுகள் சட்டமூலம்).
* தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.
* இலங்கைப் பகிரங்க தொழில் முயற்சிகளும் ஒரே நேரத்தில் விவாதற்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதும் உரையாற்றியவர்கள் 90 வீதமானவர்கள் சூதாட்டம் பற்றியே பேசித் தீர்த்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரா.புத்திரசிகாமணி

# மாணவர்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விட முயலுகிறது அரசு

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.11

ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்திய அரசு தற்போது மாணவர்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து வருகிறது - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

'மாணவர் ஒடுக்குமுறையும் நாட்டின் ஜனநாயகமும்' என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அங்கு அவர் கூறியவை வருமாறு -

அரசு மாணவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்த முயற்சித்து வருகிறது. தெற்கு மாணவர்கள் மாத்திரமன்றி வடக்கு மாணவர்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரசுக்கு அச்சுறுத்தலாக திகழும் ஒவ்வொரு தரப்பினரையும் ஒன்றன் பின்னர் ஒன்றாக அரசு ஒடுக்கி வருகிறது. பல்கலைக்கழகங்களில் அரசே குழப்ப நிலைமைகளை ஏற்படுத்தி வருகிறது.

எனவே, ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக இணைந்து இந்த அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

சர்வாதிகாரி ஹிட்லரின் ஒடுக்கு முறை ஆட்சியைப் போன்ற பயணத்தை ஆரம்பிக்கவே தற்போதை மஹிந்த நிர்வாகம் முயற்சித்து வருகிறது. அதன் ஒரு கட்டமாகவே 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஹிட்லர் ஜனநாயகத் தேர்தல் மூலமாகவே முதலில் ஆட்சியைக் கைப்பற்றினார். பின்னர் 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் போன்ற அவருக்கு ஏற்ற அரசமைப்பை உருவாக்கிக் கொண்டார்.

இதன் பின்னர் முதலில் மாணவர்களின் புலமைப்பரிசில்களை ஒடுக்க ஆரம்பித்தார். அதனையடுத்து அனைத்தையும் ஹிட்லர் ஒடுக்கு முறைக்கு உட்படுத்தினார்.

இந்த விதமான பயணத்தை ஆரம்பிக்கவே தற்போதை மஹிந்த நிர்வாகம் முயற்சித்து வருகிறது. பொது வேட்பாளரான சரத் பொன்சேகாவைச் சிறை வைத்தனர். அதன் பின்னர் ஊடகவியலாளர்களை ஒடுக்கி வருகின்றனர். அதில் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். பல ஊடகவியலாளர் உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நாட்டில் தப்பிச் செல்கின்றனர்.

உலகில் எந்த இடத்திலும் தமக்கு எதிரான அநீதிகளுக்கு முதலில் குரல் கொடுப்பது மாணவர்களே. இதனால் முதலில் மாணவர்களை ஒடுக்க முயற்சிக்கின்றனர்.

நாட்டின் ஜனநாயகப் பயணத்தை முன்னெடுக்க மாணவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமல்ல, நானும் தனிப்பட்ட ரீதியில் ஒத்துழைப்புகளை வழங்குவேன்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சேர்பிய அதிகாரிகள் நாளை இலங்கை வருகை

கொழும்பு, நவ.11

சேர்பியாவின் வெளிவிவகார அமைச்சர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை 12 ஆம் திகதி முதல் சேர்பிய வெளிவிவகார அமைச்சருடன் தூதுவர் குழுவொன்றும் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மற்றும் இலங்கைக்கான சேர்பியத் தூதுவரும் இந்த விஜயத்தில் இணைந்து கொள்ள உள்ளனர் என்றும், பிரதமர் டி.எம்.ஜயரட்ன மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருடன் சேர்பிய வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து பேச்சு நடத்தப்பட உள்ளது என வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியாவின் தார்மீகக் கடமை

இந்திய வம்சாவளியினரான மலையக மக்களின் நலனில் - வளர்ச்சியில் இனிவரும் காலங்களில் இந்திய அரசின் பங்களிப்பு இருக்கும் என்று கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் அசோக் கே காந்தா மீண்டும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

நுவரெலியாவில் - பெருந்தோட்டப்பகுதிகளில் சேவையில் ஈடுபடுவதற்கான சில பஸ்களை இந்திய அரசின் சார்பில் கையளிக்கும் நிகழ்வொன்றிலேயே தூதுவர் காந்தா இந்திய அரசின் கரிசனையை மீண்டும் இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்காக அமைத்துக்கொடுக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ள 50 ஆயிரம் வீடுகளில் 5 ஆயிரம் வீடுகள் மலையக மக்களுக்காக அமைத்துக்கொடுக்கப்படும் என்று தூதுவர் அந்த நிகழ்வில் குறிப்பிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கென திட்ட மிடப்பட்ட வீடுகளில் 5 ஆயிரம் வீடுகள் மலையக மக்களுக்கு என்பதை விடுத்து அவைகளுக்குமேலாக ஐயாயிரம் அல்லது அதற்கு மேலாக வீடுகள் அமைத்து கொடுக்கப்படும் என்ற வகையில் அவர் தெரிவித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். என்றாலும், போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் மக்களையும் வேறுவகையில் இன, மத, மொழி, தொழில், கல்வி மற்றும் பிரதேச அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களையும் இத்திட்டத்தின் மூலம் இணைப்பதாயின் தமிழ் இனத்தவர்கள் வரவேற்கவே செய்வார்கள். இது, இந்த மக்கள் சார்ந்த இந்தியாவின் கடமை - மிகவும் பின் தள்ளப்பட்டுவிட்ட கடமை என்றே சொல்ல வேண்டும்.

அண்மையில் மலையகத்தில் யட்டியாந்தோட்டை என்ற பகுதியில் இடம்பெற்ற கலவரத்தின் போது அடித்துத் துரத்தப்பட்ட ஒருதோட்டத்து தமிழ்த் தொழிலாளர் குடும்பங்கள் இன்னமும் திரும்பிச் சென்று குடியமர்ந்ததாக தகவல் இல்லை. திரும்பிச் சென்றவர்களும் நிம்மதியாக- ஆசுவாசமாக குடியமர்ந்திருப்பதாகக் கூற முடியாது.

வறுமையின் காரணமாக மலையகத் தொழிலாளர்களில் பலர் தம் பிள்ளைகளை தூர இடங்களில் உள்ள பணக்காரர்களின் பங்களாக்களில் வேலையாள்களாக அனுப்பிவிடுகிறார்கள். அவ்வாறு செல்லும் பிள்ளைகள் தம் கல்வியை இழப்பது ஒருபுறமிருக்க நல்ல முறையில் பராமரிக்கப்படுவதுமில்லை, இளைய வயதினர் பாலியல் வல்லுறவுக்கும் ஆளாகின்றார்கள்.

இதை நாம் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், மலையக மக்கள் கல்வி அறிவில் முன்னேறாதவர்களாகவும் பொருளாதாரத்தில் ஏனைய இனத்தவர்களுக்கு சமமாக முன்னேறாதவர்களாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டவே. இந்நிலைமாறவேண்டுமானால் அதிகாரத்தில் இருப்பவர்கள் அவர்களில் அதிக அக்கறை கொள்பவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் இதுவரை காலமும் அப்படியான நிலைமையொன்று உருவாகவில்லை. நாம் ஏற்கனவே இப்பத்திகளில் சுட்டிக்காட்டியிருந்தது போன்று அம்மக்களின் நிலை மாறும்போது அரசின் அக்கறை அவர்கள் பக்கமும் திரும்பும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால் அவர்களை சரியானமுறையில் திட்டமிட்டு முன்னேற்றுவது குறித்து இந்திய அரசு அறிய வேண்டும். சுயநலமிக்க அரசியல்வாதிகளிடமும், அக்கறையில்லாத அரச அதிகாரிகளிடமும் விட்டுவிடலாகாது. நிச்சயமாக இலங்கை அதிகாரிகளும் தென்னிலங்கை பேரின அரசியல்வாதிகளும் இந்த மக்கள் முன்னேற்றத்தை விரும்பமாட்டார்கள்.

இந்த நாட்டுடன் எந்தவிதத்திலும் சம்பந்தமே இல்லாத சீனாவும் பாகிஸ்தானும் முண்டியடித்துக் கொண்டு இலங்கைக்கு உதவ முன்வரும் போது கலை, கலாசார, மத மற்றும் வம்சாவளி அளவில் நெருக்கமான உறவும் உரிமையும் கொண்ட இந்தியா அம்மக்களுக்கு உதவ முன்வருவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

வடக்கு கிழக்கில் போரின் போது பெருமளவில் உதவிகளைப் புரிந்து ராஜபக்ஷ அரசின் வெற்றிக்கு வழிவகை செய்த இந்தியப் பேரரசு அந்தப் போரினால் பாதிப்புற்றுள்ள மக்களையும் பிரதேசங்களையும் காப்பாற்றுவதற்கும் வழிவகை செய்தாக வேண்டும். இந்த நாட்டின் அரசியல் இனக்குரோத ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வந்திருப்பவர்கள் இந்நாட்டு தமிழ் பேசும் மக்கள். அவர்களின் எதிர்கால மேம்பாடு, சுபீட்சம் ஆகியவை இன்றைய நிலையில் இந்தியாவின் கைகளிலேயே தங்கியுள்ளன.

இதனைத் தனது தார்மீகக் கடமையாக உணர்ந்து அந்நாடு செய்து முடிக்கும் என்று எதிர்பார்ப்போம்.

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டத்துக்கு உலக வங்கி 5.75 பில்லியன் ரூபா நிதியுதவி

யாழ்ப்பாணம், நவ. 11

வடக்கு - கிழக்கு மாகாண 'நெல்சிப்' அபிவிருத்தி திட்டத்திற்கு உலக வங்கி 5.75 பில்லியன் ரூபாவினை நிதி அமைச்சும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் இணைந்து செயற்படும் வகையில் வழங்கியுள்ளது.

இதனையடுத்து வடக்கு - கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளின் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தித் திட்டம் 2013 ஆம் ஆண்டுக்குள் முடிவடைய வேண்டும் எனவும் உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பங்கேற்புடன் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உபகருத் திட்டங்கள் சமர்ப்பித்த உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக நிதி வழங்கப்படும்.

இதற்கென ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் கணக்கினை ஆரம்பிக்க வேண்டும். உள்ளூராட்சி சபைகளினால் நீண்ட காலமாக எதிர்பார்த்த நிதி தற்போது அமைச்சுக்கு கிடைத்துள்ளதால் விரைவில் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-302)

# மாதமொன்றுக்கு 1,80,000 ரூபா சம்பளம் கோரும் வைத்தியர்கள்

யாழ்ப்பாணம், நவ. 11

அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களின் சம்பளத்தை ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்குமாறு அரச வைத்தியர்களின் சங்கம் கடந்த 08 ஆம் திகதி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்து மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் உபதலைவர் டாக்டர் அனுருத்த பாதெனிய இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

அரச மருத்துவர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படாவிடின் அவர்கள் அரச சேவையிலிருந்தும் வெளியேறி தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்த இயலாது போகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது அரச வைத்திய நிபுணரொருவரின் சம்பளம் 42 ஆயிரத்து 390 ரூபாவாகவும், சாதாரண வைத்தியர்களின் சம்பளம் 26 ஆயிரத்து 160 ரூபாவாகவும் உள்ளதெனவும், இது எந்த விதத்திலும் போதுமானதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தனியார் துறைகளில் உயர் பதவிகளை வகிப்போர் மிகப் பெரும் தொகையில் சம்பளங்களைப் பெறுவதாகவும், அரச சேவையில் உயர் பதவிகளை வகிப்போர் விடயத்தில் பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வைத்தியர்களுக்கு அவர்களது சம்பளத்தை விடவும் போக்குவரத்து கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபாவும் விபத்துக் கொடுப்பனவொன்றும் வழங்கப்பட்டாலும் அவையும் போதுமான தொகைகள் அல்ல எனவும் அவர் தெரிவித்ததுடன் வைத்தியர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து மற்றும் விபத்துக்கான கொடுப்பனவு 21 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

2006/06இலக்க சம்பளச் சுற்று நிருபத்துக்கு அமைய அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 11 ஆயிரத்து 700 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தச் சம்பளக் கொள்கைக்கு அமைய அரச ஊழியர்களின் ஆகக் கூடிய மற்றும் கீழ்மட்ட சம்பளத்துக்கு இடையிலான விகிதாசாரம் 1:4 மட்டம் வரையில் கொண்டு வரப்பட்டது. இதற்கு முன்னர் அந்த விகிதாசாரம் 1:12 ஆக இருந்தது புதிய சம்பள விகிதாசாரம் காரணமாக உயர் பதவிவ்கிப்போருக்கு அநீதி இழைக்கப்பட்டது.

ஒரே இரவுக்குள் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென நாம் கோரவில்லையெனவும், இது தொடர்பாக திறைசேரி, அரசு, மற்றும் சம்பள ஆணைக்குழு என்ற முத்தரப்பும் கலந்துரையாட வேண்டும் எனவும், சம்பள அதிகரிப்பைப் பெறுவது தொடர்பான தமக்குள்ள தொழிற் சங்க ஆற்றல் இன்று பயன் படுத்தப்படாதிருப்பது குறித்தும் தாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது எனவும் வைத்தியர் பாதெனிய மேலும் குறிப்பிட்டார். (த-22)

# உள்ளூராட்சி வேலைத் திட்டங்களை இவ்வருட இறுதிக்குள் முடிவுறுத்துக

## வடமாகாண ஆளுநர் பணிப்புரை



யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை இவ்வருட இறுதிக்குள் முடிக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பிரதேசச் சபை செயலாளர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக இக் கூட்டத்தில் மீளாய்வு செய்யப்பட்டது. திட்டத்திற்குத் தேவையான நிதியைத் தமது அலுவலகத்தின் ஊடாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவும் பெற்றுத்தருவதாக ஆளுநர் அங்கு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களினால் பெற்றுக் கொள்ளப்படும் வருவாயினை அதிகரிக்கும் நோக்கில் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களினை தாமே நேரடியாகச் சென்று பார்வையிட உள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் 13 உள்ளூராட்சி மன்றங்களின் சபைச் செயலாளர்களும், 3 நகரசபைத் தலைவர்களும் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும் கலந்து கொண்டனர். (15-7)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 26 | 12.11.2010 | |
| | | வெள்ளிக்கிழமை |
| திதி: | : | சஷ்டி |
| | | மு.ப.09.56 வரை |
| நட்சத்திரம் | : | உத்தராடம் |
| | | பி.ப.02.56 வரை |
| சுபநேரம் | : | 06.06-07.36 வரை |
| ராகுகாலம் | : | 10.36-12.06 வரை |

## சஷ்டியின் நிறைவான ஞான ஒளியே...!

வரத்தால் தோன்றிய வரோதயா போற்றி
உமை மைந்தனாய் வந்த உமா காந்தனே போற்றி
சரவணப் பொய்கை காங்கேயனே போற்றி
சரவணப் பொய்கையில் வளர்ந்த சரவணனே போற்றி
கார்த்திகைப் பெண்களின் காத்திகேயனே போற்றி
விசாக நட்சத்திரம் அமைந்த விசாகனே போற்றி
பக்தர்கள் குகை வாசமான குகனே போற்றி
சிவனார் நெற்றியின் ஸ்கந்தனே போற்றி
ஆறுமுகம்கொண்ட ஷண்முகா போற்றி
தந்தைக்கு உபதேசித்த சுவாமி நாதனே போற்றி
கடம்பமாலை அணியும் கடம்பனே போற்றி
தணிகையில் தணிந்த தணிகாசலனே போற்றி
பழனியில் அமர்ந்த ஞானப் பழனியே போற்றி
பக்தர்களுக்கு வரம் அளிக்கும் வரதனே போற்றி
சக்தி வேலினை ஆயுதமாக்கிய வேலவனே போற்றி
என்றும் பதினாறாயிருக்கும் குமரனே போற்றி
விஷ்ணுவுக்கு மருகனாகிய மருகோனே போற்றி
தோள் வலிமைகொண்ட கந்தனே போற்றி
அழகென்ற சொல்லுக்கு அழகனே முருகா போற்றி
பிரமத்தில் உதித்த சுப்பிரமணியனே போற்றி
தேவர்கள் தலைவனாம் சேனாபதியே போற்றி
தண்டாயுதம் கொண்ட தண்டாயுதபாணியே போற்றி
வேற்படை ஆயுதம் கொண்ட வேலாயுதனே போற்றி
மயிலை வாகனமாக்கிய சிவாகனனே போற்றி
பக்தர்களை ஞான ஒளி காணவைப்பாய் போற்றி போற்றி



தெல்லியூர் தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு: 26.04.1950

இறப்பு: 12.10.2010

## அமரர் வேலுப்பிள்ளை வரதராசா

பாசமிகு எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் ஏனைய உதவிகள் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (11.11.2010) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.57, கச்சேரி கிழக்கு வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம். (105830)

குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 21.04.2000

இறப்பு: 11.11.2009

## அமரர் பிறேமதாஸ் நிருஷன்

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
இந்நிலத்தில் வந்துதித்த வான்மதியே திருவுன்
குடும்பக் கதிரவனின் குமரனாம் திருவுன்
இடும்பைகோள் காலனவன் ஏற்றதும் ஏனோ?
ஓராண்டு இறப்பினும் இப்பிறப்பு இறப்பினும்
ஓராட்டி நாம் வளர்த்த உத்தமனே! எம்மிதயம்
ஆறாத் துயரில் தான் ஆழ்த்துளவே திருவுள நீ
நீராழி உலகில் நிலையான நீத்திகோள்

தகவல்:
சுதாகரன் (மாமா)

பன்னாலை,
தெல்லிப்பழை.

(105829)

# மரண அறிவித்தல்

## யூலியற் ஸ்ரீபன் பவா



இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யூலியற் ஸ்ரீபன் பவா (06.11.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் நட்சேத்திரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஸ்ரீபனின் அன்பு மனைவியும் குளோறியா (ஜேர்மனி), பீற்றர் இம்மானுவல் (ஜேர்மனி), வுளோரிடாமேசி (லண்டன்), பேசிராஜசிங்கம் (கனடா), கொன்சி (லண்டன்), விக்ரர் (ஜேர்மனி), மொறின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13.11.2010 சனிக்கிழமை அவ ரின் இல்லத்திலிருந்து (பீற்றர் வளவிலிருந்து) பிற்பகல் 3 மணியளவில் திருப்பலிக்காக அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
இளவாலை. (105828)

தகவல்:
பீற்றர் (மகன்)

## இலங்கையில் மிகப்பெரிய கட்டடம் சீன அரசு நிறுவனம் அமைக்கும்

கொழும்பு,நவ.11

இலங்கையில் மிகப்பெரிய கட்டடத்தை நிர்மாணிக்கும் வேலைகளை சீன அரசு நிறுவனம் ஒன்று ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாமரைக் கோபுரம் (Lotus Tower) என்ற பெயரில் 350 மீற்றர் உயரமாத்தைக் கோண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. தாமரை வடிவத்தில் இந்தக் கோபுரம் சுமார் 20 ஏக்கர் மைதானத்தை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்படவுள்ளது.

200 மில்லியன் டொலர் செலவில் இந்தக் கோபுரத்தை அமைக்கும் பணிகளை சீன அரசு நிறுவனம் ஒன்றே பொறுப் பேற்றுள்ளது. இது சிறிலங்காவில் சீனா மேற்கொள்ளவுள்ள அடுத்த மிகப்பெரிய திட்டமாகும். இதன் முதலாவது மற்றும் இரண்டாவது தளங்கள் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் ஒளி, ஒலிபரப்புக்கும், தொலைதொடர்பு சேவைக ளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளன. வணிக வளாகத்தையும் உள்ளடக்கியதாக அமையவுள்ள இந்தக் கோபுரத்தின் உச்சியில் சூதாட்ட மற்றும் இரவு விடுதிகள் என்பனவும் அமையகூள்ளன (த)

### விசேட நிலையறி பரீட்சை

தரம் 3 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கு கணிதம் தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்கான விசேட நிலையறி பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்த வினாத் தாள்கள் வலயக் கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பப் படவுள்ளன.பாடசாலை அதிபர்கள் இன்று வியாழக்கிழமை வலயக்கல்வி திணைக்களங்களில் அவற்றை பெற்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பரீட்சையை நடத்தும் படிகேட்கப்பட்டுள்ளனர். இந்தப் பரீட்சை யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட விசேட செயற்திட்டமாகும். (204)

### குடா நாட்டில் சைக்கிள் திருட்டு

குடாநாட்டில் தற்போது சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து விட்டன. குறிப்பாக யாழ். நகரில் இத்தகைய சைக்கிள் திருட்டுக்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. பொது நிகழ்ச்சிகளில் சைக்கிள் தரிப்பிடங்களில் விடப்படும் சைக்கிள்கள் மாயமாகி வருகின்றன.

நேற்று குருநகர் மவுண் கார் மேல் வீதியில் வீட்டுக்கு முன்னால் நிறுத்தப் பட்டிருந்த சைக்கிள் 10 நிமிடங்களில் மாயமாகிவிட்டது. சன நெருக்கமான இந்தப் பகுதியில்சைக்கிள்திருட்டு போனது குறித்து பலரும் ஆச்சரியம் தெரிவித்தனர். (ஒ-160)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் மேலதிக பணிப்பாளராக கடமையாற்றும் திரு.வெ.சுந்தரலிங்கம் அவர்களது அன்பு மாமியார்

## திருமதி தம்பிராஜா சிவபாக்கியம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அத்தோடு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

# அறிவித்தல்

## மானிப்பாய் கிராம உப அலுவலகம்

*ஆதனப் பெயர் மாற்றம்*
*வட்டாரம் 04, பந்திபடி ஒழுங்கை*
*ஆதன இல 12/25*

வட்டாரம் 04, பந்திபடி ஒழுங்கை, ஆதன இல 12/25 இல் அமைந்துள்ள ஆதனமானது இராமர் கிருஷ்ணகுமாரும் பெண் கஜித்தாவும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு செல்லன் பேரின்பநாயகமும் பெண் புஸ்பமலரும் என்பவர்களால் 347 - 02.06.2008 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து செல்லன் பேரின்பநாயகமும் பெண் புஸ்பமலரும் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பிகை பத்மநாதன்



கரவெட்டி கிழக்கு, சிங்கத்தின் வீட்டை பிறப்பிடமாகவும், வதிரிச் சந்தி, வதிரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பத்மநாதன் 09.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் வள்ளிப்பிள்ளை , தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா பத்மநாதனின் அன்பு மனைவியும், சிவகுருநாதன், சபாநாதன், மங்கையர்க்கரசி, பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யமுனா (பனை அபிவிருத்திச் சபை ), கெங்கா, பகீரதன் (லண்டன்), வித்தியா (டென்மார்க்), காஞ்சனா (லண்டன்), முரளீதரன் (லண்டன்), சுதர்ஜனா ஆகியோரின் பாசமிகு தாயும், புவனேசமூர்த்தி, ஸ்ரீரங்கா (பொறியியலாளர்), மொறின் (லண்டன்), ஹரிஹரன் (டென்மார்க்), சுதாகரன் (லண்டன்), திலீபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஷாலினி, பிரணவன், விஸ்ணவன், மிலானா, கிரன், அகல்யா, லாவண்யா, சகானா, தீபன், சுபஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரிச் சந்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

## நாகமுத்து இராசேந்திரம்



(ஓய்வு பெற்ற அதிகாரி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

சரசாலை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசேந்திரம் 09.11.2010 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நாகமுத்து - கதிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், திருமதி அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான க. சிறீஸ்காந்தராணி (கனடா), பிரேமராணி மற்றும் ஜமுனாராணி (இந்தியா), ஜெயராணி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரி, சுஜீப், பிரசாந் (இந்தியா), தனுஷன் (லண்டன்), ஆகியோரின் பேரனும், கனகேந்திரம் (கனடா), நாகேந்திரம், தர்மகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசரத்தினம் துரைராசா (கொலண்ட்), குணரத்தினம் (கனடா), பரமேஸ்வரி (கனடா), மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், க.நடராசா (அவுஸ்திரேலியா - முன்னாள் தலைவர் பனை அபிவிருத்திச் சபை), செல்லத்துரை, தங்கராசா, காலஞ்சென்ற க. இராசதுரை (முன்னாள் அதிபர்- யாழ். மத்திய கல்லூரி) மற்றும் இராசேந்திரம் (அதிபர் - கிளிநெச்சி, பாரதிபுரம் மகா வித்தியாலயம்), சிவராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 12.11.2010 வெள்ளிக்கிமை கனடாவில் Hilan Funeral Home இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, (13.11.2010) சனிக்கிழமை 10 மணியளவில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
தொ.பே. இல: 0772-282697
011-2625322

தகவல்:
க. ஜெயராணி (மகள்),
பனை அபிவிருத்திச் சபை.

(105837)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் அசுத்தம் பேணுவோர் விரைவில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாவர்

## எச்சரிக்கிறார் சுகாதார வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம்,நவ.11

பொதுஇடங்கள் மற்றும் வீடுகளில் நுளம்பின் பெருக்கத்தை உருவாக்கக்கூடிய குப்பைகள் அல்லது தேவையற்ற பொருள்கள் காணப்பட்டால் அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டப் பணம் அறவிடப்படும் என உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி ந.ஜெயக்குமரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;

கிராமங்கள் தோறும் நடைபெற்று வந்த இலகு வேலைத் திட்டச் சிரமதானப் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் வீதிகளிலோ அல்லது வீடுகளிலோ நுளம்பை உருவாக்கும் குப்பை கூழங்களை வெட்டிப் புதைத்து சூழலை சுத்தப்படுத்தித் துப்புரவாக வைத்துக் கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

டெங்கு நுளம்பினை அழிக்கப் பயன்படுத்தப்படும் புகையூட்டல் மருந்து அதிக விலை என்பதால் அனைத்துப் பிரதேசங்களிலும் புகையூட்டல் மருந்து தெளிக்க முடியாது.

எனவே மக்கள் தான் டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள, சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சூழல் சுத்தமற்றுக் காணப்பட்டால் சுகாதாரப் பரிசோதகர்கள், சூழல் பாதுகாப்புப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து சட்ட நடவடிக்கைகள் மூலம் தண்டப்பணம் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் அவர் கூறினார். (த-201-313-311)

# தேவாலயத்தில் பலநாள் திருட்டு; ஒருநாள் மாட்டினார் இளைஞர்

சண்டிலிப்பாய், நவ.11

'பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவது போல' தேவால யத்தில் பல நாள்களாகத் திருடி வந்த இளைஞர் ஒருவர் அங்கு மீண்டும் திருடியபோது கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண் டார். இவரைக் கைது செய்த பொலிஸார் தேவாலயத்தில் பல நாள்க ளாகத் திருடப்பட்ட பெரிய குத்துவிளக்கு உட்படப் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கைப்பற்றி உள்ளனர்.

இந்தத் துணிகரமான திருட்டு மானிப்பாய் அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில நாள்களாக பட்டப்பகலில் மக்கள் நட மாட்டம் இல் லாத நேரம் பார்த்து தேவாலயத்திற்கு வரும் பிரஸ் தாப இளைஞர் அங்குள்ள அறையில் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்த பெரிய குத்துவிளக்கு உட்பட பல பித்தளைப் பொருள்களைத் திருடி வந்துள்ளார். இதை எவரும் கவனிக்க வில்லை.

இதனால் சம்பவ தினமும் தேவாலயத்திற்கு வந்த இளை ஞர் வழமைபோல் பொருள்கள் இருக்கும் அறைக்குச் சென்று பித்தளைப் பொருள்களைத் திருடிச் சென்றபோது அங்கு நின்றவர்களிடம் மாட்டிக்கொண் டார். இது குறித்து விசாரிக்க முற்பட்டபோது அத்திருடன் பொருள்களைப் போட்டு விட் டுத் தப்பி ஓடிவிட்டான்.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய் யப் பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து உடனடியாகச் செயலில் ஈடுபட்ட பொலிஸார் திரு டனைக் கைது செய்து தேவாலயத்தில் திருடப்பட்ட அனைத்துப் பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர். (த-201-115)

# வறிய மாணவருக்குக் காலணிகள்

வலி.வடக்கு,நவ.11

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் வாழும் 200 பாடசாலை மாணவர்களுக்குக் கண்டி வணிகர் கழகத்தின் மகளிர் பிரிவினால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலணிகள் வழங்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறும் நடமாடும் சேவையின்போது குறிப்பிட்ட மாணவர்களுக்கான காலணிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்தக் காலணிகள் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்லிப்பழை, இளவாலை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கண்டியில் இருந்து வருகை தரும் வணிகர் கழக மகளிர் பிரிவு உறுப்பினர்களினால் வழங்கப்படவுள்ளன. (த-86)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# நிரந்தர கட்டடம் அமைக்க உதவக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.11

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குமாறு பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் இயங்கி வரும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கிராம அபிவிருத் திச் சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது.

சமாசத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு காணி இருந்த போதும் நிதி இல்லாததினால் கட்டடம் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் மேற்படி சங்கங்களின் வளர்ச்சியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. எனவே இப்பகுதி மக்களின் நலன்கருதி சமாசத் திற்கான கட்டடம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குமாறு சங்கத் தலை வர் நாடாளுமன்ற உறுப்பினரைக் கேட்டுள்ளார். (த-115)

# இரு உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு விரைவில் புதிய கட்டடங்கள் அமையும்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.மாவட்டத்தில் உள்ள மருதங்கேணி, நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பணிமனைகளுக்குப் புதிய கட்டடங்கள் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

உடுவில், சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கான கட்டட நிர்மாண வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

-இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலகக் கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு என மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவை மூலம் பொதுமக்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும். எதிர்காலத்தில் மக்கள் எந்தக் கஷ்டங்களையும் எதிர்கொள்ளக்கூடாது என்ற நோக்குடன் அரச உத்தியோகத்தர்கள் சேவையாற்ற வேண்டும்.

யாழ். மாவட்டத்தின் வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கென 6 மில்லியனுக்கும் அதிகமான நிதியும், குடிதண்ணீர் வழங்கல் திட்டத்துக்கென 2 ஆயிரத்து 225 மில்லியனுக்கும் அதிகமான நிதியும், வீதி அபிவிருத்திக்கென ஆயிரம் மில்லியனுக்கு அதிகமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் திருமதி சுகுணாதேவி தெய்வேந்திரம், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் த.குகநேசன், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் உரையாற்றினார்கள். (எ-14)

# அலுவலகங்களில் உயர் அதிகாரிகளால் பாலியல் தொல்லை

## பெண்களிடமிருந்து முறைப்பாடுகள் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,நவ.11

'பண்பட்ட சமுதாயத்தில் பண்பற்ற நடைமுறைகள் பின்பற்றப்படுவது வேதனைக்குரியதாகும். அதிகாரிகள் மட்டத்திலும் அங்கு கடமைபுரியும் பெண் ஊழியர்கள் அவர்களின் மேலதிகாரிகளால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர் என எழுத்து மூலமான முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

இவ்வாறான கொடுமைகளை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து எனது கடமைகளை சிறந்த முறையில் தொடர்வேன்'

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 56 அரசாங்க அதிபர்கள் கடந்த காலங்களில் கடமையாற்றி உள்ளனர். அவர்களில் பெண் அரச அதிபராக முதன் முதலாக நான் தான் பொறுப்பேற்றுள்ளேன்.

சிறுவர்களின் இன்றைய நிலை யாழ். மாவட்டத்தில் மிகவும் மோசமான நிலையில் உள்ளதை நான் அறிந்துள்ளேன்.

நான் கடமையேற்று இம்மூன்று மாதங்களில் இம் மாவட்ட திணைக்கள அதிகாரிகளுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தியிருந்தேன். இக்கலந்துரையாடலின்போது ஒரு முக்கியமான விடயத்தைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார். இம் மாவட்டத்தில் 246 சிறுவர்கள் இருதய நோய், நீரிழிவு மற்றும் புற்றுநோயால் மிகவும் கஷ்டப்படுகின்றனர் எனவும் , இவர்களின் பெற்றோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருவதால், இவர்களுக்கான சிகிச்சையை கொழும்பிலோ அல்லது இந்தியாவிலோ கொண்டு சென்று அளிக்க முடியாதுள்ளதென கவலையுடன் தெரிவித்தார்.

372 சிறுவர்கள் அவர்களின் பிறப்புச் சான்றிதழைப் பெறாமல் உள்ளனர் எனவும் எனக்கு இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. பெற்றோரின் அறியாமை மற்றும் முறை தவறிய பிறப்பே இதற்குக் காரணமாகவுள்ளன.

277 சிறுவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி கச்சான் விற்பனை, வீட்டில் தமக்கு இளையோரைப் பராமரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

பிரதேச செயலக ரீதியில் 165 சிறுவர்களுக்கு மேல் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.




வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மங்கள விளக்கேற்றுவதனையும் அருகில் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, வலி.மேற்கு சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.செல்வம் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (29)

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளில் மாணவர்கள் சாதி,சமய, பணக்கார, ஏழைப்பிள்ளைகளை வேறுபடுத்தி அவர்களை பண்பற்ற முறையில் சில பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் நடத்துவதாகக் கேள்விப்படுகின்றேன். பாடசாலை மாணவர்களுக்கு ஒரே மாதிரியான வெள்ளை நிற உடுப்பு சீருடையாக வழங்கப்படுவது எல்லாப் பிள்ளைகளும் ஒரே சமத்துவமாக நோக்குவதற்காகும் - என்றார்.

இந் நிகழ்வில் தலைமையுரை வழங்கிய பிரதேச செயலர் திருமதி தே.பாபு தனது உரையில் சிறுவர்கள் வெள்ளைக் காகிதம் போன்றவர்கள். இவ்வெள்ளைக் காகிதத்தில் நல்லதையும் எழுதலாம், கெட்டதையும் எழுதலாம். அவற்றைத் தவிர்த்து சிறுவர்களை தூயசிந்தனை உள்ளவர்களாக வளர்த்தெடுப்பது சமூகத்தில் உள்ள பெரியோர், பெற்றோர் அனைவரதும் கடமை என்றார்.

இந்நிகழ்வில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட சமூகசேவை அலுவலர், யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.மேற்குப் பிரதேச தலைவர் உட்பட பலர் உரையாற்றினர்.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமா ரைக் கௌரவித்து பிரதேச செயலாளரால் விருது வழங்கப்பட்டது. (204-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE GREAT OPORTUNITY

எதிர்கால சவால்களை உயர்ந்த நோக்குடன் எதிர்கொள்ளத் தயாராகும் இளைஞர், யுவதிகளே உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் நீங்கள் O/L, A/L சித்தி பெற்றவராயின் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எமது நிறுவனத்திற்கு முகாமைத்துவத்துக்கான ஆளணி அவசிப்படுகின்றது. கவர்ச்சியான சம்பளமும், சர்வதேச ரீதியிலான தொழில் வாய்ப்பும் கிடைக்கும்

தொடர்புகளுக்கு: 071 7494735, 021 4915550

(Mr. Udayarajan)

(105841)


# பொலிஸ் சீருடையில் மாற்றம் பொருத்தமான நிறம் தெரிவில்

கொழும்பு, நவ.11

பொலிஸார் தற்போது பாவிக்கும் காக்கிநிறச் சீருடையை மாற்றிப் புதிய வர்ணமொன்றில் அவற்றை வழங்கப் பொலிஸ் தலைமையகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் தற்சமயம் மாதிரித் துணிகள் ஆராயப்பட்டு வருவதாகப் பொலிஸ் தலைமையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள சீருடையின் மேற்சட்டை மாத்திரமே மாற்றப்படும் எனவும், ஜீன்ஸ் பழைய காக்கி நிறத்திலேயே இருக்கும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

முதலில் இளநீல வர்ணம் மேற்சட்டைக்குத் தெரிவு செய்யப்பட்டது. எனினும் பொலிஸ் பாதுகாப்பு ஊழியர்கள் அந்த நிற உடையைப் பாவிப்பதனாலும், விடுதலைப்புலிகளின் பொலிஸ் படையும் அதே நிறத்தைப் பாவித்தமையாலும் இளநீல வர்ணம் கைவிடப்பட்டது.

இதுவரை புதிய சீருடைக்குச் சரியான நிறம் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனவும், தொடர்ந்தும் மாதிரித் துணிகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டில் பொலிஸார் பயன்படுத்தும் நிறங்களும் கருத்தில் கொள்ளப்படும் எனவும் பொருத்தமான நிறம் விரைவில் முடிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1241 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 29 32 33 45 09-11-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 234,181 | 20/- | 4,683,620/- |
| 2 இலக்கங்கள் | 21,400 | 40/- | 856,000/- |
| 1 இல. + லக்கினம் | 21,169 | 60/- | 1,270,140/- |
| 2 இல. + லக்கினம் | 2,011 | 200/- | 402,200/- |
| 3 இலக்கங்கள் | 569 | 1000/- | 569,000/- |
| 3 இல. + லக்கினம் | 54 | 10,000/- | 540,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,920,960/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 637 | | 617,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 280,024 | | 9,537,960/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,045,050/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 16 26 30 39 ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 634 | 500/- | 317,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 637 | | 617,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-


# பரிசளிப்பு விழாவும் வள்ளுவர் சிலை திறப்பும்

யாழ்ப்பாணம், நவ.11

தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பும், வள்ளுவர் சிலை திறப்பு விழாவும் சாவகச்சேரி பிரதேச சபையினால் கச்சாய் பொது நூலகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் கலந்துகொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மின்விணைப்பு பணிகள் வரணியில் துரிதம்

வரணி பிரதேசத்தில் தற்சமயம் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின்கீழ் மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

தென்பகுதித் தொழிலாளர்கள் இவ்வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மிகவும் விரைவாக இந்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை மின்கம்பிகளுக்குப் பதிலாக வயர்கள் பொருத்தப்பட்ட கம்பிகளே இணைக்கப்படுகின்றன. இதன் மூலம் சட்ட விரோதமாக மின்சாரம்பெறுவது கடினம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-22)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி





நி.கம்சகன் - 175 மாவட்ட நிலை - 01

**சித்தியடைந்தோர் விவரம்**

| | | |
|---|---|---|
| நி.கம்சிகன் | 175 | மாவட்ட நிலை 01 |
| சு.சுஜித்தா | 162 | மாவட்ட நிலை 09 |
| அ.சோஜினி | 161 | மாவட்ட நிலை 13 |
| வி.மிதுசிகா | 161 | மாவட்ட நிலை 13 |
| தி.டர்மிளா | 158 | மாவட்ட நிலை 19 |
| சி.தர்சி | 154 | மாவட்ட நிலை 26 |
| த.ஜயந் அனிஸ்டன் | 153 | மாவட்ட நிலை 31 |
| வே.அபிராமி | 149 | மாவட்ட நிலை 42 |
| பு.கின்சி | 143 | மாவட்ட நிலை 65 |
| ஜி.அனுசா | 139 | மாவட்ட நிலை 83 |

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம்**

| | |
|---|---|
| ஞா.துளசிகா | 137 |
| சி.தர்சிகா | 136 |
| ர.நிலக்ஷா | 134 |
| இ.அபிவர்ணன் | 133 |
| ர.யுகாசினி | 132 |
| ர.யதுர்சிகா | 131 |
| கோ.மதுநிஷா | 130 |
| க.சுடர்நிலா | 129 |
| ஜோ.புளிசனா | 126 |
| அ.ஜெனுசானி | 126 |
| ச.லக்சிகா | 122 |
| ய.பிரபன்ஜா | 119 |
| ந.பாஸ்கரன் | 119 |
| த.கிருத்திகா | 117 |
| நே.அமலினி | 113 |
| ர.குருசாந்தினி | 111 |
| ந.யாழினி | 111 |
| ப.தயாயுதன் | 109 |
| சு.தமிழ்ச்செல்வன் | 106 |
| ஆ.கிருஷாந்தினி | 104 |
| மு.கம்சனா | 103 |
| ம.அஜித்தா | 102 |

**தரம் 1 தொடக்கம் 4 வரை கற்பித்த ஆசிரியர்கள்**

1.திருமதி க. நிர்மலாதேவி (அமரர்)
2.திருமதி க.லிங்கநாதன்
3.செல்வி மா.மாலினி
4.திருமதி ஜோ.சுதர்சினி
5.அருட்சகோதரி அ.மலர்விழி

**புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார் படுத்திய ஆசிரியர்கள்**

1.திரு செ.திலக்
2.திருமதி ச.யசோதா
3.அருட்சகோதரி சி.ஜெயசீலி

அனைத்து வழிகளிலும் மாணவர்களை ஊக்கப்படுத்திய அதிபர் திருமதி ஜெ.குலபாலசிங்கம் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிளி/புனித தி.பெ.க.பாடசாலைச் சமூகம்.

(105844)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

### முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் டிப்ளோமா (பகுதிநேர) கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவு திகதியை நீடித்தல்

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் கோரப்பட்ட மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், நுண்நிதியியல் ஆகிய டிப்ளோமாக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30.11.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது. க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்தும் பல்கலைக்கழகம் புகமுடியாத மாணவர்களின் நலன்கருதி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இம்மூன்று டிப்ளோமாக் கற்கைநெறிகளும் வார இறுதி நாள்களில் நடத்தப்படும். தொழில்புரிவோரும் இக்கற்கைநெறிக்காக விண்ணப்பிக்கலாம்.

10.11.2010 (சி/572780) பதிவாளர்



## நல்லூர் பிரதேச சபை

திருநெல்வேலிச் சந்தை, ஆடியபாதம் வீதி புதிய கடைகள்

### மீள் கேள்வி அறிவித்தல்

கடை இல.63,64

நல்லூர் பிரதேச சபையின் திருநெல்வேலிச் சந்தை ஆடியபாதம் வீதி புதிய கடைகள் இரண்டு (02) 2010ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது. இதற்கான கேள்விப் படிவத்தினை 11.11.2010ஆம் திகதி தொடக்கம் 23.11.2010 ஆம் திகதி ந.ப. 12 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் படிவங்கள் யாவும் 24.11.2010 புதன்கிழமை மு.ப. 10 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ***"செயலாளர் நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்"*** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயரும், கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இணைப்பிரதியை ***"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்."*** என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் மூன்று நாள்களுக்குள் கீ மணி, பெறுமதி சேர் வரி (VAT), NBT என்பவற்றின் முழுத் தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**குறிப்பு:**

ஆகக்குறைந்த கேள்வித் தொகைக்கு கீழ் குறிப்பிடப்படும் கேள்விகாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும். ஒருவர் எத்தனை கடைகளுக்கும் விண்ணப்பங்களை சபையில் உரிய முறையில் பெற்று விண்ணபப்பிக்கலாம். ஆனால் சித்தி பெற்ற விண்ணப்பங்களில் ஒருவருக்கு ஒரு கடை மட்டுமே வழங்கப்படும்.

தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகையுடன் 12%(VAT), 3% (NBT) செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.

நடத்தப்படவுள்ள வியாபாரத்தின் தன்மை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். தங்களினால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.

பழவகைகள், வெற்றிலை, பாக்கு மற்றும் உணவுச் சாலைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய வியாபாரங்களை இக்கடைகளில் மேற்கொள்ள முடியாது.

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை VAT/NBT தவிர |
|---|---|---|---|
| 63 | ரூபா. 1000.00 | ரூபா. 20000.00 | ரூபா. 2,500,000.00 |
| 64 | ரூபா. 1000.00 | ரூபா. 20000.00 | ரூபா. 2,500,000.00 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
10.11.2010 (சி/572775)

மே.சாந்தசீலன்
செயலாளர்.
நல்லூர் பிரதேச சபை.



## வர்த்தக நிலையத் திறப்பு விழா

இன்று (11.11.2010) வியாழக்கிழமை நன்நாளில் காலை 7.40 மணிமுதல் 9 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில், இலக்கம் 70, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில்

**"ஐங்கரன் ஓட்டோஸ்"**

(ஓட்டோ உதிரிப்பாக விற்பனை நிலையம்)

என்னும் நிறுவனம் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் மகிழ்ச்சியடைவதோடு, உங்கள் மேலான ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

உரிமையாளர்களும்,
பணியாளர்களும்.

(சி/572776)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையார்கட்டில் திருடர்கள் கைவரிசை தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,நவ.11

உடையார்கட்டுப் பிரதேசத்திலுள்ள தமது வீடுகளிலிருந்து பொருள்கள் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் இன்னமும் மக்கள் குடியமராத நிலையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். யுத்தத்தின் போது மக்கள் வீட்டிலுள்ள பொருள்களை எடுத்துச் செல்லாது இடம்பெயர்ந்திருந்தனர். தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு நடைபெற்று வருகின்றது. ஆனால் உடையார் கட்டுப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் இன்னமும் நடைபெறவில்லை.

இந்த நிலையில் உடையார் கட்டு வடக்கு, தெற்கு, சுதந்திரபுரம் இருட்டுமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 29 ஆம் திகதி முல்லைத்தீவு அரச அதிபரிடமும், பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர். இப்பகுதிக்குள் செல்லும் திருடர்கள் தமது வீடுகளிலுள்ள இரும்புடன் தொடர்புடைய பொருள்களைக் கடத்தி வந்து றெட்பானாப் பகுதியில் இரும்பு விலைக்கு விற்கின்றனர். அத்துடன் இந்தப் பகுதிகளிலிருந்து தமது பொருள்களை ஏற்றுவதற்கு அனுமதி பெற்றவர்கள் அயல் வீட்டுக்காரர்களின் பொருள்களையும் சேர்த்து ஏற்றிச் செல்வதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு இவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை றெட்பானா 12 ஆம் கட்டைப் பகுதிகளில் பெருமளவு இரும்பு மற்றும் அலுமினியப் பொருள்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (க)

## கௌரவிப்பு

கிளிநொச்சி,நவ.11

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலிருந்து இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவித்துப் பாராட்டும் நிகழ்வு நாளை நடைபெறவிருக்கின்றது.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பி.ப.2 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-405)

## 41 ஆவது ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சி,நவ.11

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படவிருக்கின்றது.

நண்பகல் 12 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இந்த விழா ஆரம்பமாகும். இதில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகவும், பாடசாலையின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் பே.அந்தோனிப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவிருக்கின்றன.

ஆர்வலர்களை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-405)

## உளவளம்.....



மனநிறைவு: ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உளவளத்துணை நிலையம் அதிபர் ந.கருணாகரனால் மங்கள விளக்கேற்றப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

## வன்னி வலம்

### கிளிநொச்சி மத்திக்கு கூட்டமைப்பு எம்.பி.நிதியுதவி

கிளிநொச்சி,நவ.11

பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு கணனி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு சிறிதரன் எம்.பி. நிதி வழங்கியுள்ளார்.

இந்த நிதியான ஒரு லட்சம் ரூபாவுக்கு கணனி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே சிறிதரன் எம்.பி. கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு பல்வேறு நிதி உதவிகளை வழங்கியுள்ளார். (க-405)

## வவுனியாவில் 100 குளங்கள் புனரமைப்பு விவசாயிகளுக்கு ஊக்குவிப்பும் வழங்கப்படும்

**வவுனியா அரச அதிபர்**

வவுனியா,நவ.11

வவுனியா மாவட்டத்தில் உள்ள 100 நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சிறுபோக பயிர்ச்செய்கைக்கேற்ற வகையில் சிறுகுளங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வவுனியா மாவட்டத்தில் இம்முறை 64 ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் பொருட்டு பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் கமக்கார அமைப்புகளுக்கு உழவியந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயிகளால் அறுவடை செய்யப்படுகின்ற நெற்களை களஞ்சியப்படுத்துவதற்கு நான்கு களஞ்சியசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

விளை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை காட்டு விலங்குகள் அழிக்காத வகையில் வனவிலங்குத் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. விவசாயிகளுக்கு இலகு கடன் அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## கிளிநொச்சியில் அமையும் ஆடைத்தொழிற்சாலையில் ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

**ஸ்ரீ.சு.க. யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் அங்கஜன்**

கிளிநொச்சி,நவ.11

கிளிநொச்சியில் அமையவுள்ள ஆடைத் தொழிற்சாலையில் ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளரான இ.அங்கஜன்.

கிளிநொச்சியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அண்மையில் அடிக்கல் நாட்டி வைத்தார். வடமாகாண அபிவிருத்திப் பணிகளுக்கு இந்த ஆடைத் தொழிற்சாலை மிகவும் முக்கிய பங்கை வகிக்கும் என்றும் அங்கஜன் கூறினார்.

இது கூறித்து அவரிடம் கேட்டபோது

இவ் ஆடைத்தொழிற்சாலையில் ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கும் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கும் வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

வட பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வடமாகாணத்தில் மேலும் பல தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காகவுமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார். ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கிளிநொச்சியில் அமையவுள்ள இந்த ஆடைத்தொழிற்சாலையைச் செயற்படுத்துவதற்கு "றை ஸ்டார் அப்பறெல்" நிறுவனத்தின் தலைவர் குமார் தேவபுர முன்வந்துள்ளார். அதேவேளை, புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இரத்மலானையிலுள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தனியார் நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. அண்மையில் இவர்களையும் சந்தித்து அமையவுள்ள ஆடைத்தொழிற்சாலையில் தொழில்வாய்ப்புக்களை பெறும் வாய்ப்புக்கள் இவர்களுக்கு உள்ளது என்றும் இ.அங்கஜன் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் மடத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு கோரிக்கை

**ஐ.தே.கட்சி எம்.பியிடம் முறையீடு**

கொழும்பு,நவ.11

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான மடத்திலிருந்தும் கோயிலுக்கு அருகிலுள்ள கடைகளிலிருந்தும் படையினரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை மீளவும் பெற்றுத்தர வேண்டும் - என்று ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் ஆலய நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்த விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. பிரஸ்தாப கோயிலுக்குச் சென்று நிர்வாகத்தினரைச் சந்தித்த போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கோயிலின் மடத்திலும் மற்றும் கோயிலுக்குச் சொந்தமான கடைகளிலும் இராணுவத்தின் 58ஆவது படையணியினர் நிலைகொண்டுள்ளனர். கோயிலின் மடத்தை அவர்கள் தங்களது சமையலறையாகப் பயன்படுத்தி வருகின்றனர். மடத்திற்கு அருகிலுள்ள 9 மலசலகூடங்களும் படையினரால் பயன்படுத்தப்படுகின்றன. ஆலய கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமையால் பக்தர்களின் நலன்கருதி இந்த இடங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்று ஆலய நிர்வாகத்தினர் எம்.பியிடம் தெரிவித்தனர்.

கடந்த ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி நாம் இந்தக் கோயிலின் கும்பாவிஷேகத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் மடத்தைப் படையினர் கையளிக்காமையினால் அதனைச் செய்யமுடியவில்லை. கும்பாபிஷேகத்திற்கு வரும் குருக்கள்மார் தங்குவதற்குக் கூட கோயிலில் இடமில்லை.

இதனையடுத்து கோயிலைச் சுற்றிப்பார்வையிட்ட எம்.பி., கோயிலுக்குச் சொந்தமான கடைகளிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றி அவற்றை கோயிலுக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆலய நிர்வாகத்தினர் எம்.பியிடம் கோரியுள்ளனர். (ஐ)

## சுதந்திரமாக உலாவரும் மாடுகள் கண்டுகொள்ளாத வவுனியா நகரசபை

வவுனியா,நவ.11

வவுனியா நகர எல்லைக்குள் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் மாடுகளால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

முக்கியமாகக் குருமன் காட்டுச் சந்தி, வவுனியா பஸ் நிலையம் ஆகிய இடங்களில் இந்த மாடுகள் சுதந்திரமாக உலாவி வருகின்றன. அத்துடன் வீதிகளுக்குக் குறுக்கே கூட்டமாகப் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதையும் காண முடிகின்றது. இதனால் வாகனங்களில் செல்வோரும், ஏனையவர்களும் இடையூறுகளைச் சந்திக்கின்றனர். அத்துடன் இந்த மாடுகளால் பெரும் சுகாதாரக் கேடுகளும் நிகழ்கின்றன.

வவுனியா நகரசபையினர் இதனைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

இந்த மாடுகளில் பெரும்பாலானவை சில நகரசபை உறுப்பினர்களுக்குச் சொந்தமானவையெனவும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் வவுனியா நகர சபையினர் இந்த மாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோள். (க-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரும் அனைத்து மக்களினதும் சுகாதார நலன் பேணப்பட வேண்டும்

## கண்காட்சி ஆரம்ப விழாவில் மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், நவ.11

தென்பகுதி உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து யாழ்.வரும் மக்களின் சுகாதார நலன்கள் பேணப்பட வேண்டும். யாழ்.மாநகரசபை எல்லைக்குள் மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் சுகாதாரச் செயற்பாடுகள் விரிவுபடுத்த வேண்டும் என யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.



யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினால் யாழ்.நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்ட சுகநல வாழ்வு கண்காட்சியை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்துப் பேசிய போதே முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாநகர சபையின் சுகாதாரப் பகுதி நகரின் அனைத்துப் பகுதிகளிலும் தனது பணியைச் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றது. தென்பகுதி மற்றும் கிழக்குப் பகுதிகளில் இருந்தும் மிகவும் கூடுதலான அளவில் மக்கள் இங்கு வந்து கொண்டிருப்பதால் எமது பிரதேசத்தின் சுகாதார சேவைகள் திருப்திகரமாகச் செயற்படுத்தப்பட வேண்டும். சுகாதாரப் பகுதி ஒவ்வொரு ஆண்டிலும் இதுபோன்ற கண்காட்சிகளை நடத்தி மக்களின் போஷாக்கு, குடும்பத்தினர் கைக்கொள்ள வேண்டிய சுகாதார பழக்கவழக்கங்கள் குறித்துத் தெளிவான விளக்கங்களையும் அறிவுறுத்தல்களையும் எடுத்துக் கூறி வருகின்றது. கண்காட்சியில் இடம்பெற்றுள்ள விடயங்கள் எமது வாழ்விற்கு இன்றியமையாதன. சுகாதாரப் பழக்கவழக்கங்களின் மூலம எதிர்காலத்தில் ஒரு திடகாத்திரம் மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும்- என்றார்.

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதி மற்றும் குடும்பநல வெளிக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து ஒழுங்கு செய்த இக்கண்காட்சி மாநகர சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.மரியதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் உரையாற்றுகையில்:

30 வருடகால யுத்தத்தால் தமது சுகவாழ்வு இழக்கப்பட்ட நிலையில் பெரும்பாலான சிறுவர்களும், பெரியவர்களும் போஷாக்கற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் தமது உணவு நிலை குறித்தும், சுகவாழ்வு குறித்தும் அறிந்து கொள்ள இக் கண்காட்சிகள் வழியமைக்கும். இதற்காகவே ஒவ்வொரு பகுதியிலும் இது போன்ற கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ , செயலாளர் இரா.இரத்தினசிங்கம், பொது சுகாதார பரிசோதகர்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர்கலந்து கொண்டனர். (த-7)

## அன்பு புனிதமானது

சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் இருப்பதுபோல மனிதத்துவமும் உண்மை, நன்னடத்தை, நல்லொழுக்கம், அன்பு என்ற உயர் குணங்களின் கலவையாகும். திசையறி கருவியின் திசை காட்டும் ஊசி எப்பொழுதும் வடதிசையையே காட்டும். அதே போல மனித அன்பு என்பது எபபொழுதும் கடவுளையே சுட்டி நிற்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவன்தான் மனிதன் என்ற தகுதி உள்ளனவன். நான், எனது என்ற குணங்களுக்கு அப்பாற்பட்ட எல்லா உயிர்களிலும் உள்ள ஒருமையை அங்கீகரித்து அதற்கேற்ப தன்னுடைய நடவடிக்கைகளை வைத்துக்கொள்ள வேண்டும். அன்பு என்ற அடிப்படைக் கொள்கையை புரிந்து கொள்வதற்கு எல்லோரிலும் உள்ள தெய்வீகத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். அன்பு புனிதமானது. விலை மதிப்பற்றது. மானிடத்தில் எங்கும் வியாபித்துள்ளது. தெய்வீகம் மனிதனுள் அன்பென்ற உருவில் உள்ளுறைவதை அங்கீகரிப்பது மனிதனின் பிரதானமான கடமையாகும். ஆனால் இந்த வழியில் மனிதன் எந்த முயற்சியும் செய்யவில்லை. கடவுள் தன்னிலிருந்து வேறாக இருப்பதாக நினைத்து மனிதன் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாகின்றான். அவர் எல்லா உயிர்களிலும் அன்பாக உள்ளுறைகிறார். இந்த உண்மையை உணர்வதற்கு ஒருவன் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும. ஆனால் அவன் தன்னை உலக சம்பந்தமான நிலையற்ற விடயங்களில் ஈடுபடுத்திக் கொள்கின்றான். தன்னிலுள்ள அன்பு தெய்வீகத்தைத் தவிர வேறல்ல என்பதை உணரத் தவறி விடுகிறான்.

அடிப்படையில் அன்பு தெய்வீகமானது. தாயில் உள்ள அன்பு வாத்சல்யம் என்றும், கணவனில் மனைவியில் உள்ள அன்பு மோகம் என்றும், நண்பனிலும் உறவினரிலும் உள்ள அன்பு அனுராகம் என்றும் பொருள்களில் உள்ள அன்பு இச்சை என்றும் அன்பு வெவ்வேறாக வரையறுக்கப்பட்டாலும் அன்பு அடிப்படையில் தெய்வீகமானது. மனிதன் இதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் இந்த அடிப்படை உண்மையை மறந்து விட்டபடியால் பௌதீக உறவில் வேற்றுமைகளை ஏற்படுத்திக் கொள்கின்றான். இதுவே மனிதனின் கஷ்டங்களுக்குப் பிரதான காரணம். இந்த வேற்றுமை உணர்வு மனிதனில் இருக்கும் வரை அவன் தெய் வீகத்தை அடைந்துகொள்ள முடியாது.



சாயி சிந்தனை

# யுத்தம் நடைபெறும்போது 'ஷொட்', 'கில்' இரண்டும் ஒரே பொருளையே குறிக்கும்

## பிரெட்ரிகா தொடர்ந்து சாட்சியம்

கொழும்பு, நவ.11

யுத்தம் நடைபெறும் காலகட்டத்தில் 'ஷொட்', 'கில்' ஆகிய இரு ஆங்கிலச் சொற்களும் ஒரே பொருளையே குறிக்கும் என வெள்ளைக்கொடி விவகார வழக்கின் முக்கிய சாட்சியாளரான 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் பிரெட்ரிகா ஜான்ஸ் நேற்று முன்தினம் மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவிடம் நடத்தப்பட்ட செவ்வி தொடர்பாக 'சண்டே லீடர்' பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள தலைப்புச் செய்தி தொடர்பில் பிரதிவாதியின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி சாட்சியை நேற்று முன்தினம் குறுக்கு விசாரணை செய்த போதே பிரெட்ரிகா ஜான்ஸ் மேற்கண்டவாறு கூறினார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மேல்நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவல, சர்பிக் ரஷிக் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதியின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி, சாட்சியாளரைக் குறுக்கு விசாரணை செய்தார். அங்கு கேட்கப்பட்ட கேள்விகளும், பதில்களும் வருமாறு:

**கேள்வி:** கடந்த சாட்சியமளிப்பின்போது விருது தொடர்பாகத் தெரிவித்திருந்தீர்கள்? **பதில்:** ஆம்.

கே:நீங்கள் அந்த விருதுக்காக விண்ணப்பித்திருந்த விண்ணப்பப் படிவத்தைப் பார்த்து சாட்சியமளித்தீர்கள். அந்த விண்ணப்பத்தில் தெளிவுபடுத்தல், மாற்றஞ்செய்தல் தொடர்பில் கேட்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பிலும் நீங்கள் கூறினீர்கள்? ப:ஆம்.

கே: உங்களது கட்டுரை தொடர்பில் சரத் பொன்சேகா அனுப்பியிருந்த தெளிவுபடுத்தல் தொடர்பில் அவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளீரா எனவும் நான் உங்களிடம் வினவினேன். அதற்கு நீங்கள் இல்லை என்று கூறினீர்கள். அதற்கு அவசியம் இருக்க வில்லை என்று தெரிவித்தீர்கள்?ப:ஆம்.

கே: அந்த விருதுக்கான விண்ணபத்தில் சரத் பொன்சேகாவினால் உங்களிடம் கோரப்பட்ட தெளிவுபடுத்தல் தொடர்பாக நீங்கள் ஏன் குறிப்பிடவில்லை? ப:கட்டுரைக்கு சவாலாக எதுவும் உள்ளதா என்பது தொடர்பிலேயே அந்த விண்ணப்பத்தில் கேட்கப்பட்டிருந்தது.

கே:- விருது தொடர்பில் ஒகஸ்ட் முதலாம் திகதியும், ஒக்ரோபர் 28ஆம் திகதியும் எழுதியுள்ளேன் என்று கூறினீர்கள். உங்களது விருது நடுவர்களால் நிராகரிக்கப்பட்டது தொடர்பில் அவர்களிடம் அதற்கான காரணத்தைக் கேட்கவில்லையா? ப:- நான் அவர்களிடம் வினவினேன். காரணம் கேட்டேன். ஆனால் அதற்கு அவர்கள் இன்று வரை பதிலளிக்கவில்லை.

கே:-விருதுக்கான விண்ணப்பத்தில் நடுவர்களின் தீர்ப்புக்கு கீழ்ப்படியுமாறு கூறப்பட்டுள்ளது. அந்த நிபந்தனையை நீங்கள் மீறியுள்ளீர்கள்?.ப: இல்லை.

கே:- சரத் பொன்சேகாவின் செவ்வியில் வெளியானவையை உறுதிப்படுத்த நான்கு பேருடன் தொடர்புகொண்டதாக என நீங்கள் கூறினீர்கள். அவர்கள் உறுதிப்படுத்தினார்களா? ப: உறுதிப்படுத்தவில்லை.

கே: அதனை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மறுத்தாரா? ப: அவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, எனது சகோதரர்கள் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள். எனினும், சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து தெரிவிப்பதாகக் கூறினார்.

கே: அதாவது எவரும் உறுதிப்படுத்தாத செய்தியையே நீங்கள் பிரசுரித்துள்ளீர்கள்? ப:உறுதிப்படுத்த முடியாமல் போயிற்று.

கே:- முன்னாள் இராணுவத் தளபதி தாம் மூன்றாம் தரப்பினரிடம் இருந்து அறியக் கிடைத்ததை உங்களுக்குத் தெரிவித்த போது அதனை உறுதிப்படுத்திக்கொள்ள நினைக்கவில்லையா? ப: முயன்றேன். ஆயினும் முன்னாள் இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.

கே: ஏதாவது ஒரு செய்தி கிடைக்கப்பெற்றால் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அதனைப் பிரசுரித்தால் இறுதியாக 'உறுதிப்படுத்தவில்லை' எனக் குறிப்பிடவேண்டும். அந்தக் கட்டுரையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளீர்களா? ப:ஆம். மேஜர்ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவ ஊடகப் பேச்சாளர் உதய நாணயக்கார ஆகியோரிடம் உறுதிப்படுத்த தொடர்புகொண்டதாகக் குறிப்பிட்டுள்ளேன்.

கே: சரத் பொன்சேகாவுடன் நடைபெற்ற செவ்வியின்போது பயன்படுத்திய குறிப்பேட்டை 2010 ஜூலை 21ஆம் திகதி [illegible] குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மூன்று தடவைகள் வாக்குமூலம் அளித்துள்ளீர்கள்? ப: ஆம்.

கே: குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீங்கள் வழங்கிய இரண்டாவது வாக்குமூலத்தில் சரத் பொன்சேகாவுடன் நடத்தப்பட்ட செவ்வியின்போது உங்களுடன் இருந்த ரகீஷ் விஜேவர்தன, துசித்குமார ஆகியோர் அறையிலிருந்து வெளியே சென்றுள்ளார்கள். ஆனால், அதனை 'அவளின் கதை' (Her Story) யில் குறிப்பிடவில்லையே?ப: இல்லை.

கே: அந்த் இருவரும் செவ்வி முடிந்தவுடன் வெளியே சென்றார்கள்? ப: இல்லை.

கே: உங்களுடன் வந்த லால் விக்ரமதுங்கவா அவர்களை வெளியே அனுப்பினார்? ப: ஆம்.

கே: அப்போது நீங்கள் அவர்கள் இருவரையும் வெளியே போகும்படி கூறவேண்டாம் எனச் சொல்லவில்லையா? ப: இல்லை.

கே: ஏன்? ப: லால் விக்ரமதுங்க, அவர்கள் இருவரையும் வெளியில் போகும்படி கூறுவார் எனத் தெரிந்திருக்கவில்லை.

கே:'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் 'கோட்டா ஓர்டர்ட் டு ஷொட்' (Gota ordered to shot) என்பதை சரத் பொன்சேகாவா கூறினார்? ப: இல்லை. அந்த செவ்வியின் சாராம்சத்தை எழுதியுள்ளேன்,

கே: 'ஷொட்', 'கில்' (Shot, Kill) இதற்கிடையில் வித்தியாசம் உள்ளதா? ப: யுத்தத்தைப் பற்றிய கட்டுரை எழுதும்போது அது சமனான விளக்கம்.

கே:அப்படியானால் 'ஷொட்', 'கில்' (Shot, Kill) இரண் டும் ஒன்றா? ப:யுத்தம் தொடர் பில் சமனான பதங்கள்.

கே:2009 டிசம்பர் 13ஆம் திகதி இதனை நீங்கள் எழுதியுள்ளீர்கள். அதாவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா, வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு ஒரு வாரகாலம் இருந்தபோது. ப: ஆம்.

கே:- ஜனாதிபதித் தேர்தல் 2010 ஜனவரி 26ஆம் திகதி நடந்தது. அதன் பின்னர் சரத் பொன்சேகா விவகாரம் தலைதூக்கியது. பின்னர் 2010 பெப்ரவரி 8 ஆம் திகதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டார். தேர்தல் முடிவடைந்த பின்னரே உங்களது காரியாலயம் பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. ப: ஆம்.

கே: சரத் பொன்சேகாவின் செவ்வி தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷவிடம் நீங்கள் 2009 டிசம்பர் 12ஆம் திகதியே தொடர்பு கொண்டு வினவியுள்ளீர்கள். அதற்குக் காரணம் சொன்னீர்கள். அந்தச் செய்தியை கோத்தபய ராஜபக்ஷவுக்கு முன்னதாகத் தெரிவித்தால் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு முன்பு போல தாக்குதல் நடத்துவர் என அச்சமடைந்ததாகக் கூறினீர்கள். ப: அந்த தாக்குதல் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷவினால் அல்ல. அரசதரப்பிலிருந்து.

கே:பாதுகாப்புச் செயலாளருக்கு அவ்வாறு குற்றம் சுமத்தவது சாதாரண விடயம். ஆனால், முன்பு கூறியிருந்தீர்கள், அந்தச் செய்தியை முன்கூட்டியே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷவுக்கு அறிவித் தால் தாக்குதல் நடத்துவார் என அச்சம் கொண்டதாகத் தெரிவித்தீர்கள்?.ப: நான் எப்போதும் கூறவில்லை. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ தாக்குதல் நடத்துவார் என்று.

(இதனையடுத்து வழக்கு விசாரணை நேற்று முற்பகல் 11 மணிக்குஒத்திவைக்கப்பட்டது.)(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரத்பொன்சேகாவின் விவகாரம் தொடர்பாக ஆராய

# அரச மற்றும் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சுயாதீன குழு அவசியம்; ரணில் சபையில் கோரிக்கை

கொழும்பு, நவ.11

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பாகவும், அவரது எம்.பி. பதவி வெற்றிடமாகியமை தொடர்பாகவும் ஆராய்ந்து ஒரு முடிவை அறிவிப்பதற்காக அரச தரப்பில் இரண்டு பிரதிநிதிகளையும், எதிர்க்கட்சிகளில் இருந்து இரண்டு பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய சுயாதீன குழுஒன்றுஅமைக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அவசரகாலச் சட்டத்தை மீண்டும் மீண்டும் நிறைவேற்ற வேண்டிய தேவை இனியும் இல்லை. மக்களின் உரிமைகளை நசுக்குவதற்காகவே இச்சட்டம் இவ்வாறு நீடிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றம் இன்னும் முழுமையடையவில்லை. மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. மீள்குடியேற்ற நடவடிக்கையின்போது அம்மக்களின் பிரதிநிதிகள் உள்வாங்கப்படவில்லை.

சரத் பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. அவரது நிலை தொடர்பாகத் தனது தீர்ப்பை வழங்குவதாக சபாநாயகர் செப்ரெம்பர் மாதம் கூறினார். ஆனால், இன்னும் தீர்ப்பைக் கூறவில்லை.

பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக அவர் இராணுவத்தில் ஒருபோதும் பணி புரியாதவர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பொன்சேகா விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பை வழங்க எதிர்க்கட்சியில் இருந்து இருவரும், அரச தரப்பில் இருந்து இருவரும் உள்ளடக்கப்பட்ட சுயாதீன குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். - என்றார்.

(சி)

# இலவச மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், நவ. 11

சாவகச்சேரி, சங்கானை லயன்ஸ் கழகங்கள் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானையில் நீரிழிவு நோயிற்கான இலவச சிகிச்சையை நடத்தி மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கியுள்ளன.

இந்த மருத்துவ முகாமில் 180 பேர் இலவச மூக்குக் கண்ணாடிகளையும், 300 இற்கும் மேற்பட்டோர் நீரிழிவு நோய்க்கான பரிசோதனை களையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஆளுநர் கலந்து கொண்டு உரையாற்றுகையில், கண்நோய் சம்பந்தமான சிகிச்சை பெறுவதற்கு கண்டி, கொழும்பு மாவட்டங்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பலர் செல்கின்றனர். இதற்காக 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை செலவுகள் ஏற்படுகின்றன. கண் சிகிச்சையைப் பெற விரும்புவோர் அந்தப் பகுதிகளில் உள்ள லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொண்டு சிகிச்சையைமேற்கொள்வதற்கு மூவாயிரம் ரூபா வை பெறமுடியும்.

இந்த நிகழ்வில் நீரிழிவு நோய்க்கான சிகிச்சையை டாக்டர் மைத்திரி பெரேராவும், கண் பரிசோதனையை டாக்டர் சுலாரி காப்ரலும் வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் உதவி ஆளுநர் எஸ்.எஸ். தங்கராசா, சங்கானை லயன்ஸ் கழகத் தலைவர் லயன். ஆ.குணசேகரம், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(204-29)




சங்கானை, சாவகச்சேரி லயன்ஸ் கழகங்கள் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானை பஸ் நிலைய முன்றிலில் இலவச மருத்துவ சேவையை நடத்திய போது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் ஜெயவத்சலம், லயன்ஸ் டாக்டர் மைத்திரி பெரேரா, சங்கானை லயஸ் கழகத் தலைவர் ஆ.குணசேகரம் மற்றும் சங்கானை லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (29)

# அமைச்சர் திஸ்ஸ விதாரண கைதடிப் பகுதி மின்னிணைப்புக்கு ரூ. 2 லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி, நவ. 11

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கைதடி இராசபுரி கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டநிதியில் இருந்து 2லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

யாழ்.மாவட்ட கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தென்மராட்சி பிர தேசத்தில் மூன்று வேலைத் திட்டங்களை மேற்கொள்ள 7 லட் சத்து 50 ஆயிரம் ரூபாவை பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதியில்ஒதுக்கீடுசெய்துள்ளார்.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை பெற்றோர் தங்கும் மண்டபத்திற்கு கூரை வேலை மேற்கொள்ள 3 லட்சத்து 50 ஆயிம் ரூபாவும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உள்ளகத் தொலைத் தொடர்பு வசதிகளை மேற்கொள்ள இரண்டு லட்சம் ரூபாவும் கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு புகைப் படப் பிரதி இயந்திரம் கொள்வனவு செய்ய ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யபபட்டுள்ளது.

(ஒ-207)

# பொன்சேகா நீதிமன்றம் வரும்வேளை பாதுகாப்பைப் பலப்படுத்த உத்தரவு

கொழும்பு, நவ.11

சரத்பொன்சேகா தொடர்பான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது நீதிமன்றப் பாதுகாப்பை பலப்படுத்துமாறு மேல் நீதிமன்ற நீதியரசர் தீபாலி விஜேசுந்தர நேற்று முன்தினம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

வெள்ளைக்கொடி தொடர்பான வழக்கு மேல்நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி.வராவல, சர்பிக் ரஸீக் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் பதினொராவது நாளாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதி தரப்புச் சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி மன்றில் எழுந்து வெள்ளைக்கொடி வழக்கு விசாரணை மற்றும் சரத் பொன்சேகா தொடர்பான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படும்போது நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

நீதிமன்ற வளாகத்தில் சந்தேகத்திற்கிடமான சிலர் நடமாடுகின்றனர் எனவும் அதனால் வழக்கு விசாரணைக்கு வருகைதரும் சாட்சிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருப்பதாகவும் மன்றில் சுட்டிக்காட்டி இவ்விடயத்தை நீதியரசரின் கவனத்துக்கு கொண்டு வந்தார் லத்துவஹெட்டி. இதனைப் பரிசீலித்த மேல்நீதி மன்ற நீதியரசர் தீபாலி விஜேசுந்தர, பொலிஸ் உயர் அதிகாரியை மன்றிற்கு அழைப்பித்து நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும்படி உத்தரவு பிறப்பித்தார்.

(உ-சி)

# இலங்கையில் பன்னிருவரில் ஒருவர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்

கொழும்பு, நவ. 11

சர்வதேச தொடர்பாடல் கழகத்தின் தரவுகளின் படி ஜூன் 2010 வரை இலங்கையில் 1.77 மில்லியன் மக்கள் அதாவது பன்னிருவரில் ஒருவர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் இருபதில் ஒருவர் அல்லது 1.16 மில்லியன் எனக் கணிப்பிடப்பட்ட இந்த எண்ணிக்கை இவ் வருடத்தில் மேலும் அதிகரித்துள்ளது.

அபிவிருத்திருத்தியடைந்து வரும் நாடுகளின் சராசரி விகிதாசாரம் 2010 இல் 21 வீதமாகவும், உலகளாவிய ரீதியில் 30 வீதமாகவும் உள்ள போது இலங்கையின் சராசரி விகிதம் 8.3 ஆகும். ஒப்பீட்டளவில் இது குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்ட போதும் ஆபிரிக்காவின் 9.6 வீதத்துடன் ஒப்பிடும் போது இலங்கை மக்களின் 8.3 வீதப் பாவனை அதனை அண்மித்ததாகக் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டில் வெளியான சர்வதேச தொடர்பாடல் கழகத்தின் (ITU) 2008 ஆண்டுத் தரவுகளின்படி இலங்கையில் 10 வீதமானோர் வசம் கணினி சொந்தப் பாவனையில் உள்ளதெனவும் 3 வீதத்திற்குச் சற்று அதிகமானோர் ஏதாவது ஓர் வகையில் கணினித் தொடுப்பைப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் 70 % வீதமான கைத்தெலைபேசி மொபைல்கள் பாவனையில் உள்ள தெனவும் இதில் 6 வீதம் மிகத் தெளிவான இணைப்புக்களைக் கொண்டுள்ளதாகவும், அடிப்படைக் கணினி இணையத் தொடுப்புக்களிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் இணையத் தளப் பாவனையாளர்கள் 'பேஸ்புக்' மூலம் வியப்பூட்டத்தக்கவாறு எண்ணிக்கையில் அதிகரித்து வருவதும் கடந்த சில மாதங்களில்மாத்திரம் 'பேஸ்புக்' பாவனை 300 மில்லியன் அங்கத்தவர்களில் இருந்து 500 மில்லியனுக்கு அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அங்கத்தினர் மாத்திரம் மார்ச் 2010 இல் 500,000 ஆக இருந்து ஓகஸ்ட் 2010 இறுதியில் 665,940 ஆகி ஒக்ரோபர் 2010 இல் 719, 420 ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி 'பேஸ்புக்' முப்பதில் ஒருவர் அங்கத்தினராய் உள்ளனர் என்பதை அறிக்கை கள் மூலம் அறிய முடிகின்றது. (ஒ-ரி)

## சேவைக்கு விருது.....



கௌரவம்: அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழா கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ம.வேதநாதன், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் சைவசித்தாந்தப் பணிகளைப் பாராட்டி இந்திய திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குரு மகா சந்நிதானம் விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம்.

## நாடு முழுவதும் ஒரே நாளில்

# 16 சிறைச்சாலைகளில் நடந்த தேடுதலில் 56 'செல்போன்'கள், 'சார்ஜர்'கள் மீட்பு

நாடு முழுவதும் உள்ள 16 சிறைச்சாலைகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது கைதிகளிடமிருந்து 56 செல்போன்களும் 55 சிம் கார்ட்டுகளும் 30 சார்ஜர்களும் 27 பற்றரிகளும் மீட்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன்போதைப்பொருளென சந்தேகப்படும் ஆறு பைக்கற்றுகளும் 200 கிராம் ஹெரோயினும் 5013 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஜெனரல் வீ.ஆர்.சில்வா தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் 16 செல்போன்களும் 15 சார்ஜர்களும் 12 பற்றரிகளும் 17 சிம் கார்ட்டுக்களும் 200 கிராம் போதைப் பொருளும் 2813 ரூபா பணமும் பெண் கைதிகளின் பிரிவில் ஒரு செல்போனும் பத்து சிம் கார்ட்டுகளும் பற்றரிகளும் 2,200 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன.

களுத்துறை சிறைச்சாலையில் 7 செல்போன்கள், 15 சிம் கார்ட்டுகள், 06 ஹெரோயின் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன.

அனுராதபுரத்தில் 14 செல்போன்கள் மட்டக்களப்பில் 2 செல்போன்கள், 2சிம் கார்ட்டுகள், 4 சார்ஜர்கள் மஹர சிறையில் 2 சிம் கார்ட்டுக்கள், 2 சார்ஜர்கள் இரண்டு போதைப் பொருள் பைக்கற்றுக்கள் கைப்பற்றபட்டன.

(ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் மாத நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
செல்வி புஷ்பலதா குமாரவேலு அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
யா/சுந்தரமூர்த்தி வித்தியாலயம், காரைநகர்.
(105836)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 28.12.1935
உதிர்வு: 12.10.2010

அமரர்
**Dr.இலட்சுமி மகாலிங்கம்**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியில் வசித்தவருமான திருமதி Dr.இலட்சுமி மகாலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளின்போது நேரில் வருகை தந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உடனிருந்து உதவிபுரிந்தோருக்கும் இன்னும் பற்பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

40/2, கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (105810) **குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணின் மடியில்: 07.06.1925
ஆண்டவன் அடியில்: 12.10.2010

**திருமதி பெரியதம்பி சிவக்கொழுந்து**

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட ஓடக்கரை சனசமூக நிலையத்தினருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த *12.10.2010* அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று *(11.11.2010)* வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

**அழைப்புக் கிடைக்காதோர் இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.**

கல்லூரி வீதி, ஓடக்கரை, பருத்தித்துறை. (சி-572738) ப.பத்மாவதி (மகள்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01.12.1952
மறைவு : 24.10.2009

திதி: சஷ்டி
11.11.2010

**அமரர் செல்லத்தம்பி சிவஞானம்**
(ஞானி)

வியாழன் அன்று...!
எம் அருமை அப்பாவே
ஓராண்டென்ன
ஆயிரம் ஆண்டுகள் தான்
உருண்டாலும் உங்களது
நினைவுகள் எங்களை
என்றும் விட்டு அகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

'சிவதேவி வாசா'
பெருங்குளம் வீதி,
சங்கத்தானை.
(105711)

**வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில்**

# அரசு நழுவல் போக்குடன் செயற்படுகிறது குற்றம் சாட்டுகிறார் ஜே.வி.பி. எம்.பி.

கொழும்பு, நவ. 11

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கைப் பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், துன்புறுத்தல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசிற்கு உள்ளது. இருந்த போதிலும், அந்தப் பொறுப்பிலிருந்து அரசு நழுவுவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ''வெளிநாட்டிலுள்ள நாங்கள்'' சங்கத்தின் தலைவருமான அஜித் குமார குற்றஞ் சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் அங்குமேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைப் பணியாளர்கள் சுமார் 15 லட்சம் பேர் வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர். நாட்டின் மொத்த வருமானத்தில் இப்பணியாளர்களும் பெருமளவில் பங்குகொள்கின்றனர். இந்த நிலையில், அவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பது அரசின் பிரதான பொறுப்பாகும்.

எனினும், அதனுடன் தொடர்புடைய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமோ, வெளிவிவகார அமைச்சோ அல்லது வேறு அரச அமைப்புகளோ இது குறித்துக் கவனம் செலுத்துவது இல்லை. கடந்த சில தினங்களுக்கு முன்னர் உடம்பில் ஆணிகளுடன் சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பிய ஆரியவதி போன்று பலர் சவூதியில் உள்ளனர். அத்துடன் ரிசானா விவகாரம் தொடர்பிலும் அரசு உரிய கவனம் செலுத்துவது இல்லை.

அமைச்சுகளுடன் உறவாடும் சிலர் காரணமாக இன்று நாட்டில் பல சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் இயங்குகின்றன. இவை அனைத்தும் அரசு அறிந்து வைத்திருந்தும் ஒன்றுமே செய்யாது மௌனம் காக்கின்றது. மேலும் மத்திய கிழக்குக் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களும் இது தொடர்பாக கவனம் செலுத்துவது குறைவடைந்துள்ளது. இலங்கைத் தூதரகங் களின் ஊடாக அங்கு அமைக்கப்பட்டுள்ள 'சிலா' என்ற நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இலங்கைப் பணிப்பெண்கள் பல சந்தர்ப்பங்களில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எனவே, அரசு இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## 31 ஆம் நாள் நினைவு அலைகள்



*தாய் மகிழ: 11.07.1929*
*சேய்கள் நெகிழ: 12.10.2010*

அமரர்
**இராசு காசுபதி**

நெஞ்சில் ஓர் இடி நேற்று விழுந்தது - அம்மா
நெஞ்சைப் பிசைந்து நெருடி நின்றது- அம்மா
பந்த பாசங்கள் வந்து கூடவே- அம்மா
வெந்த புண்ணில் ஓர் வேல் பாய்ந்தது - அம்மா
நாலு திங்கள் ஓடி மறைந்தனவோ
நாங்கள் உம்மை என்றும் மறவோம்
நின் ஆத்மா சாந்திபெற எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

பழம் றோட், வண்ணை வட மேற்கு,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
(105827)

## காரைநகர் பிரதேச சபை
## 01.01.2011 முதல் 31.12.2011 வரை
## குத்தகைகளுக்கான கேள்வி அறிவித்தல்

*01. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி:*
*26.11.2010 நண்பகல் 12.00 மணி*
*02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:*
*30.11.2010 முற்பகல் 11.00 மணி*
*03. கேள்வி திறக்கப்படும் திகதி: 30.11.2010 நண்பகல் 12.00 மணி.*

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01. | காரைநகர் ஆலடி மீன்சந்தை | 100000.00 | 1500.00 | 1000.00 |
| 02. | காரைநகர் வலந்தலை மீன்சந்தை | 50000.00 | 1000.00 | 1000.00 |

**குறிப்பு:**

★ கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்குக் காலத்துக்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரிகளை {பெறுமதி சேர்வரி (12%), நாட்டைக்கட்டியெழுப்பும் வரி (3%)} மேலதிகமாகச் செலுத்த வேண்டும்.

★ கேள்விப்பத்திரங்களைக் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையினையும், அதன் நிழற் படப்பிரதியினையும் கொண்டு வரவேண்டும்.

★ கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு மூலப்பிரதியினை செயலாளர், பிரதேச சபை, காரைநகர் என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாம்பிரதியினை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

★ கேள்வியில் சித்திபெறுவோர் கேள்வித்தொகையின் 1/3 பங்கை 08.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ளவேண்டும். மிகுதித்தொகையின் 1/8 பங்கை 2011 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும்.

★ சந்தைக்குத்தகை எடுப்பவர்கள் மீன் விற்பனை விலையில் 5% அறவிடலாம். மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடலாகாது.

★ போதிய காரணங்களினால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

★ மேலதிக விவரங்களை அலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

காரைநகர் பிரதேச சபை,
காரைநகர். 11.11.2010 (சி/572760)

**இரா.லோகநாதன்,**
செயலாளர், பிரதேச சபை, காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்துக்கும் மக்களுக்கும் இடையே பெரும் வெளியாக அவசரகாலச் சட்டம்

## சரவணபவன் எம்.பி. நாடாளுமன்றில் உரை

கொழும்பு, நவ.11

சுதந்திரத்துக்கும் மக்களுக்கும் இடையில் பெரும் வெளியை ஏற்படுத்துகிறது அவசரகாலச் சட்டம் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

''தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்குவதற்கு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்ட போதெல்லாம் அதற்கு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினார்கள். ஆனால் இன்று அதே சட்டத்தால் சிங்கள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எந்த அநியாயத்திற்குத் துணை போனீர்களோ இன்று அதே அநியாயம் உங்களையும் தாக்குகிறது. இப்போதாவது உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்'' என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சுட்டிக் காட்டினார்.

அவசர காலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்றது.

அதில் உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கௌரவ சபாநாயகர் அவர்களே!

உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான மாக்ஸிம் கோர்க்கி ஒருமுறை கப்பலில் அமெரிக்கா நோக்கிப் பயணம் செய்தார். கப்பல் துறைமுகத்தை நெருங்கிய வேளையில் ஓர் அமெரிக்கர் கரையில் தெரிந்த சுதந்திரச் சிலையைச் சுட்டிக்காட்டி ''எமது சுதந்திரச் சிலை எவ்வளவு பிரமாண்டமானது பார்த்தீர்களா?'' என்றாராம். அதற்கு ஒரு மெல்லிய சிரிப்புடன் கோர்க்கி ''சிலை பிரமாண்டமானதுதான்.

ஆனால் அடித் தளம் மிகவும் சிறியது'' எனப் பதில ளித்தாராம். அதாவது அமெரிக் காவின் சுதந்திரம் பிரமாண்டமா னதாகக் தோற்றமளித்த போதி லும் அதன் அடிப்படை குறு கிய தொகையினருக்கே கிடைக்கிறது என்பதை அவர் கிண்டலாகச் சுட்டிக்காட்டினார்.

இதே நிலைமைதான் எமது தாய் நாட்டிலும் என்பதை நான் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இன்று ஜனாதிபதியாலும் ஏனைய பல அமைச்சர்களாலும் ''போர் முடிந்த பின்பு நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின் றோம்''- என்று கூறப்படுகிறது.

ஆனால் இன்றுவரை இந்தச் சுதந்திரம் இந்நாட்டின் பெரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லிம்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

சுதந்திரத்துக்கும் எமக்குமிடையேயான நெருங்கமுடியாத ஒரு பெருவெளியை ஏற்படுத்துவதில் அவசரகாலச் சட்டத்திற்கு பெரும் பங்கு உண்டு என்பதை எவரும் மறந்துவிடமுடியாது. நடைமுறையில் இச்சட்டம் ஒரு குறுகிய வட்டத்தினரின் அதிகார விருப்புகளுக்கு இசைவாக இந்நாட்டின் சுதந்திரத்தை குறுக்கி விட்டது என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனை நான் இங்கு ஒரு தேசிய அக்கறையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகள், உழைக்கும் மக்களின் நியாயமான கோரிக்கைகள், ஊடகச் சுதந்திரம் என்பனவற்றுக்குப் பங்கம் ஏற்படும் போதெல்லாம், எதிர்ப்புணர்வுகள் மேலெழும் போதெல்லாம் இச்சட்டத்தைக் கொண்டு அவை கர்ணகடூரமான முறையில் அடக் கப்படுகின்றன.

இச்சட்டம் தமிழ்மக்களுக்கு எதிராக மட்டுமன்றி சிங்களப் பொதுமக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் எதிராக ஏவிவிடப்படுகிறது. சிங்கள நாடாளுமன்றஉறுப்பினர்கள் இந்தச்சட்ட நீடிப்பை ஆதரித்து வழங்கும் வாக்கு அவர்களைத் தெரிவு செய்த சிங்கள மக்களுக்கு எதிரான வாக்குகள் என்பது மறுக்கப்பட முடியாத ஓர் உண்மையாகும்.

ஆனால் சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் கூடக் கைதுசெய்யப்படுகிறார்கள். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் போன்ற ஜனநாயக வழியிலான போராட்டங்களை நடத்துபவர்கள் கூடச் சிறையில்அடைக்கப்படுகின்றனர். அதாவது ஜனநாயக வழியில் கூட மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாதவாறு இச்சட்டம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது.

இச்சட்டத்தின் துணை கொண்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்; ஏராளமானோர் காணாமற்போக வைக்கப்பட்டனர்; ஏராளமான தமிழ்ப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்; எந்த ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்புமின்றிப் பல தமிழ் மக்கள் சிறையில் வாடுகின்றனர்.

அப்போதெல்லாம் இச்சட்டத்திற்கு நீங்கள் ஆதரவு கொடுத்தீர்கள். அதாவது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீங்களும் துணை போனீர்கள்.

இன்று அதே சட்டம் உங்கள் ஜனநாயக உரிமைகளையும் மறுக்கிறது. உங்களைக் கைது செய்கிறது; உங்களைச் சிறைகளில் தள்ளுகிறது.

எந்த அநியாயத் திற்குத் துணைபோனீர்களோ அந்த அநியாயம் இன்று உங் கள் மேலேயே பாய்கிறது.

நாங்கள் உங்களிடம் கேட்பதெல்லாம் சிங்கள மக்கள் மேல் இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல்கொடுப்பதைப் போன்று தமிழ் மக்கள் மேல் தொடுக்கப்படும் அநீதிகளுக்கும் எதிராகவும் குரல் கொடுங்கள். சிங்களவர் மட்டுமல்ல தமிழர், முஸ்லிம்கள் அனைவருமே இந்நாட்டு மக்கள் என்பதை நடை முறையில் ஏற்றுக்கொள்ளுங்கள்.

அண்மையில் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கௌரவ அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அவர்கள் இந்த நாட்டில் எந்த ஓர் இனத்துக்கும் தனித்துவமான பிரதேசங்கள் இல்லையெனவும் எவரும் எங்கும் குடியேறி வாழமுடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

எவரும் எங்கும் குடியேறி வாழ்வதை எவருமே ஆட்சேபிப்பதில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் சில தேவைகளின் அடிப்படையில் மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு வேறு பிரதேசங்களில் குடியேறி வாழ்வது தவிர்க்க முடியாதது.

ஆனால் பெரும் தொகையான மக்களைத் திட் டமிட்டு குடியேற்றுவதன் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் இந்நாட்டின தொன்மை வாய்ந்த தேசிய இனங்கள். ஒவ்வொரு இனமும் தங்களுக்கென தனித்துவமான கலாசார மரபுகளைக் கொண்டுள்ளன.

அமெரிக்க நாட்டின் சுதேசிகளான சிறப்புவாய்ந்த நாகரிகத்தைக் கொண்டிருந்த இன்கா, மாயா இன மக்கள் ஐரோப்பியர்களின் குடியேற்றங்களால் அழிக்கப்பட்டனர். அந்த இனங்கள் வாழ்ந்த சுவடே இல்லாமல் போய்விட்டது. இன்று முழு அமெரிக்காவும் ஐரோப்பியக் குடியேறிகளின் நாடாகி விட்டது.

இப்படி ஒரு நிலைமை ஏற்படுவதை எந்த ஒரு தமிழனும் விரும்பமாட்டான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறைகளே ஓர் ஆயுதப் போராட்டத்துக்கு வழிகோலின.

இன்று ஆயு தப் போராட்டம் பெரும் பேரழிவுகளின் பின்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது. ஆனால் ஆயுதப்போராட்டத்துக்கு அடிப்படைக் காரணமாக இருந்த ஒடுக்கு முறைகள் கைவிடப்படவில்லை.

போரில் பட்ட வடுக்கள்இன்னும் ஆறாத நிலையில் நாம் மீண்டும் மீண்டும் காயப்படுத்தப்படுகிறோம். இது இனங்களுக்கிடையேயான நிரந்தர அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதைத் தடுத்துவிடும் என்பதை நீங்கள்புரிந்துகொள்ள வேண்டும்.

நிர்வாக சேவை என்பது மக்களுக்கும்அரசுக்கும்இடையேயான ஓர் உறவுப் பாலம் என்பதை நீங்கள் அறிவீர்கள். மக்களின் நாளாந்த தேவைகளை அச்சேவையே நேரடியாக நிர்வாகம் செய்கிறது.

ஆனால் இவ் வருடமும், கடந்த வருடமும் நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் ஒரு தமிழர் கூடத் தெரிவு செய்யப்பட வில்லை. எதிர்காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்கள அதிகாரிகளே நிர்வகிக்கும் நிலை தோன்றும்.

அதாவது சிங்களவர் ஆளும் இன மாகவும் தமிழர்கள் ஆளப்படும் இனமாகவும் மாறும் ஒரு துர திஷ்டவசமான நிலைமை உருவாகும். இது இனங்களுக்கி டையிலான ஐக்கியத்தையும் நல்லிணக் கத்தையும் கட்டி வளர்க்காது. அதற்கு எதிரானது என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் இன மேலாதிக்க சிந்தனையை வளர்த்து விடுவதன் மூலம் இனவாதத்தை மக்கள் மயப்படுத்தும் ஒரு திட்டமிட்ட சதி மேற்கொள்ளப்படுகிறதா என எண்ணத் தோன்றுகிறது.

ஓர் இனக்கலவரம் மூலம் இனப் பிரச்சினைத் தீர்வுமுயற்சிகளைத் திசை திருப்பவும் தடுக்கவுமான ஒரு சூழலை ஏற்படுத் தும் முயற்சியாகவும் இது இருக் கலாம்.

சுற்றுலாப் பயணிகளாக வந்த ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தமிழ் மக்கள் புனிதமான ஆலயமாகக் கருதும் யாழ்.பொது நூல்நிலையத்துக்குள் அத்து மீறிப் புகுந்து புத்தகங்களை எடுத்துத் தரையில் வீசிப் பெரும் அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர்.

அதேபோன்று தமிழ் மக்களால் ஈழத்துக் காந்தி எனக் கொண்டாடப்படும் தந்தை



செல்வாவின் தூபி அமைந்துள்ள வளாகத்துக்குள் புகுந்த சிலர் அங்கு பெரும் சேதங்களை விளைவித்தனர்.

இச்சம்பவம் தமிழ்மக்களின் மனங்களைக் காயப்படுத்தும், அவர்களை உணர்ச்சிவசப்படுத்தும் நடவடிக்கைகளாகும். இவை பொலிஸார் முன்னிலையிலும் ஆயுதப்படையினர் முன்னிலையிலுமே இடம்பெற்றன. இதற்காக யாரும் தண்டிக்கப்படவில்லை.

நாம் இச்சந்தர்ப்பங்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேலும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் என இச்சபையைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவசரகாலச் சட்டம் இன்று வரை தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறையை நிலை நிறுத்தவும் இனங்களுக்கிடையேயான கசப்புணர்வை வளர்க்கவும் ஜனநாயகப் பாரம்பரியங்களை காலில் போட்டு மிதிக்கவுமே பயன்பட்டுள்ளது. தமிழ் மக்களை நோக்கி ஏவிவிடப்பட்ட இச்சட்டம் இப்போ சிங்கள மக்களையும் நோக்கித் திருப்பப்பட்டுவிட்டது.

எனவே நீங்கள் அனைவரும் இச்சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்துத் தோற்கடிப்பதன் மூலம் இந்நாட்டின் ஜனநாயக மரபுகளுக்கு ஏற்பட்ட கறையைத் துடைப்பீர்களெனஎதிர்பார்க்கிறேன்.

# நல்லிணக்க ஆணைக்குழு முன்னால் யாழ். அரச அதிபர் கூறியவை பொய்

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 11

யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகப் பொய்ச் சாட்சியம் அளித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முல்லைத் தீவை விட்டு வெளியேறிய இமெல்டாவுக்கு அதன் பின்னர் வன்னியில் நடந்த சம்பவங்கள் எப்படித் தெரியும்? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்த காலத்தில் வன்னியில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்துள்ளார். அவர் தெரிவித்த விடயங்கள் அனைத்தும் பொய். புலிகள் யுத்த காலத்தின்போது மக்களை கேடயங்களாகப் பயன்படுத்தினர் என்று சுகுமார் ஆணைக்குழு முன்பாகக் கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முல்லைத்தீவை விட்டு வெளியேறிய இமெல்டாவுக்கு அங்கு நடந்த சம்பவங்கள் எப்படித் தெரியும்?

யாழ்ப்பாணத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயம் உள்ளது என்றும் இப்போது அங்கு மக்களை மீள்குடியேற்ற முடியாது என்றும் அமைச்சர்கள் கூறுகின்றனர். ஆனால், அங்கு பாதுகாப்பு வலயமே கிடையாது என்று இமெல்டா கூறுகின்றார். இவ்வாறு பொய் கூறும் அரச அதிகாரிகளால்தான் எமது மக்கள் துன்பப்படுகின்றனர்.

யாரைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் இவ்வாறு கூறுகின்றார்? - இப்படி அவர் கேள்வி எழுப்பினார். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் விமர்சனம் செய்யலாம். மனைவி வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சில விடயங்கள் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது கடைசிநேரத்தில் கலைந்து போகலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். திடீர் பணவரவுகளைப் பெறலாம்.



**இடபம்:**
போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். நீங்கள் நல்லவர் போல நினைத்த ஒருவர் விரோதமாகச் செயற்படலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவேண்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகித் தொந்தரவு கொடுக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.



**மிதுனம்:**
குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும். வெறுத்து ஒதுக்கிய சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். முக்கியமான பிரச்சினை ஒன்றில் உருவாகிய மனக்குழப்பம் தீர்விற்கு வரும். எதிர்பாராத பணவரவுகள் உண்டு. நண்பர்கள் சந்திப்பால் உற்சாகம் பெறுவீர்கள். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.



**கடகம்:**
அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். பல நாள்களாக எதிர்பார்த்த முக்கிய தகவல் ஒன்று வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களுடன் சில விடயங்களைப் பற்றிப் பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். உறவினர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். அரசு காரியங்களில் இழுபறி ஏற்படலாம்.



**சிங்கம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர்ப் போக்குவரத்துகளால் ஆதாயம் பெறலாம். உறவினர்கள் சிலர் விடயத்தில் பரிவுடன் நடந்து கொள்வீர்கள். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களைச் எதிர்கொள்ளலாம். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வீர்கள்.



**கன்னி:**
மாமன், மைத்துனர்கள் வழியில் மகிழ்ச்சியான செய்திகளைக் கேட்கலாம். பெற்றோர் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். வாகனங்களை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகள் மேன்மைக்காக நல்ல காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள்.



**துலாம்:**
பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கௌரவம், மரியாதையை மேம்படுத்தும் வகையில் நடந்து கொள்வீர்கள். வெளியூர்களில் இருக்கும் உறவினர்கள் சிலரை தொடர்பு கொண்டு முக்கிய விடயங்கள் குறித்துப் பேசலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.



**விருச்சிகம்:**
குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் அதிக ஆதாயம் கிடைக்கலாம். கைநழுவிப் போனதாக நினைத்த காரியம் ஒன்று மீண்டும் கைகூடலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டு. சில பொருள்களை எங்காவது வைத்து விட்டு தேடலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.



**தனுசு:**
தன்னம்பிக்கை, தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தைச் சிலர் உங்களின் மீது காட்டலாம். வேண்டா வெறுப்பாகச் சிலருக்கு உதவி செய்வீர்கள். விமர்சன, பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள்.



**மகரம்:**
தொலைபேசி வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். பணவரவுகளை எதிர்பார்த்துச் செலவுகளைச் செய்வீர்கள். வேண்டாத சில வேலைகளைச் செய்து குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாகலாம். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்க கணிசமாகச் செலவிடலாம். இறை வழிபாடுகளை மேற்கொள்வீர்கள்.



**கும்பம்:**
நீண்டநாள் பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள். சொத்து வாங்கல், கொடுக்கல் விடயங்களில் நினைத்தது நடக்க வாய்ப்பு உண்டு. உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்களை விமர்சித்த ஒருவருக்கு உதவி செய்வீர்கள். எளிதில் தெளிவான முடிவு எடுப்பீர்கள்.



**மீனம்:** சிலரிடம் கோபமாக,பதற்றமாகப் பேசலாம். நல்ல நிகழ்ச்சி ஒன்றில், கலந்துகொள்ளும் வாய்ப்பு கிட்டும். திட்டமிட்ட வேலைகள் சரியான நேரத்திற்கு நடக்கலாம். நீங்கள் கேட்காமலேயே சிலர் உங்களுக்கு உதவி செய்யலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். கட்டண மிதியைச் செலுத்துவீர்கள்.

# தரம் குறைந்த மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

## அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்கிறார் அமைச்சர் மைத்திரி

கொழும்பு, நவ. 11

தரம் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நிறுவனங்கள் தடை செய்யப்படும். இவற்றால் ஏற்பட்ட நட்டத் தொகை அந்த நிறுவனங்களிடமிருந்தே அறவிடப்படும் எனச் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன நேற்று முன்தினம்நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதில் அளிக்கும்போதே சுகாதார அமைச்சர் இப்படிக் கூறினார்.

கடந்த ஆறு வருட காலத்தில் அரச வைத்திய சாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருந்து வகைகளில் பெரும்பாலானவை தரம் குறைந்தவையாகவும், அவை பாவனைக்கு உதவாதவை என்பதாலும் வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

இம்மருந்து வகைகளை அழிப்பதற்கு அரச பணம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு? இந்த இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கியது யார்? என்றும் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு பிரதியமைச்சர் மஹிந்த அமரவீர பதில் அளிக்கும்போது, மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்துக்கே அனுமதி வழங்கப்பட்டது.

சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட டெண்டர் சபையின் மூலமாகவே இதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களால் விநியோகிக்கப்பட்ட மருந்து வகைகளில் சில தரம் குறைந்தவையாகக் காணப்பட்டதால் அவை வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்பட்டன.

இதனால் சுகாதார அமைச்சுக்கு 2,387 லட்ச ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இதில் 2,168 லட்சமே குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து நட்டமாகப் பெறப்பட்டுள்ளது என்று பிரதி அமைச்சர் பதில் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து தயாசிறி ஜயசேகர கேள்விகளைத் தொடுத்தார்.

இப்படி தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்தது ஒரு தடவை அல்ல. தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளன.

தவறுகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் இவர்களுக்குத் தொடர்ந்து அனுமதி வழங்கியது யார்? இந்த மோசடியில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கும் தொடர்புகள் உள்ளனவா? அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? என்றும் கேட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சர் சபைக்குள் பிரவேசித்ததால் அமைச்சரே இந்தக் கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

அதாவது நாம் மருந்து வகைகளை இறக்குமதி செய்ய டெண்டர் கோரும்போது அவர்கள் தரமான மருந்துகளைக் காட்டுகின்றனர். ஆனால், விநியோகம் செய்யும் போது தரம் குறைந்த மருந்துகளை வழங்கி விடுகின்றனர்.

எனினும், இவ்விடயம் தொடர்பாகப் பரிசீலனை செய்து வருகின்றோம். ஊழல்கள் ஊர்ஜிதப்படுத்தப்படும் பட்சத்தில் தொடர்புடைய நிறுவனங்களின் இறக்குமதி அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்டு அந்த நிறுவனங்களும் தடை செய்யப்படும் எனச் சுகாதார அமைச்சர் பதில் அளித்தார். (சி)

# துயர மூடைகள்



ஓர் ஊரில் ஆசாமி ஒருவன் இருந்தான். தான் தான் இந்த உலகில் அதிகம் கஷ்டப்படுவதாகவும் மற்றவர்கள் எல்லாம் சந்தோஷமாக இருக்கிறார்கள் எனவும் அவன் கற்பனை செய்து கொண்டிருந்தான்.

இதனை கடவுளிடம் வேண்டிக் கொண்டான். ஒருநாள் இரவு கனவு கண்டான். அப்போது வானத்தில் இருந்து ஒரு குரல் கேட்டது.

''மக்களே! அனைவரும் அவரவர் கஷ்டங்களை ஒரு பையில் போட்டுக் கொண்டு ஊர் எல்லையில் இருக்கும் கோயிலுக்கு வந்து சேருங்கள்'' என்றது அந்தக் குரல்.

இவன் சந்தோஷப்பட்டான்.

உடனே தன்னிடம் இருந்த கஷ்டங்களையெல்லாம் ஒரு சாக்குப் பையில் போட்டு வெளியில் வீதிக்கு வந்தான்.

வீதியில் வந்தவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். அவர்கள் தன்னை விடப் பெரிய பைகளுடன் வந்து கொண்டிருந்தார்கள். மறுபடியும் கடவுளிடம் வேண்டிக் கொண்டான்.

''கடவுளே! இப்பொழுது நடப்பதைப் பார்த்தால் நான் வைத்திருக்கும் பையே போதும் போல் உள்ளது. அதனால் இந்தப் பையோடு திரும்பி வீட்டுக்குப் போனால் போதும்''

அனைவரும் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மறுபடியும் அதே குரல் கேட்டது.

''எல்லோரும் அவரவர் பைகளை சுவரில் தொங்க விடுங்கள். திடீரென விளக்குகள் அணையும். அந்தச் சமயம் உங்களுக்கு வேண்டிய பையை தேர்ந்தெடுங்கள்'' என்றது அந்தக்குரல்.

''அதேபோல் விளக்கு அணைந்தது. மறுபடியும் விளக்கு எரியும் போது அவரவர் பைகளை பலமாகப் பிடித்துக் கொண்டு நின்றார்கள்''

இவன் அருகில் நின்றவனைப் பார்த்து ''ஏன் நீங்கள் பையை கையில் வைத்திருக்கிறீர்கள். சுவரில் மாட்டவில்லையா?'' என்று கேட்டான்.

''இல்லை, நீ ஏன் கையில் வைத்திருக்கிறாயோ அதேகாரணமாகத் தான் நானும் வைத்திருக்கிறேன்.'' என்றான் பக்கத்தில் நின்றவன்.

''நமது கவலைகள் பற்றி நமக்குத் தெரியும். ஆனால் மற்றவர்கள் கவலைகள் நமக்குத் தெரியாது. அதனால் தெரியாததை சமாளிப்பது என்றால் மறுபடியும் ஆரம்பத்தில் இருந்து தொடங்கவேண்டும். அதனால் இதுவே போதும்'' என்றான் அவன் மறுபடியும்.

இதன் பிறகு அவன் நிற்பானா? தன்னுடைய பையே போதும் என்று வீட்டுக்குத் திரும்பிப் போய் விட்டான்.

கோ.சுவாமிநாதன்.

# ஆதார தர்மம் என்றால் என்ன?

முன்னொரு காலத்தில் வாழ்ந்த அக்பர் இஸ்லாமியப் பேரரசர். என்றாலும் இந்து மதத்தின் மீது நன்மதிப்பு உடையவர்.

அவர் பீர்பால் சொன்ன இந்துமத தத்துவத்தை ஆராய நினைத்தார்.

''நீ பிறருக்கு இப்போது எதைச் செய்கிறாயோ அதையே உலகம் உனக்குத் திருப்பிச் செய்யும்'' இது சாத்தியமா? எனப் பீர்பாலிடம் அக்பர் கேட்டார்.

''இப்பொழுது நான் உமக்கு ஒன்று செய்யப் போகிறேன். அதை உலகம் திருப்பிச் செய்கிறதா? பார்ப்போம்'' என்று அவரது கன்னத்தில் அறைந்தார் அக்பர்.

இதைச் சற்றும் எதிர்பாராத பீர்பால் சிரித்துக் கொண்டே வெளியில் வந்து எதிர்பட்ட காவலனை சட்டென்று ஓங்கி அறைந்தார்.

''இது சக்கரவர்த்தி ஆரம்பித்த விளையாட்டு. இன்றைய நாளில் முதல் தடவையாக யாரைப் பார்த்தாலும் நான் அறைந்து கொள்ளவேண்டும்'' என்று காவலனைப் பார்த்துக் கூறினார் பீர்பால்.

அக்பர் அரண்மனை வேலைகளை முடித்து தனது படுக்கையில் தூங்கப் போனார்.



அவரது கன்னத்தில் ஒரு அறை விழுந்தது. கோபத்தில் கண் சிவக்க யாரென்று பார்த்தார். அவரது மகாராணி எதிரில் நின்றார்.

''ஏன் என்னை அறைந்தாய்'' என்று மகாராணியைக் கேட்டார் அக்பர்.

''இது உங்களுக்குத் தெரியாதா? அறை வாங்கிய பிறகு யாரை முதல் பார்க்கிறோமோ அவரது கன்னத்தில் அறைய வேண்டும். நாடு முழுதும் இன்று காலையில் நடக்கும் விளையாட்டு இதுதான்'' என்றார் மகாராணி.


மறுநாள் தர்பாரில் நுழைந்ததும் பீர்பாலை அழைத்தார் அக்பர். '' உங்கள் இந்து மதம் சொல்வது உண்மை தான். நேற்று நான் உனக்கு என்ன செய்தேனோ. அதையே கடவுள் இரவுக்குள் எனக்குத் திருப்பிச் செய்தார்'' என்று கூறினார் அக்பர்.

நாம் யாருக்கு என்ன செய்கிறோமோ அதையே பிறர் நமக்குக் கண்டிப்பாகச் செய்வார்கள். இதுதான் தர்மங்களில் ஆதார தர்மம்.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வளர்ச்சி



கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் வாழ்க்கை பதற்றம் நிறைந்ததாக இருந்தது. தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிறைந்து காணப்பட்டது.

கொழும்பு நகரத்தின் மூலை முடுக்குகள் எங்கும் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிகளில் படையினர் குவிக்கப்பட்டிருந்தார்கள். போர் நிலவிய அந்தக் காலப்பகுதியில் ''உங்களுக்கு என்ன நடக்கும் எனத் தெரியாததொரு நிலையிலேயே தினமும் நீங்கள் வெளியே செல்வீர்கள்'' என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிராந்தியத் தலைவர் றிச்சட் வூக்ஸ் கூறுகிறார்.

கடந்த ஆண்டு இலங்கை அரச படையினர் விடுதலைப் புலிகள் அமைப்பினைத் தோற்கடித்த பின்னர் நகர வீதிகளில் காணப்பட்ட மண் மூடைகளும் காப்பரண்களும் படிப்படியாகக் குறைவடைந்துவிட்டன.

உல்லாசப் பயணிகள் வருகை அதிகரித்துவிட, கொழும்பு நகர நடைபாதைகளில் வெளிநாட்டவர்களை அதிகம் காணமுடிகிறது. அத்துடன் காலிமுகத் திடலில் உள்ளூர்வாசிகள் பட்டம் விட்டு மகிழ்கிறார்கள்.

''தற்போதைய சூழலில் கொழும்பு வாழ்க்கை மகிழ்வைத் தருவதாக அமைகிறது'' என வூக்ஸ் கூறுகிறார். நடப்பு ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி எட்டு சதவீதத்தினால் அதிகரித்திருக்கும் என ஆசிய அபிவிருத்த வங்கி எதிர்பார்க்கிறது.

2010 நிலைமைகளின்படி கொழும்பினது பங்குச்சந்தை உலகின் இரண்டாவது சிறந்த பங்குச்சந்தையாக மாறியிருக்கிறது.

கொழும்புப் பங்குச் சந்தை தொடர்ந்தும் தளம்பாது நிலையாக இருக்குமா அல்லது இந்த வளர்ச்சி தற்காலிகமானதுதானா என பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அவதானித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் பங்குச் சந்தையில் இன்னமும் முதலிடாது அவதானித்துவரும் நிலையிலும்கூட கொழும்பு பங்குச்சந்தை அபரிமிதமான வளர்ச்சியினைக் கண்டிருக்கிறது.

இலங்கைக்கு வெளிநாட்டவர்கள் பயணம் செய்வது, போருக்குப் பின்னர், கடந்த மாதம் வரையில் 40 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டு முடிவுறும்போது இலங்கைக்கு 600,000 வெளிநாட்டவர்கள் வந்துசென்றிருப்பார்கள் எனக் கணக்கிடப்படுகிறது.

வெண்மை நிறைந்த கடற்கரையோரங்கள், காட்டுவாழ்வுக்குச் சிறந்த அடர்ந்த மழைக்காடுகள் மற்றும் தற்போது அமைதியின் சொர்க்கமாக மாறியிருக்கும் இலங்கைத் தீவின் மலைநாட்டிலுள்ள புராதன கோவில்கள் என தகவல்கள் அனைத்து நாடுகளையும் சேர்ந்த உல்லாசப் பயணிகளின் காதுகளைச் சென்றடையும்போது 2016ஆம் ஆண்டளவில் இலங்கைக்குப் பயணம் செய்யும் உல்லாசப் பயணிகளின் தொகை 2.5 மில்லியனைத் தொட்டிருக்கும் எனக் அரசு கணக்கிடுகிறது.

**ஏனைய பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ளதைப் போல இலங்கையின் பொருளாதர வளர்ச்சியிலும் சீனச் செல்வாக்கு அதிகம். நுரைச்சோலை அனல்மின் நிலையத்தினது கட்டுமானத்துக்காக சீனாவின் எச்சிம் வங்கி 455 மில்லியன் டொலர் கடன் வழங்கியிருக்கிறது.**

''கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை வெளித்தொடர்புகள் இல்லாத நிலையிலேயே இருந்திருக்கிறது'' என எயிட்கென் ஸ்பென்ஸ் கொட்டல் கோல்டிங்ஸ் என்ற நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜோசப் மிக்கெயல் சுரேஸ் கூறுகிறார்.

இந்த நிறுவனமானது தாய் நிறுவனத்துடன் இணைந்து 40மில்லியன் டொலர் செலவில் சிறிலங்காவினது தென்கரையோரங்களில் ஆடம்பர விடுதிகளை அமைத்து வருகிறது. ''வரும் நாள்களில் உல்லாசப் பயணிகள் அச்சமின்றி இந்தத் தீவுக்கு வந்துசெல்வார்கள்'' என அவர் தொடர்கிறார்.

இலங்கை அரசு, வெளிநாட்டு வருமானத்தினைப் பெறுவதற்காகத் தங்கியிருக்கும் மூன்று முக்கிய தொழில்துறைகளில் உல்லாசப் பயணத்துறையும் ஒன்று. தற்போது ஆறுக்கும் மேற்பட்ட புதிய உல்லாச விடுதிகளை அமைக்கும் திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் 150 மில்லியன் டொலர் செலவில் கொங்கொங்கைத் தளமாகக் கொண்ட நிறுவனம் அமைக்கவுள்ள அளவில் பெரிய உல்லாச விடுதியும் ஒன்று.

தகவல்தொழில்நுட்பத்துறையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்காக இலங்கையைச் சேர்ந்த 60,000 பேர் பணிசெய்கிறார்கள். இதன் மூலம் 350 மில்லியன் டொலர் பணம் ஆண்டு வருவாயாகப் பெறப்படுகிறது.

வெளிநாட்டு நிறுவனங்களுக்காக இலங்கையர்கள் பணிசெய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் 2015ஆம் ஆண்டளவில் ஒரு பில்லியன் டொலராக அதிகரிக்கும் என இலங்கை அரசு நம்புகிறது.

விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதுதான் அரசின் மூன்றாவது முதன்மையான விடயம். கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போரின் விளைவாகப் பயிர்ச்செய்கை இடம்பெறாதிருந்த விளைநிலங்களில் தற்போது அரிசி, அவரை மற்றும் சிறுதானியங்கள் பயிரிடப்படுகின்றன. இதன் விளைவாக இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களிலும் விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி 21 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக உட்கட்டுமான அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலையில், இலங்கையின் பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள் மற்றும் துறைமுகங்கள் என்பன சீரழிந்து இருக்கின்றன. இது விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக அமைகிறது.

**வெண்மை நிறைந்த கடற்கரையோரங்கள், காட்டுவாழ்வுக்குச் சிறந்த அடர்ந்த மழைக்காடுகள் என அமைதியின் சொர்க்கமாக மாறியிருக்கிறது இலங்கைத் தீவு. இது பற்றிய தகவல்கள் அனைத்து நாடுகளையும் சென்றடையும் போது 2016ஆம் ஆண்டளவில் இலங்கைக்குப் பயணம் செய்யும் உல்லாசப் பயணிகளின் தொகை 2.5 மில்லியனைத் தொடும்.**

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் பெரிதும் புறக்கணிக்கப்பட்ட உட்கட்டுமான அபவிருத்திப் பணிகளில் அரசு தற்போது கவனத்தினைக் குவித்திருக்கிறது. இந்தப் பணிகளுக்காக பல்தேசிய நிறுவனங்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றன. கொழும்பு துறைமுக விரிவாக்கல் செயற்றிட்டத்தின் கீழ், சரக்குக் கையாளுகைப் பகுதிக்கென நான்கு மைல் நீளமான அலைதாங்கியினை நிர்மாணிக்கும் பணியில் கொரியாவின் பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது. அதேபோல இந்திய அரச நிறுவனமான என்.ரி.பி.சி. இலங்கையின் கிழக்குப் பகுதியில் 900 மில்லியன் டொலர் செலவில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான முனைப்புகளில் ஈடுபட்டிருக்கிறது.

சுவிஸ்லாந்தைச் சேர்ந்த சிமெந்து உற்பத்தி நிறுவனமான கொல்சிம் நிறுவனத்தினது இலங்கை வர்த்தகம் இந்த ஆண்டு 22 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. ''சிமெந்து வியாபாரம் அதிகரித்திருக்கும் இந்தத் தருணத்தில் இங்கிருப்பது மகிழ்வினைத் தருகிறது'' என அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான கிளையின் பணிப்பாளர் ஸ்ரீபன் கியுபர் கூறுகிறார்.

ஏனைய பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ளதைப் போல இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் சீனச் செல்வாக்கு அதிகரித்தே காணப்படுகிறது. அடுத்த ஆண்டு திறந்து வைக்கப்படவுள்ள நுரைச்சோலை அனல்மின் நிலையத்தினது கட்டுமானப் பணிகளுக்காக சீனாவினது எக்சிம் வங்கி 455 மில்லியன் டொலர் பணத்தினைக் கடனாக வழங்கியிருக்கிறது.

இது தவிர நாட்டின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக 560 மில்லியன் டொலர் பணத்தினை இந்த வங்கி கடனாக வழங்கியிருக்கிறது.

கொழும்புக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் இடையிலான 20 கி.மீ நீளமான அதிவிரைவுப் பாதையினை அமைப்பதும் சீனாவின் திட்டங்களின் கீழ் அடங்குகிறது.

இலங்கைத் தீவின் தென்முனையில் 1.4 பில்லீயன் டொலர் செலவில் அமைக்கப்பட்டுவரும் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்தின் இறுதிக்கட்டப் பணிகளில் சீனத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதே மாவட்டத்தில் 210 மில்லியன் டொலர் செலவில் நாட்டினது இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தினைச் சீனக் கட்டுமான நிறுவனமொன்று அமைக்கிறது.

இதுதவிர வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் இலங்கையில் இன்னமும் முதலீடுகளை மேற்கொள்ளாது நிலைமைகளை அவதானித்தபடி உள்ளனர். 2010ஆம் ஆண்டினது முதலாவது அரையாண்டுப் பகுதியில் 208 மில்லியன் டொலர் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

''தற்போதைய சூழலில் இலங்கையில் முதலிடுவதற்குப் பலர் விரும்பினாலும் தங்களது பணத்தினை உடனடியாக முதலிடுவதற்குத் தயங்குகிறார்கள்'' என எச்.எஸ்.பி.சி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் நிக் நிக்கலூவா கூறுகிறார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசின் முதலீட்டுச் சபையினது அனுமதியினைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாகச் சில முதலீட்டாளர்கள் முறையிடுகிறார்கள்

இது தொடர்பில் முதலீட்டுச் சபையின் பணிப்பாளரிடம் வினாவியபோது, ''எங்களது சேவையை மேம்படுத்த வேண்டிய தேவையினை உணர்கிறோம். முதலீட்டாளர்களின் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதோடு தேவையேற்படின் முதலீட்டாளர்களுக்குக் குறிப்பிட்ட சில நலன்களைப் பெற்றுக்கொடுப்பதுதான் எங்கள் பணி'' என முதலீட்டுச் சபையின் தலைவர் ஜெயம்பதி பண்டாரநாயக்க கூறுகிறார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டுமெனில் அதற்கான ஒழுங்கு விதிகள் மற்றும் அதிக கால அவகாசம் தேவையாக இருப்பது என்பன தான் மிகப்பெரும் கரிசனையாக உள்ளது.

அண்மையில் 'ட்ரான்பரன்சி இன்ரநாஷனல்' நிறுவனம் வெளியிட்டிருக்

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

01. பதவி இலிகிதர் (01)
குறியீட்டு இல 302/13 (66/2006 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் 9950-85X10-90X10-11,700.00
வயதெல்லை 18-45 வரை
பால் ஆண்/பெண்

**தகைமைகள்**

1. கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறை பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 15 ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறை பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

2. க.பொ.த.(சா.த) சான்றிதழ் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/வர்த்தகம்/எண்கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ்மொழி உட்பட ஐந்து (05) பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் இலிகிதர் பதவியில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02. பதவி இலிகிதர் (02)
குறியீட்டு இல 302/14 (66/2006 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் 9700-80X10-85X10-11,350.00
வயதெல்லை 18-45 வரை
பால் ஆண்/பெண்

**தகைமைகள்**

1. கூட்டுறவுச் சங்க ஊழியர் 15 ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்பு பட்டதுறை பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 16 ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறை பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**அல்லது**

2. க.பொ.த. (சா.த.) சான்றிதழ் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/வர்த்தகம்/எண்கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ்மொழி உட்பட ஐந்து (05) பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் இலிகிதர் பதவியில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 24.11.2010**

குறிப்பு: கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்கப்பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் இலிகிதர் (302/13), அல்லது இலிகிதர் (302/14) பதவிக்கான விண் ணப்பம் எனக்குறிப்பிட்டு *'தலைவர், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சுவீதி, சாவகச்சேரி'* முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

நெறியாளர் குழுவின் ஆணைப்படி,
கி.பூபாலசிங்கம்,
தலைவர்.

*ப.தெ.வ.அ.கூ.சங்கம்,*
*டச்சு வீதி, சாவகச்சேரி.* (சி-572729)

## ஆண்டு விழா

வரமராட்சி, நவ.11

கரவெட்டி, இடைக்குறிச்சி மெதடிஸ்த சிற்றாலயத்தின் 39 ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என். அருள்நாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் விசேடமாக நன்றி செலுத்தும் வழிபாடு இடம்பெறும்.

(204- 236)

## மாதாந்த ஒன்று கூடல்

கைதடி, நவ.11

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரசமுதியோர் இல்லத்தில் நடைபெற இருப்பதாக சமூக சேவைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் அறிவித்துள்ளார்.

(த-288)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**தாயின் மடியில்:**
**15.08.1934**

**ஆண்டவன் அடியில்:**
**12.09.2010**



பாசத்தைப் பொழிந்து அறிவைப் பெருக்கி
அன்புடன் வளர்த்து உங்களை உருக்கி
எங்களை உருவாக்கிய அருமைத் தந்தையே!
உங்கள் பாசம் கடலளவு என்றாலும்
இறுதி மரியாதையைச் சமர்ப்பிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அமரர் கதிர்காமு ஐயாத்தம்பி (ஐயா)

எமது அன்புத் தெய்வத்தை இறுதி மூச்சுவரை பராமரித்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சகஊழியர்கள் அனைவருக்கும், உயிர் பிரிந்த பின் மரணச்செய்தி அறிந்து ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்லிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், பத்திரிகைமூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோர், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், உதவி செய்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த 12.10.2010 அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 11.11.2010 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அழைப்புக் கிடைக்காதோர் அனைவரும் தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

*மீசாலை வடக்கு, வேம்பிராய்,*
*வரணி வீதி, கொடிகாமம்.* (சி-572749)

குடும்பத்தினர்.



# பதினைந்தாம் ஆண்டு

# நினைவலைகள்

**அன்னை மடியில் : 22.10.1946**
**ஆண்டவன் அடியில்: 29.10.1995**

## அமரர் நாகேஸ்வரி தங்கவேல்

**(மங்களேஸ்)**

**திதி: ஷஷ்டி 11.11.2010**

அன்பின் திருவுருவமாய்
பாசத்தின் முகவரியாய் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் எங்களை வாழ வைத்த தெய்வமே!
அருட்பெரும் சோதியில் ஒன்றரக் கலந்து
பதினைந்து ஆண்டுகள்
ஓடி மறைந்தனவே அம்மா
பதினைந்தாண்டுகள் ஓடிமறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது அம்மா!
எங்கள் எல்லோருடைய கண்ணீர்ப் பூக்களால்
உங்கள் பாதங்களை வணங்கி தினமும்
இறைவனை வேண்டி நிற்கின்றோம் அம்மா!

**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

*இல.09, கேசாவில் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி.*
*யாழ்ப்பாணம்.*

**தங்கவேல் லக்ஸ்மன்**
*(மகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயம்





நீர்வேலி வடக்கில் நீர்வேலி புன்னாலைக் கட்டுவன் வீதியோரமாக நீர்வேலிச் சந்தியிலிருந்து 1கிலோ மீற்றர் தூரத்தில் அரசும் வேம்பும் தலவிருட்சமாகக் கொண்ட இடத்தில் கண்பன்புலம் என்னும் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது இந்த

**கு.எழிலன்**

ஆலயம்.

இந்த ஆலயம் அம்பாள் அன்றொரு நாள் ஆலய பரிபாலகரான அமரர் சின்னப்பு தர்மலிங்கம் அவர்களின் கனவில் தோன்றி நீண்டகாலமாக என்னைத் தாயென மதித்து தொண்டு செய்து வழிபட்டு வந்த நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் இப்போ என்னைக் கவனிக்காது ஆதரிக்காது விட்டு விட்டிர்கள். நான் உங்கள் இடத்திலேயே இருக்கப்போகிறேன் என குறிப்பிட்ட இடத்தையும் சுட்டிக்காட்டி மறைந்துவிட்டார்.

கனவில் தெரிவித்ததற்க மைய குறிப்பிட்ட இடத்தில் வேப்பமரத்தின் கீழ் 1943 ஆம் ஆண்டு சுபானு வருடம் வைகாசி 24 ஆம் திகதி திங்கட்கிழமை சதுர்த்தித் திதியும் பூச நட்சத்திரமும்




கூடிய சுபவேளையில் தற்போது கோயில் அமைந்திருக்கும் "கண்பன்புலம்" என்னும் காணிக்குள் நிலையம் பார்க்கப்பட்டு 1944 வைகாசி 21 ஆம் திகதி அத்திபாரமிடப்பட்டது.

1947 இல் கோயிலுக்கான மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம், மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பனவும் 1948 இல் திருமஞ்சனக் கிணறும் அமைக்கப்பட்டன.

1956 இல் வைகாசி மாதம் 29 ஆம் திகதி நீர்வேலியில் வாழ்ந்த காலஞ்சென்ற குருக்கள் திலகம் சிவஸ்ரீ க.தியாகராஜக் குருக்கள் அவர்களால் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த கடைக் கட்டடத்தை காலஞ்சென்ற சகோதரர்களான சின்னப்பு கனகசபை, சின்னப்பு தம்பிப்பிள்ளை, சின்னப்பு தர்மலிங்கம் ஆகிய மூவரும் தர்மசாதனம் மூலம் வழங்கியுள்ளனர்.

ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பூசா கருமங்களை விஸ்வப் பிராமணராக விளங்கி வரும் ஆலய தர்மகர்த்தாவாகிய காலஞ்சென்ற சின்னப்பு தர்மலிங்கம் அவர்களே செய்து வந்தார்.

அக்காலத்தில் ஆலயத்தில் திருவெம்பாவை, நவராத்திரிப் பூசைகளும் மாதாந்த பௌர்ணமி தினங்களில் அன்னதானம் நடைபெற்றதோடு திருவாதவூரடிகள் புராண படனம், சித்திரபுத்திரனார் கதை என்பனவும் பக்தி பூர்வமாக படித்துப் பயன் சொல்லப்படும் நிகழ்வு சிறப்பு வாய்ந்ததாகும். 5.8.1963 இல் அசையாமணியும், மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டன.

1970 தை மாத திருவோண நட்சத்திரத்தில் மகாவிஷ்ணு மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

(தொடரும்)

# அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இலங்கையில் 1980ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட மூன்று கைத்தொழிற் பேட்டைகளில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையும் ஒன்றாகும். யாழ். மாவட்டத்திற்கு மட்டுமல்ல வடக்கு மாகாணத்துக்கு உரியதாக தனித்துவத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆரம்ப காலக் கட்டங்கள் நிறுவன அமைப்புகள் கருவி சாதனங்கள் அனைத்தும் 1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையுடன் முற்றாக சேதமாக்கப்பட்டதை அடுத்து தற்போதைய கட்டமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டபிரிவின் அனுசரணை 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வையாகும்.

ஐக்கிய நாடுகள் திட்டப்பிரிவு வழங்கிய 11 மில்லியன் ரூபா உதவியில் நவீன சாதனங்களுடன் புனரமைக்கப்பட்டது.

சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் அடித்தளத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டத் தொகுதிகள் 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து செயற்பட ஆரம்பித்தது. கால் நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் பொறுப்பில் செயற்பட்டு வரும் அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் ஒரே தடவையில் 27 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய அடைப் பொறிக் கருவிகள் உள்ளன.



வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் படும் நல்லின கோழிகளை வளர்த்து அதில் இருந்து பெறப்படும் முட்டைகளில் இருந்து தெரிவு செய்யப் படும் முட்டைகளை பயன்படுத்தி கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கோழி முட்டைகள் இரண்டுகட்டங்களாக அடைப் பொறியில் பராமரிக்கப்பட்டு 21 தினங்களில் கோழிக் குஞ்சுகள் பெறப்படுகின்றன. அடைப்பொறியில் ஏற்றப்படும் முட்டைகளில் இருந்து 95 வீதத்துக்கு குறையாத அளவு குஞ்சுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

முட்டைகளில் இருந்து குஞ்சுகளை பெறுவதற்கான கருவிகளில் முதற்கட்டமாக 18 தினங்களுக்கு அடை வைக்கப் பட்ட பின்னர் இரண்டாம் கட்ட அடைப் பொறிக்கு மாற்றப் பட்டு மூன்று தினங்களில் குஞ்சுகள் பெறப்படுகின்றன.

**ஞானஆதவன்**

23 அடி அகலமும் 80 அடி நிளமும் கொண்ட 6 மண்டபங்களில் கோழிக்கூடுகள் உரிய கட்டுமான ஒழுங்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன இதில் இரண்டு கூட்டுத் தொகுதிகள் குஞ்சுக் கோழி வளர்ப்புக்கும் நான்கு கட்டடத் தொகுதிகள் அடை முட்டைக் கோழிக் வளர்ப்புக் குரியதாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அடை முட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக 10 வீதம் சேவல் கோழிகளும் 90 வீதம் பேட்டுக் கோழிகளுமாக வளர்க்கப்பட்டு அடைமுட்டை பெறப் படுகின்றது.

முட்டைஇனக் கோழிக் குஞ்சுகள், இறைச்சி இனக் கோழிக் குஞ்சுகள் என்ற வகையில் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யக் கூடிய வசதிகள் உள்ளபோதிலும் தற்பொழுது கொல்லைப்புறக் கோழி வளர்ப்புக்கான கோழிக் குஞ்சுகளே உற்பத்தி செய்யப்படுகின்றன.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கான கோழிக்குஞ்சுகள் ( நாட்டுப் புற கோழி உயர் தர முட்டைக் கோழி) கலப்பினக் குஞ்சுகளாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சு 100 ரூபாவுக்கு குறைந்த விலையில் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகின்றது. அதே நேரம் அச்சுவேலியில் உற்பத்தி செய்யப்படும் கோழிக் குஞ்சுகளின் அளவு யாழ். மாவட்டத்தின் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதனால் தென்னிலங்கையில் இருந்து 110 ரூபாவுக்கு மேற்பட்ட விலையில் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கான கோழிக் குஞ்சுகள் தென்னிலங்கை யில் இருந்து எடுத்து வரப்படுகின்றன. நல்லின முட்டைக் கோழி குஞ்சுகள் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டு 175 ரூபாவுக்கு குறையாத விலையில் தனியாரால் விற்பனை செய்யப் படுகின்றன. அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் முழுமையான உற்பத்தியளவை காலத் தின் தேவையை கருத்தில் கொண்டு செயற்படு மான சகல தரங்களையும் சேர்த்த கோழிக் குஞ்சுகளையும் 100 ரூபாவுக்கு குறைந்த விலையில் யாழ்.மாவட்ட பண்ணையாளர்கள் கோழி வளர்ப்போர் பெற்றுக் கொள்ளமுடியும்.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் ஆரம்பத்தில் சிறுகைத்தொழிற் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு பின்னர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு 2001- 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றினால் மாறிமாறி பொறுப்பேற்கப்பட்டு 2006 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

5 ஏக்கர் வளமான நிலப்பரப்பில் அமைந்திருக்கும் இந்த உற்பத்தி நிலையத்தின் உச்சப்பயன் பாட்டிற்கு ஏற்ற முறையில் முழுமையாக நிலப்பயன் படுத்தப்படாமல் இருப்பதை தவிர்த்து முழுமையான வளப்பின் பாட்டுடன் காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு கோழிக்குஞ்சு உற்பத்தியை மேல் நிலைப்படுத்துவது வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கும் போசாக்கு மேம்பாட்டிற்கும் உதவுவதாக அமையும்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியானதா

# இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை...

தவறானதா

இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை தவறானது என ஒரு சில இளம் சமுதாயத்தினரின் சீர்கேடான பாவனையைக் கருத்தில் கொண்டு நாம் எடைபோட்டுவிட முடியாது. இன்றைய இளம் சமுதாயத்தினரின் பலர் கைத்தொலைபேசியைப் பாவிப்பது முற்று முழுக்க உண்யாகும்.

கைத்தொலைபேசியைப் பயன்படுத்திச் சிலர் பாடம் சம்பந்தமான சிலர் விளக்கங்களை தங்கள் பாடசாலை மாண வர்கள் இடையேயும், ஏன் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இடையேயும் கேட்டு அறிந்து கொள்கின்றார்கள். மற்றும் தங்கள் நண்பர்களுடனும், உற வினர்களுடனும் நல்ல முறையில் தேவையான நேரத்தில் முக்கிய விட யங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள்.




எனவே, என்ன தேவைக்காக கைத்தொலைபேசி வந்ததோ அந்தத் தேவைக்குப் பயன்படுத்தாமல் சமூகச் சீரழிவிற்கான சில விடயங்களுக்காகப் பயன்படுத்தும் ஒரு சில இளம் சமுதாயத்தினரால் முழு இளம் சமுதாயமுமே வெட்கித் தலைகுனிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகின்றார்கள். இந் நிலை மாறவேண்டும். வருங்கால நாட்டின் தலைவர்களாக வர வேண்டிய இளம் சமுதயத்தினர் சிலர் இக் கைத்தொலைபேசிப் பாவனையால் சீர்கெட்டுப் போயுள்ளார்கள். இதனை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. எனவே இன்றையஇளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை நல்ல நோக்கத்திற்காக, தகவல்களை பரிமாறுவதற்காக மற்றும் முக்கிய விடயங்களுக்காகப் பயன்படுத்துவார்களாயின் சரியானது என்பதே எனது வாதமானதாகும்.

**க.கனகசபை**, சண்டிலிப்பாய்.

'மெஞ்ஞான உலகில் அஞ்ஞானம் - இருந்தது. அஞ்ஞானம் நீக்கவே விஞ்ஞானம் - மலர்ந்தது.'

இவ் வாசகம் விஞ்ஞானத்தின் புதுமைகளை எடுத்துக் காட்டுகின்றது. பூமியின் அண்டசராசரங்களையும் மிஞ்சும் அளவுக்கு விஞ்ஞனம் வளர்ந்து விட்டது. அதன் படைப்புக்களில் முக்கிய படைப்பாக உருவெடுத்திருப்பது கைத்தொலைபேசிகளே!

தொலைதூர பிரதேசங்களுக்கு இரத்தின சுருக்கமாக செய்திகளை அனுப்புவதற்கே இத்தகைய கைத்தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று இணையம், வீடியோ பாடல்கள் அத்தனையும் தீப்பெட்டி அளவு கருவிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆனால், நம் இளைஞர் மட்டம் இதனை எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதை சற்று அருகில் சென்று பார்த்தால் தெரியும்.

இணையம் என்ற போர்வையில் தகாத படம் பார்ப்பது. பேஸ் புக் இல் அரட்டை அடிப்பது போதாக்குறைக்கு சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பிய வண்ணம் தனியார் வகுப்பு நடைபெறும் இடங்களிலும், பாடசாலை செல்லும் மாணவிகளின் பின்னால் சுற்றித் திரிவதும், அவர்களுக்கு முன்னால் தாம் பெரிய 'ஹீரோவாக' காட்டிக் கொள்ள மதிலில் ஒரு காலை ஊன்றி காசே இல்லாத போனில் வாடிக்கையாளர் சேவையுடன் பேசுவதும், வீதியோரத்தில் மணிக்கணக்கில் பேசுவதும், பல பேருக்கு 'மிஸ்ட் ஹோல்' போட்டு ரகளை பண்ணுவதும் இவர்களின் வழக்கமாகிவிட்டது.

'எப்படிப் படிக்கலாம் என்பதை யாழ்ப்பாணம் போய்ப் பார்.' என்று ஒரு தென்னிலங்கைச் சிங்களவர் என் காதுபடக் கூறினார். ஆனால் இன்றோ 'எப்படிச் சீரழியலாம் என்பதை யாழ்ப்பாணம் போய்ப் பார்' என்னும் நிலைமையாகிவிட்டது. இத்தனையும் யாரால் நம் இளைஞர்களால் தான்.

அன்று கல்வியில் கொடிகட்டிப் பறந்த எம் சமூகம், கல்வியில் 9ஆவது மாகாணம் ஆகவும் மாவட்டத்தில் 21 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது. 'இருவர் யன்னல் ஊடாகப் பார்க்கின்றார்கள். ஒருவன் சகதியைப் பார்க்கிறான்! மற்றவன் நட்சத்திரங்களைப் பார்க்கின்றான்' இன்று நம் மண்ணின் பார்வையும் இவ்வாறே உள்ளது.

அந்நியன் போடும் கட்டுப்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் அடிபணியும் நீங்கள் உங்கள் மண்ணின் கட்டுப்பாடுகளையும், கலாச்சாரத்தையும் சீரழிக்கலாமா? எதிலும் அளவோடு இருங்கள். மீண்டும் கல்வி மூலம் எமது தேசத்தை வளப்படுத்துங்கள். சமுதாயம் எங்கள் மீது சேறு பூசியிருக்கிறது. அதை நீங்கள் தான் அகற்ற வேண்டும். எங்களாலும் முடியும்! என்பதை உணர வையுங்கள். நிகழ்வியலிலிருந்து வாழ்வியலை செப்பனிடுங்கள்.

**சி.திபர்ஷன்**
கொக்குவில் இந்துக்கல்லூரி.

## பயமின்றி பரீட்சையை எதிர்கொள்ள

(சென்றவாரத் தொடர்ச்சி)

தேர்வுகளைப் பார்த்து, 'ஐயோ! இதில் தோற்றால் நம் வாழ்க்கையே போச்சு' என்றெல்லாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இதுவும் ஒரு சவால் என்ற கோணத்தில் தைரியமாக அதைச் சந்திக்க வேண்டும். பரீட்சையை விரோதியாக நினைக்காது நல்ல நண்பனாக நினைத்தால் பிரச்சினையே இல்லை.

தேர்வுகளின் சிறப்பு என்ன தெரியுமா? விளையாட்டுப் போட்டியில் ஒருவர் வெற்றி பெற்றால் இன்னொருவர் தோற்றே ஆக வேண்டும். ஆனால் தேர்வுகளுக்கு இந்த விதிமுறை பொருந்தாது. எத்தனை பேர் வேண்டுமானாலும் வெற்றிபெற முடியும். வெற்றியும் தோல்வியும் ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட விடயம்.

கஷ்டப்பட்டுப் படித்து நன்கு தேர்வு எழுதினால் முதலாவதாக வர முடியும். இல்லாவிடால், குறைந்த மதிப்பெண்களை பெற்று, பின் வரிசையில் அமர வேண்டியதுதான். பரீட்சையில் அதிக மதிப்பெண்களும், குறைந்த மதிப்பெண்களும் பிறர் தர வருவதில்லை. அதற்கு நாமேதான் முழுப்பொறுப்பு.

ஜனனி சடாச்சரசோதி 10D
யா/வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை

இந்தப் பொறுப்பின் முக்கியத்துவத்தை சரியாகப் புரிந்து கொண்டுவிட்டால் அதன் பிறகு எந்தத் தேர்வும் சுமையாகத் தோன்றாது. ஒவ்வொரு தேர்வும் நம்முடைய திறமையை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பாகத்தான் தெரியும். (முற்றும்)

## எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

உலகின் பல பாகங்களில் நிகழும் நிகழ்ச்சிகளை வீட்டிலிருந்தவாறே அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.


மருத்துவத்துறையின் அறிவியல் அரிய சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. புற்றுநோய்த் தடுப்புச் சிகிச்சை, இருதயமாற்று சிகிச்சை போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். அறிவியல் கண்டுபிடிப்புக்கள் யாவும் மனித சமுதாயத்துக்குப் பயன்தரும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டுள்ளன. அவை தொழில் துறையில் மட்டுமன்றி விவசாயத் துறை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மனித சமுதாயத்துக்கு பல நன்மைகளை அளிப்பதோடு சில தீய விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. உலகின் முன்னேற்றத்துக்கு உதவிடும் நோக்கம் கண்டுபிடிக்கப்பட்ட அணு சக்தி விஞ்ஞானத்தின் மகத்தான கண்டுபிடிப்பாக கருதப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்கா யப்பான் மீது வீசிய அணு குண்டானது அணுசக்தி அழிவு வேலைக்குப் பயன்பட்டமைக்கு சான்றாக அமைகின்றது. இதனால் மேலும் பல அழிவுக் கருவிகள் உலகை அச்சுறுத்தும் வகையில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. நோய்க் கிருமிகளை அழிக்க நோய்களைப் போக்க மருந்து வகைகளைக் கண்டுபிடித்த விஞ்ஞான விந்தையானது இன்று நோய்களை உருவாக்கும் அழிவு சாதனங்களையும் உருவாக்குகின்றது. (வளரும்)

ஷாலினி, மட்டுவில்

## விவாதமேடை

சரியானதா | இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை | தவறானதா

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை சரியானதா, தவறானதா என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.




## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை...

சரியானதா ☐ தவறானதா ☐

பெயர் :-..................................
முகவரி :-..................................
:-..................................
அடையாள அட்டை இல:..................................

உங்கள் தீர்ப்புகளை 25.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும்,
பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்
**'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது.
இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது
சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள
படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..................................
முகவரி :-..................................
:-..................................
.................. திகதி .................. கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்'**,
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்களிலும் சாட்சியங்களைப் பதிவுசெய்ய ஆணைக்குழு திட்டம்

## ஆணைக்குழுவின் உப செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை, நவ.11

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்யத் திட்டமிட்டுள்ளது என ஆணைக்குழுவின் உப செயலாளர் வருண டி சேரம் தெரிவித்துள்ளார்.

எனினும் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான திகதிகள் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினர் மன்னார் மாவட்டத்திற்கான விஜயத்தை அடுத்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் வருண டி சேரம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு வின் விசாரணைகள் மன்னார் மாவட்டத் திலும் இடம்பெற வேண்டும் என மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசேப் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்று கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட் டங்களில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன.

இன்று வியாழக்கிழமை முதல் 14ஆம் திகதி வரை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு யாழ். மாவட்டத்தில் சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது. (ளி)

# கிழக்கு மாகாணத்தில் நெல் விதைப்பு ஆரம்பம்

திருகோணமலை, நவ.11

திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை ஆகிய மாவட் டங்களில் பரவலாக நெல் விதைப்பு ஆரம்பமாகியுள்ளது.

சுமார் 30வருடங்களுக்கு மேல் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்படாதிருந்த பகு திகளிலும் இம்முறை பெரும் போக நெற்செய்கை மேற்கொள் ளப்படுகிறது. இதற்கு ஏற்றவாறு விவசாய அமைச்சு மானியத்திட் டத்தின்கீழ்விதைநெல்,உரம்ஆகிய வற்றை வழங்கியுள்ளது. (ளி)




# மட்டக்களப்பு-அம்பாறை எல்லைக்கல் இடித்துச் சேதம்

மட்டக்களப்பு, நவ.11

மட்டக்களப்பு-அம்பாறை மாவட் டங்களின் எல்லையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லையைக் குறிக்கும் அடை யாளக்கல் இனந்தெரியாத நபர் களால் இடித்து சேதமாக்கப்பட் டுள்ளது.

மட்டக்களப்பு - கல்முனை வீதி இப் போது அதிவேக நெடுஞ்சா லையாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. புனரமைப்புப் பணி கள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன.

இந்நிலையில் மட்டக்களப்பு நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு, கல்முனை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைகளைப் பிரிக்கும் வகையில் பெரியநீலாவணையில் இக்கல் நடப்பட்டிருந்தது.

சில தினங்களுக்கு முன்னர் நடப் பட்ட இக்கல் கடந்த செவ் வாய்க்கிழமை இனந்தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட் டுள்ளது. தற்போது இதற்குப் பதிலாக புதிய கல் நடு வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய கல்லாறு கிராம மக்களுக்கும், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியநீலாவணை கிராம மக்களுக்கும் இடையில் நீண்ட காலமாக எல்லைப் பிரச் சினை நிலவி வருகிறது.

இதன் பின்னணியிலேயே இக்கல் சேதமாக்கப்பட்டிருக்க லாம் என சந்தேகிக்கப்படுகின் றது. (ளி)

# திருமலை மாவட்டத்தில் வீதிகள் அபிவிருத்தி

திருகோணமலை, நவ.11

பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் அமைப்பின் 79 மில்லியன் யூரோ நிதி உதவி மூலம் திரு கோணமலை மாவட்டத்தில் வீதி அபி விருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

ஏ- 15 வீதியில் திருக்கொடிய மடுவிலிருந்து திருகோணமலை வரையான 98கிலோ மீற்றர் வீதி புனர்நிர்மாணம் செய்யப்படு கிறது.

பி-10 வீதியில் அல்லையி லிருந்து கந்தளாய் வரை 41 கிலோமீற்றர் வீதியும், மாவடிச் சேனையிலிருந்து கணேசபுரம் வரையான 11.9கிலோமீற்றர் வீதியும் புனர் நிர்மாணம் செய் யப்படுகின்றன.

இதேவேளை, பிரான்ஸின் நிதியுதவியுடன் கடற்கோளின் பின்னர் 2005இல் ஆரம்பிக்கப் பட்ட நிர்மாண வேலைகளும் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. (ளி)

# சம்பூர் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

திருகோணமலை, நவ.11

மூதூர் கிழக்கு பிரதேசத்தில் இலவச நடமாடும் வைத்திய முகாம்களை நடத்திய தாய்வான் தர்மபுரம் வைத்திய சேவைகள் அமைப்பு, கிளிவெட்டி நலன் புரி முகாம்களில் தங்கியிருந்து கல்வி கற்கும் சம்பூர் பிரதேச ஏழு பல்கலைக்கழக மாணவர் களுக்கும் மற்றும் பாடசாலைக ளில் கல்வி கற்கும் 20 மாணவர் களுக்கும் புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது. இது தொடர் பான நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை சேனையூர் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒவ்வொருவருக்கும் தலா 7 ஆயிரம் ரூபா பணமும் அன்ப ளிப்புப் பொருள் தொகுதி ஒன் றும் வழங்கப்பட்டன. 20 மாண வர்களுக்கு தலா நாலாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது. அத்துடன்மூதூர் கிழக்குப் பிரதேச பாடசாலை அதிபர்கள் ஒவ்வொரு வருக்கும் முதலுதவிப் பெட்டி கள் இந்நிகழ்வில் தாய்வான் வைத்தியசாலைக் குழுவின ரால் வழங்கப்பட்டன. (ளி)

# மத்திய மாகாண அரச வைத்தியசாலைகள் அடுத்த வருடம் அபிவிருத்தி செய்யப்படும்

கொழும்பு, நவ.11

மத்திய மாகாணத்திலுள்ள 92 அரச வைத்தியசாலைகள் 23 கோடி ரூபா செலவில் அடுத்தவருடம் அபிவிருத்தி செய்யப்படும் என மாகாண சுகாதார அமைச்சர் சட்டத்தரணி சுனில் அமரதுங்க தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மாகாணசபையின் நிர்வாகத்துக்குட்பட்ட மாத்தளை, நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைகளும், தம்புள்ள, டிக்கோயா, ரிக்கிலஸ்கட ஆதார வைத்தியசாலைகளும் மற்றும் 87 பிரதேச வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட் டங்களில் முறையே 47, 22, 18 பிரதேச வைத்தியசாலைகள் இந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்படும்.மேலும் தெல்தெனிய பிரதேச வைத்தியசாலை மூன்றுகோடி ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படும்.

புனர்நிர்மாணத்துடன் இவ் வைத்தியசாலைகளின் பயன்பாட் டுக்கான மருத்துவ உபகரணங்களும், இதர வசதிகளும் பெற்றுத் தரப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ளி)

# இரத்தினபுரிக்கு 500 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, நவ.11

இரத்தினபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் வீதி அபிவிருத்திகள் உட்பட்ட பல்வேறு திட்டங்களுக்கென சுமார் 500 கோடி ரூபா நிதி ஒதுக் கப்பட்டுள்ளது என பொருளா தார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட இணைப் பாளர்கள் கூட்டத்தில் உரையாற் றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் இரத்தினபுரி முக்கிய இடத்தை வகிக்கிறது. எனினும், மக்களின் உற்பத்திகளுக்கு உரிய விலைகள் கிடைப்பதில்லை. இதனால் அவர்களது வாழ்க் கைத் தரம் முன்னேற்றமடை வதில்லை என்றும் அவர் கூறி னார். (ளி)




# கொத்மலை சுரங்கத்தைப் பார்வையிட அலைமோதுகின்றது மக்கள் வெள்ளம்

கொழும்பு, நவ.11

மேல் கொத்மலை நீர்மின் திட்டச் சுரங்கப்பாதையைப் பார் வையிடுவதற்கு பெருந்திர ளான பொதுமக்கள் வருகை தரு கின்றனர் என திட்டப் பணிப்பா ளர் ஷவி பெர்ணான்டோ தெரி வித்தார்.

மூன்று நாள்களில் சுமார் 25,000 பேர் வருகை தந்தனர் என்றும், பாடசாலை மாணவர் களே அதிகம் வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுரங்கத்தைப் பார்வையிடு வதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த ஞாயிற் றுக்கிழமையுடன் முடிவடைந்து விட்டது. எனினும், பொதுமக்க ளின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை மீண்டும் அனுமதி வழங்கப்பட் டுள்ளது என்றும் அவர் தெரி வித்தார். (ஸி)

# பன்றிக் காய்ச்சலால் பீடித்த நால்வர் கண்டி வைத்தியசாலையில்

கண்டி,நவ. 11

கண்டி மாவட்டத்தில் பன்றிக் காய்ச்ச லால் பீடிக்கப்பட்ட நால் வர் இனங்காணப் பட்டுள் ளனர் என இலங்கை தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் வைத்திய அதி காரி சுதத் பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக இந் நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது. பொதுமக்கள் விழிப் புடன் இருக்க வேண்டும்.

இருமலுடனான காய்ச்சல் மூன்று தினங்களுக்கு மேல் காணப்படுமாயின் உடன் வைத் தியசாலையை நாடவும். இந்நோ யால் இம்முறை சுமார் 35 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# கண்டியில் கலாசார நிகழ்வு

கண்டி, நவ.11

மத்திய மாகாண இலங்கை இந்திய கலாசார சங்கம் நடத்தும் கல்யாண ரங்கா - 2010 கலாசார நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.25 மணிக்கு கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கண்டி இந்திய உதவித் தூதுவர் ஆர்.கே.மிஸ்ரா கலந்து கொள்ளவுள்ளார். (ளி)

# பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி மாத்தளையில் ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

மாத்தளை, நவ.11

முன்னாள் இராணுவத் தள பதி சரத் பொன்சேகாவை விடு தலை செய்யக் கோரி மாத்தளை நகர் மணிக்கூட்டு கோபுரத் துக்கு அருகில் நேற்றுமுன் தினம் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ் சித் அலுவிகார ஆகியோர் தலை மையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 100 பேர்வரை ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரியும், தற்போது நாட்டில் நிலவிவரும் பொருள் களின் விலை அதிகரிப்புக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப் பப்பட்டன. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

தமிழ்ப் பாடத்துறை ஆசிரியர்
திரு.பி.பிரபாகரன்,
ப/மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம், பதுளை.
தொ.பே.இல: 077-1887035

G.C.E.(O/L)
வலம்-4
வெளியீடு-2
பதுளை

## கணிதம் - I — 2 மணித்தியாலங்கள்


### பகுதி - A

01. ஒரு தோடம்பழத்தின் விலை ரூ 7.50 எனின், 8 தோடம்பழங்களின் விலை எவ்வளவு?

02. 3.2 லீற்றரை மில்லிலீற்றறில் தருக.

03. தீர்க்குக. $3/X = 5$

04. தரப்பட்ட உருவில் a யின் பருமனைக் காண்க.




05. இரண்டை துவித எண்ணாகத் தருக.

06. $4x^2 - 4x$ எனும் கோவையின் ஒரு காரணி 4x எனின், மற்றைய காரணியை எழுதுக.

07. 5, 6, 6, 7, 8 ,9, 10 என்ற எண் பரம்பலின் இடையம் யாது?

08. x = { 5454 எனும் எண்ணிலுள்ள இலக்கங்கள்} எனும் தொடையில் x இன் முதலிமை யாது?

09. $n = 3$ ஆகும் போது $n^2-2$ இன் பெறுமானம் யாது?

10. ரூ. 200 இன் 20% எவ்வளவு?

11. ஒரு வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையிலான விகிதம் 7 : 3 ஆகும். ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையை அவ்வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாகத் தருக.


12. சுருக்குக. $10/(2a-3) - 4/(3-2a)$

13. ஓர் ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக்கோணமானது புறக்கோணத்தின் இரு மடங்காகும். எனின், அப்பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கையை காண்க.

14. $y = x^2 - 6x$ எனும் சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.

15. ஒரே உயரமுள்ள உருளை ஒன்றினதும் கூம்பு ஒன்றினதும் அடியின் ஆரைகளுக்கு இடையிலான விகிதம் 4 : 3 எனின், அதன் கனவளவுகளுக்கு இடையிலான விகிதம் யாது?

16. PQ என்பது வட்டமொன்றை A யில் தொடும் தொடலியாகும். B,C என்பன வட்டத்தின் பரிதியிலுள்ள புள்ளிகளாகும். தரவுகளை அவதானித்து < BAC யின் பருமனைக் காண்க.




17. காரணி அறிவை பயன்படுத்தி சுருக்குக, $91^2 + 819$

18. $V^2 = U^2 + 2as$ எனும் சூத்திரத்தில் U ஐ எழுவாயாக்குக.

19. lg5 = 0.6990 எனின், lg 2 இன் பெறுமானத்தைக் காண்க.


20. 12% பங்கிலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூ. 8 பங்குகளை ரூ. 9 வீதம் வாங்கிய ஒருவருக்கு வருட வருமானமாக ரூ. 960 கிடைத்தது. எனின், அவர் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரையான பெறுமானத்தைக் காண்க.

21. $X^2$, $X^3$ , $(X^2+3X)$ ஆகியவற்றின் பொ.ம.சியைக் காண்க.

22. சுருக்கி எளிய வடிவில் தருக. $\sqrt{32} - \sqrt{8}$


23. கமல், அமல் எனும் மாணவர்களின் கடிகாரங்கள் முறையே 20, 15 நிமிடங்களுக்கு ஒரு முறை மணி ஒலிக்கும். இருவரினதும் கடிகாரங்கள் நண்பகல் 12.00 மணிக்கு ஒன்றாக ஒலித்தன. எனின், மீண்டும் ஒலிக்கும் நேரத்தை 24 மணித்தியால நேரமாகத் தருக.

24. இணைகரம் PQRS இல் பக்கம் SR இன் நடுப்புள்ளி T ஆகும். முக்கோணி PST இன் பரப்பளவு $24cm^2$ எனின், இணைகரம் PQRS இன் பரப்பளவு யாது?




25. ஒருவர் தனது மோட்டார் வண்டியில் 80km தூரத்தை 4 மணித்தியாலத்தில் சென்று முடித்தார். அவர் அத்தூரத்தை 2 மணித்தியாலங்கள் முன்னதாக செல்வதாக இருந்தால், அவரது மோட்டார் வண்டியை செலுத்த வேண்டிய கதியை காண்க.


26. முக்கோணி ABC இல் < AXY = < ACB ஆகும். தரவுகளின்படி AY இன் நீளத்தைக் காண்க, AC = 15cm, AX = 6cm, BX = 3cm.




27. 12 இற்கும் 96 இற்கும் இடையிலுள்ள இரு கூட்டல் இடைகளை எழுதுக.

28. X என்பது நேர் முழு எண்ணாகும். $X+5 \leq 12$ எனும் சமனிலியை திருப்திப்படுத்தும் மிகப் பெரிய, மிகச்சிறிய பெறுமானங்களைத் தருக.

29. இங்கு A, B என்பன இரு நிலைத்த புள்ளிகளாகும். புள்ளி P ஆனது < APB = 30° ஆகுமாறு அசைகின்றது. P யின் ஒழுக்கினை மேற்படி பரும்படிப் படத்தில் வரைந்து காட்டுக.





30. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூ 52.50. ஒரு லீற்றர் பெற்றோலில் 12km தூரம் பயணம் செய்யும் வாகனம் ஒன்று 18km தூரத்தைச் சென்று மீண்டும் திரும்பி வர பெற்றோலுக்குச் செலவாகும் பணத்தைக் காண்க.

### பகுதி - B


01. நீர்த்தாங்கி ஒன்றில் 3/4 பங்கு நீர் உள்ளது. அதில் 15l பாவனைக்கு எடுத்த பின்னர், தாங்கியின் கொள்ளளவின் 3/5 பங்கு நீர் எஞ்சி இருந்தது.
1) பாவனைக்கு எடுத்த நீர் முழுத்தாங்கியின் கொள்ளளவின் என்ன பின்னம்?
2) தாங்கியின் கொள்ளளவு யாது?
3) தாங்கியிலிருந்த நீரின் அளவு யாது?
4) எஞ்சியுள்ள நீரில் 1/2 பங்கை வேறு தேவைக்கு பயன்படுத்திய பின் எஞ்சிய நீரின் அளவை முழுத்தாங்கியின் கொள்ளளவின் சதவீதமாகத் தருக.

02. துஷித், ஷான் ஆகிய இருவரிடமும் இருந்த பணத்தின் விகிதம் 4 : 5 ஆகும். ஷான் ரூபா 50 ஐ துஷித்திற்கு கொடுத்தால் தற்போதைய விகிதம் 2 : 1 ஆகும்.
1) ஆரம்பத்தில் அவர்களிடம் இருந்த பணம் X மடங்கு எனக்கொண்டு, ஒவ்வொருவரிடமும் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகையை X சார்பாக எழுதுக.
2) ஷான் ரூ. 50 ஐ துஷித்திற்கு கொடுத்த பின்பு ஒவ்வொருவரிடமும் இருக்கின்ற பணத்தொகையை X சார்பாக எழுதுக.
3) தரவுகளின்படி X இல் ஒரு சமன்பாட்டை எழுதி, அதனை தீர்த்து X இன் பெறுமானத்தைக் காண்க.
4) ஒவ்வொருவரிடமும் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகையைக் காண்க.

03. 14cm ஆரையுள்ள வட்டவடிவத் தகட்டிலிருந்து ABCD எனும் சதுரத்தகடு வெட்டி எடுக்கப்படுகின்றது,
1) சதுரத்தின் மூலைவிட்டம் AC இன் நீளம் யாது?
2) முக்கோணி ABC இன் பரப்பளவு யாது?
3) சதுரம் ABCD இன் பரப்பளவு யாது?
4) சதுரத்தை வெட்டி எடுத்த பின் எஞ்சியதகட்டின் பரப்பளவு யாது?




04. சர்வதேச பாடசாலை ஒன்றில் கற்கும் 33 மாணவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளில் ஒன்றாவது தெரிந்தவராக இருத்தல் வேண்டும். அத்தரவுகளை உள்ளடக்கிய வென்வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.
(E - ஆங்கிலம், F - பிரெஞ்சு, J - ஜேர்மன்)
1) ஒரு மொழியில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை யாது?
2) தரவுகளைப் பயன்படுத்தி X இன் பெறுமானத்தைக் காண்க.
3) ஆங்கிலம் தெரிந்தோர் எத்தனை பேர்?
4) வெண்ணுருவில் 3ஆல் குறிக்கப்படும் பிரதேசத்தை தொடைக் குறியீட்டில் எழுதுக.
5) இவர்களில் ஒருவரை எழுமாற்றாக தெரிவுசெய்தால் அவர் இரு மொழிகளில் மட்டும் தேர்ச்சி பெற்றவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?




05. 1) தீர்க்குக. $5(2X - 3)-1 = 9$
2) செங்கோணமுக்கோணி ஒன்றின் செம்பக்கம் 10cm ஆகும். எஞ்சிய பக்கங்களில் ஒன்று மற்றையதை விட 2cm கூடுதலாகும்.
1. பைதகரஸ் தேற்றத்தை உபயோகித்து. ஒரு பக்கத்தை X என கொண்டு X இன் ஒரு சமன்பாட்டை அமைக்க.
2. அதனை தீர்த்து முக்கோணியின் எஞ்சிய இருபக்கங்களையும் காண்க.

## கணிதம் - II — நேரம்: 2 மணித்தியாலங்கள்

பகுதி A - எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. 1) ஒருவர் இரு தையல் இயந்திரங்களை ஒன்று ரூபா 7,500 வீதம் வாங்கி அவற்றுள் ஒன்றை ரூபா 8,300 இற்கும், மற்றையதை ரூபா 7,900 இற்கும் விற்றார்.
1. அவர் பெற்ற இலாபம் எவ்வளவு?
2. அவர் பெற்ற இலாபச் சதவீதம் எவ்வளவு?
2) ஒருவர் தனது வீட்டிற்குக் காலாண்டு ஒன்றுக்கு ரூ. 440 வரியாக செலுத்துகிறார். நகரசபை வீட்டின் ஆண்டுப் பெறுமானத்தின் 22% ஐ வரியாக அறவிடுகின்றது.
1. ஆண்டு ஒன்றுக்கு செலுத்தப்படும் வரித்தொகையைக் காண்க.
2. வீட்டின் ஆண்டுப் பெறுமானம் எவ்வளவு?

02. 1) ஒரு வீட்டு உரிமையாளர் திங்கட்கிழமை 5 இறாத்தல் பாணையும், 1kg சீனியையும் வாங்கினார். செவ்வாய்க்கிழமை 7 இறாத்தல் பாணையும், 2kg சீனியையும் வாங்கினார். எனின்,
1. இத்தகவல்களை ஒரு தாயத்தினால் வகைகுறித்து அதன் வரிசையை எழுதுக.
2. 3 இறாத்தல் பாணினதும் 1kg சீனியினதும் விலை ரூபா 21 ஆகும். 9 இறாத்தல் பாணின் விலையானது 4kg சீனியினது விலைக்குச் சமனாகும். இத்தகவல்களைக்கொண்டு ஒருங்கமைசமன்பாட்டுச்சோடி ஒன்றை உருவாக்கி ஓர் இறாத்தல் பாணினதும், 1kg சீனியினதும் விலையைத் தனித்தனியே காண்க.
3. இதற்கேற்ப அவர் திங்கட்கிழமையை விட செவ்வாய்க்கிழமை எவ்வளவு கூடுதலான பணத்தை செலவிட்டார் என்பதைக் காண்க.
2) $A=\begin{pmatrix} 3 & -6 & 4 \\ 5 & 9 & -7 \end{pmatrix}$ $A-B = \begin{pmatrix} 4 & 1 & -3 \\ 2 & -2 & 1 \end{pmatrix}$
ஆக இருக்குமாறு தாயம் B ஐக் காண்க.

03. 1) $y=x^2+2x$ எனும் வரைபை வரைவதற்கு மாறிகள் x, y இன் பெறுமானங்கள் அடங்கிய அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 8 | 3 | 0 | ....... | 0 | 3 | 8 |

1. x=-1 ஆக இருக்கும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.
2. உகந்த ஓர் அளவிடையைத் தெரிந்தெடுத்து மேற்குறித்த அட்டவணையைக் கொண்டு சார்பின் வரைபை வரைக.
2) உமது வரைபைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.
1. சார்பு மறையாக இருக்கும் x இன் பெறுமான ஆயிடையைக் காண்க.
2. இழிவுப்புள்ளியின் ஆள்கூறு யாது?
3. $y=-x$ எனும் நேர்கோட்டை அதே ஆள்கூற்றுத் தளத்தில் வரைந்து அதிலிருந்து $x^2+3x=0$ இன் மூலகங்களை எழுதுக.

04. 1) ரவி ஒவ்வொரு நாளும் இரவு தொலைக்காட்சி பார்ப்பான். அல்லது கதைப்புத்தகம் வாசிப்பான். அவன் தொலைக்காட்சி பார்ப்பதற்கான நிகழ்தகவு 3/5. அவன் தொலைக்காட்சி பார்த்து நித்திரையாவதற்கான நிகழ்தகவு 2/3 ஆகும். புத்தகம் வாசித்து நித்திரையாவதற்கான நிகழ்தகவு 1/3 ஆகும்.
1. அவன் இரு சந்தர்ப்பங்களிலும் நித்திரையாகும், ஆகாமையைக் காட்டும் மரவரிப்படத்தை வரைக.
2. அதிலிருந்து அவன் தொலைக்காட்சி பார்த்து நித்திரை ஆகாமைக்கான நிகழ்தகவைக் காண்க.
3. அவன் நித்திரை ஆவதற்கான நிகழ்தகவைக் காண்க.

2) வகுப்பறையொன்றிலுள்ள 35 மாணவர்களில் சிங்களம் பேசுவோர் பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது. 13 பேர் பெண்களாவர். 6 ஆண்களுக்கு சிங்களம் பேசத்தெரியாது. தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தில் நிழற்றிய பிரதேசத்தைச் சொற்களில் விவரித்து a இன் பெறுமானத்தைக் காண்க.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீரிழிவின் விளிம்பில்...!

இன்றைய காலகட்டத்தில் உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் நோய்களுள் நீரிழிவு நோயும் (Diabetes mellitus) ஒன்றாகும். இதற்கு எமது நாடும் வி திவிலக்கல்ல. உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டின்படி இலங்கையில் சுமார் 2 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எமது உடலினால் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே நீரிழிவு நோய் எனப்படுகின்றது. ஒருவரது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு வழமையாக இருப்பதிலும் பார்க்க கூடுதலாக, ஆனால் நீரிழிவு என உறுதி செய்வதற்குரிய பெறுமானத்திலும் பார்க்க குறைவாகக் காணப்படுகின்றது.

ஒருவர் நீரிழிவின் ஆரம்ப நிலையிலேயே இனங்காணப்படுவராயின்

Dr. ம.ஜெயந்தினி

அவரில் நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம். அல்லது தாமதிக்கச் செய்யலாம். அத்துடன் அவர்களில் குருதிச் சுற்றோட்டத் தொகுதி, கண் மற்றும் சிறுநீரகம் போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புக்களையும் தவிர்க்கலாம்.இது எவ்வாறு சாத்தியமாகின்றது என நோக்குவோம். சாதாரணமாக எமது உடலில் உள்ளெடுக்கப்படும் மாச்சத்தானது சிறு சிறு துண்டுகளாக உடைக்கப்பட்டு குளுக்கோசாக மாற்றப்படுகின்றது. இக்குளுக்கோசானது குருதியிலிருந்து கலங்களுக்குள் சென்று பயன்படுத்தப்படுவதன் மூலம் எமக்குத் தேவையான சக்தி கிடைக்கின்றது. அவ்வாறு கலங்களுக்குள் செல்வதற்கு சதையி எனப்படுகின்ற சுரப்பியினால் சுரக்கப்படும் இன்சுலின் எனப்படும் ஓமோனின் தொழில்பாடு இன்றியமையாததாகும். இந்த இன்சுலினின் தொழிற்பாட்டில் ஏற்படுகின்ற பாதிப்பினாலே கலங்களுக்குள் குளுக்கோசு செல்லமுடியாது குருதியில் அதனளவு அதிகரிக்கின்றது. எனவே ஒருவர் நீரிழிவின் ஆரம்ப நிலையிலேயே இனங்காணப்படுவராயின் தகுந்த உணவுப் பழக்க வழக்கங்கள், போதியளவு உடற்பயிற்சி, தேவையான மருத்துவ ஆலோசனைகள் என்பவற்றின் மூலம் அவரது இன்சுலினின் தொழிற்பாட்டை ஒழுங்கமைத்து குருதியிலுள்ள குளுக்கோசினளவை சாதாரண நிலையில் பேணுவதுடன் நீரிழிவு நோய் ஏற்படுவதையும் தடுக்கலாம்.

இன்று நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பலரும் வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்செயலாக இனங்காணப்பட்டவர்களாக, அல்லது நீரிழிவு நோயின் பாதிப்புக்களுக்கு உள்ளான நிலையில் அனுமதிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். தாமாகவே முன்வந்து குருதிப் பரிசோதனை செய்வதன் மூலம் தன்னை ஒரு நீரிழிவு நோயாளியென இனங்கண்டோர் ஒரு சிலரே. இந்த நிலை மாற்றமடைய வேண்டுமாயின் மக்களிடையே நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வொன்று அவசியமாகும்.

நீங்கள் நீரிழிவு நோயின் ஆரம்ப நிலையில் உள்ளீர்களா என இனங்காண்பது எவ்வாறு?

நீரிழிவு நோயின் ஆரம்ப நிலையில் உள்ள ஒருவர் பொதுவாக நீரிழிவு நோய்க்குரிய அறிகுறிகள் எதனையும் வெளிப்படுத்தமாட்டார். எனினும் வழமைக்கு மாறாக அதிகரித்த பசி, உடல் நிறை குறைவடைதல், கண் பார்வை மங்கலடைதல், நீண்டகாலமாகக் குணமடையாத புண்கள் காணப்படல், அடிக்கடி சிறு நீர் கழிக்க வேண்டி ஏற்படுதல் போன்ற அறிகுறிகளில் சிலவற்றை சிலகாலமாக நீங்கள் அவதானித்தால் உங்கள் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை அளவிடுவதற்குரிய குருதிப் பரிசோதனை செய்தல் அவசியமாகும்.

ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளாரா அல்லது அதன் ஆரம்ப நிலையில் உள்ளாரா என்பதை கீழ்வரும் குருதிப் பரிசோதனைகளில் ஏதாவதொன்றை மேற்கொள்வதன் மூலம் உறுதி செய்யலாம்.

1.Fasting Blood Sugar(FBS)

இப்பரிசோதனையானது ஒருவர் அண்ணளவாக 8 மணித்தியாலங்கள் உணவெதனையும் உட்கொள்ளாதவிடத்து குருதி மாதிரியானது எடுக்கப்பட்டு அதிலுள்ள குளுக்கோசின் பெறுமானம் அளவிடப்படுகின்றது. சாதாரண ஒருவரில் இப்பெறுமானமானது 80-100mg/dl ஆகவும், நீரிழிவு நோயாளியொருவரில் 126mg/dl ற்கு அதிகமாகவும் காணப்படுகின்றது FBS 100-125mg/dl ற்கிடையில் காணப்படுமாயின் அந்நிலையே நீரிழிவின் ஆரம்ப நிலை என உறுதி செய்யலாம்.

2.Oral Glucose Tolerance Test (OGTT)

இப்பரிசோதனையின் போது 75g குளுக்கோசைக் கொண்டுள்ள கரைசலொன்று உள்ளெடுக்கப்பட்டு 2 மணித்தியாலங்களின் பின்னர் குருதியிலுள்ள குளுக்கோசின் பெறுமானம் அளவிடப்படுகின்றது. சாதாரண ஒருவரில் அதன் பெறுமானமானது 140mg/dl ஐ விடக் குறைவாயும் நீரிழிவு நோயாளியாயின் 200mg/dl ஐ விடக் கூடவாயும் காணப்படுகின்றது. இப்பெறுமதியானது 140-199 mg/dl ற்கு இடையில் காணப்படுமாயின் அதனை நீரிழிவின் ஆரம்ப நிலை என உறுதி செய்யலாம்.

மேற்குறிப்பிட்ட குருதிப்பரிசோதனையை மேற்கொள்ள வேண்டிய அவசியமுடையோர் -

* 40 வயதிற்கு மேற்பட்டவர்கள்
* குடும்பத்தில் பெற்றோரோ அல்லது சகோதரர்களோ நீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள்
* அதிகரித்த உடற் பருமனுடையவர்கள்.
* உயர் குருதியமுக்க நோயினால் (Hypertension) பாதிக்கப்பட்டுள்ளவர்கள்
* குருதிலுள்ள கொலஸ்ரோலின் அளவு அதிகமாயுள்ளவர்கள்.
* கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு 3.5kg ஐ விட கூடுதலான நிறையுடைய குழந்தையை பிரசவித்தவர்கள்.
* Polycystic ovary syndrome இனால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள்.

இவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிக மாகும். எனவே நீங்கள் மேற்குறிப் பிட்ட நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சாத்தி யக்கூறுகளுள் ஏதாவதொன்றைக் கொண்டிருப்பினும், உங்களில் நீரிழிவு நோய்க்குரிய அறிகுறிகள் எதுவும் இல்லாதவிடத்தும் வருடத்திற்கு ஒரு முறையாவது குருதிப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் உங்கள் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவானது கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை உறுதி செய்தல் அவசியமாகும்.

நீரிழிவின் ஆரம்ப நிலையிலுள்ளோர் அது நீரிழிவு நோயாகப் பரிணமிப்பதைத் தடுப்பது எவ்வாறு?

1. ஆரோக்கியமான திட்டமிட்ட உணவுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுங்கள். நீங்கள் உங்களது உணவை உட்கொள்ளும்போது உங்களது வேலைக்கும் உடற்பயிற்சிகளுக்கும் தேவையான அளவுமட்டும் உட்கொள்ளுங்கள். இனிப்புப் பதார்த்தங்களான சீனி, சர்க்கரை, பழப்பாகு, சொக்லட், ஐஸ்கிறீம், பனங்கட்டி போன்றவற்றைத் தவிருங்கள். குறைந்த கிளைசீமிக் பெறுமானம் உள்ள உணவுகளை (உதாரணம் தவிட்டுடன் கூடிய தானியங்கள், காய்கறிகள்) உள்ளெடுங்கள். புரதச்சத்து அதிகம் கொண்ட உணவுப் பதார்த்தங்களான முட்டைவெண்கரு, மீன், சோயா, பருப்பு,நெத்தலிக் கருவாடு போன்றவற்றையும் உள்ளெடுக்கலாம். கொழுப்புச் சத்து அதிகம் கொண்ட உணவுப் பதார்த்தங்களைக் குறைத்து நார்ச்சத்து அதிகம் கொண்ட பழங்கள், தானியங்கள், பச்சைக் காய்கறிகள் போன்றவற்றைப் போதியளவு உட்கொள்ளுங்கள். அத்துடன் உங்கள் உணவிலுள்ள உப்பின் அளவை குறைத்து நாளொன்றிற்கு 6g (1 மேசைக் கரண்டி) ஆக பயன்படுத்தல் இன்றியமையாதாகும்.

2. நாளாந்தம் போதியளவு உடற் பயிற்சியில் ஈடுபடுங்கள்.

ஒரு நாளுக்கு 30 நிமிடங்கள் என்ற அடிப்படையில் வாரம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 5 நாள்களாவது உங்கள் உடம்புக்கும் மனதுக்கும் சுறுசுறுப்பைத் தரும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுங்கள்.

3. உங்கள் உடல் நிறையை உயரத்திற்கு ஏற்றவாறு பேணுங்கள்.

ஊடக அனுசரணை உதயன்

ஒருவரது உடல் நிறையானது அவரது உயரத்திற்கு ஏற்றவாறு உள்ளதா என அறிய உடற் திணிவுச் சுட்டி (Body Mass Index / BMI) பயன்படுகின்றது. ஒருவரின் உடற்திணிவுச் சுட்டியானது 23kg/m2 ஐ விட அதிகமாயிருப்பின் அல்லது இடுப்பின் சுற்றளவு 85cm ஐ விடக் கூடுதலாயிருப்பின் அவர் தகுந்த உணவுப்பழக்க வழக்கங்கள் மூலமும் உடற் பயிற்சியின் மூலமும் உடல் நிறையை குறைந்து உயரத்திற்கு ஏற்ற நிறையைப் பேணுதல் அவசியமாகும். இந் நிறைக் குறைப்பானது படிப்படியாக நிகழ்த்தப்படல் வேண்டும். ஒருவரின் ஆரம்ப நிறையிலிருந்து 5-10%மான நிறைக் குறைப்பானது 6 மாதகாலப்பகுதியில் எய்தப்படல் போதுமானது.


4.நீங்கள் புகைக்கும் பழக்கம் உடையவராயின் அப்பழக்கத்தை விட்டொழியுங்கள்.

(26ஆம் பக்கம் பார்க்க...)

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கணிதம் - II

நேரம்: 2 மணித்தியாலங்கள்





05. ஒரு பாடசாலையிலுள்ள குறிப்பிட்ட மாணவர்களின் உயரங்கள் தொடர்பாக பெறப்பட்ட தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| உயரம் cm | 110-115 | 115-125 | 125-130 | 130-135 | 135-140 | 140-155 |
|---|---|---|---|---|---|---|
| மீடிறன் (மா.எ) | 5 | 20 | 8 | 7 | 8 | 12 |

110-115 என்பது 110 அல்லது அதிலும் கூட ஆனால், 115 இலும் குறைவாகும்.

1) இப்பாடசாலையில் உயரம் கூடிய மாண்வரின் உயரத்தின் முழு எண் பெறுமானம் எவ்வளவு?
2) இத்தகவல்களைக் காட்டும் வலையுருவரையத்தை பூரணப்படுத்துக.




3) அதிலிருந்து மீடிறன் பல்கோணியை வரைந்து அதன் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள் எனக் காண்க.
4) 140cm இற்கு கூடிய உயரமுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாகத் தருக.

### பகுதி B - எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

06. 1) ஒருவன் தனது வீட்டு ஜன்னல் ஒன்றின் அலங்கார வேலைக்காக ஒரு நீளமான கம்பியில் இருந்து முதல் துண்டு 5cm, இரண்டாம் துண்டு 8cm, மூன்றாம் துண்டு 11cm என்றவாறு சிறிய துண்டுகளாக வெட்டினான். அவன் வெட்டிய மிகப் பெரிய துண்டின் நீளம் 50cm.
   1. அவன் வெட்டிய துண்டுகளின் நீளங்களை ஓர் ஒழுங்கு முறையில் எழுதினால் அது எவ்வகை விருத்தி எனக் காரணங்களுடன் கூறுக.
   2. அவன் வெட்டிய 10ஆவது துண்டின் நீளம் யாது?
   3. அவன் வெட்டிய துண்டுகளின் எண்ணிக்கை யாது?
   4. எவ்வளவு நீளமான கம்பியிலிருந்து இத்துண்டுகளை வெட்டியிருப்பான்.


07. 1) 1. ஆரை = r உம், உயரம் 4r உம் உடைய ஒரு கூம்பின் கனவளவிற்கும், ஆரை r உடைய ஒரு கோலத்தின் கனவளவிற்கும் இடையிலான விகிதம் யாது?
   2. மேலுள்ள விகிதத்தை திருப்திப்படுத்தும் ஆரை 15cm உடைய கம்பியின் உயரத்தைக் காண்க.
2) 1. நீளம் 12cm, அகலம் 8cm, உயரம் 5cm உடைய கனவுரு ஒன்றின் கனவளவைக் காண்க.
   2. உயரம் 16.9cm உடைய உருளை ஒன்றின் கனவளவும் மேற்படி கனவுருவின் கனவளவு சமனாயின், $r^2 = 480/16.9\pi$ எனக் காட்டுக.
   3. $\pi = 3.14$ என கொண்டு மடக்கை அட்டவணையை உபயோகித்து $r^2$ பெறுமானத்தைக் கிட்டிய முழு எண்ணில் காண்க. அதிலிருந்து r ஐ காண்க.

08. முக்கோணி PQR இல் S.T என்பன முறையே PQ. RP என்பவற்றின் நடுப்புள்ளிகளாகும். RS, QT என்பன G இல் இடைவெட்டுகின்றன.
   1) மேற்படி தரவுகளுக்கு பொருத்தமான ஒரு பரும்படிப் படத்தை வரைந்து தரவுகளை அதில் குறிக்குக.
   2) QR இற்கும் ST இற்கும் இடையிலான தொடர்பை உரிய காரணத்துடன் எழுதுக.
   3) முக்கோணி RGT = முக்கோணி QGS என நிறுவுக.
   4) முக்கோணி PRS இற்கு பரப்பளவில் சமனான A ஒன்றைக் காரணத்துடன் கூறுக.
   5) நாற்பக்கல் PSGT = முக்கோணி QGR என நிறுவுக.

09. 1) ஒரு வட்டத்தின் ஒரே துண்டக்கோணங்கள் சமன் என நிறுவுக.
   2) ABC எனும் முக்கோணியில் AB = AC ஆகும். C இலிருந்து AB இற்கு வரையப்பட்ட செங்குத்து முக்கோணி ABC யின் சுற்றுவட்டத்தை D யில் சந்திக்கின்றது.
      1. <DAB இற்கு சமனான கோணம் ஒன்றைக் காரணத்துடன் பெயரிடுக.
      2. <ABC = 90 - <DAB என நிறுவுக.
      3. < BAC = 2 < DAB என நிறுவுக.




10. 1) கமல் A யிலிருந்து வடக்கு நோக்கி 5km தூரம் சென்று B ஐ அடைந்தார். பின்னர் அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்று C ஐ அடைந்தார். A இலிருந்து C இன் திசைகோள் 054° ஆகும். பருமட்டான வரிப்படம் ஒன்று வரைந்து C இலிருந்து A இன் திசைகோளை காண்க.
   2) 18m அகலமான ஒரு வீதியின் ஓரத்தில் உள்ள வீட்டின் W எனும் ஜன்னலிலிருந்து அதற்கு நேர் எதிரே உள்ள 50m உயரமுள்ள கட்டடமொன்றின் உச்சியினது ஏற்றக்கோணம் 68°10' ஆகும். தரப்பட்ட தரவுகளை வரிப்படத்தில் குறிக்குக.
      1. AB இன் நீளத்தை கிட்டிய முழு எண்ணில் காண்க.
      2. W எனும் ஜன்னல் நிலத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் உள்ளது.
      3. ஜன்னலிலிருந்து பார்க்கும்போது கட்டடத்தின் அடி X இன் இறக்க கோணத்தைக் காண்க.




(நாளை ஆங்கிலபாட மாதிரி வினாத்தாள் வெளிவரும்)

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வளர்ச்சி....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் 91ஆவது இடத்தினை இலங்கை பிடித்திருக்கிறது. இது இவ்வாறிருக்க இலங்கையின் மனிதஉரிமை நிலைமைகள் மோசமாக உள்ளன எனக்கூறி கடந்த ஜூலையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருந்த ஜி.எஸ்.பி. பிளஸ் என அறியப்பட்ட ஏற்றுமதி வரிச்சலுகையினை நிறுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதிபர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அதிக அதிகாரங்கள் தினமும் குவிவதையிட்டு வெளிநாட்டவர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்களும் தொடர்ந்தும் தங்களது அதிருப்தியினை வெளியிடுகிறார்கள்.

அரசில் ராஜபக்ஷவினது சகோதரர்களுக்கு அதியுயர் பொறுப்புக்களும் பதவிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. மஹிந்தவின் 24 வயதுடைய மகன் நாமல் நாடாளுமன்றம் சென்றிருக்கிறார்.

''இவ்வாறாக இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினர் கொண்டிருக்கும் அதிகளவான செல்வாக்கு தவறாகப் பயன்படுத்தப்படுமிடத்து நாம் பெரும் பிரச்சினையினை எதிர்கொள்ளநேரும்'' என கொழும்பு பங்குச்சந்தையில் பெரியளவில் முதலீடுகளைச் செய்திருக்கும் மார்க் மொபியஸ் என்பவர் கூறுகிறார்.

இலங்கைத் தீவில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதுதான் தங்களது தற்போதைய முழுமுதல் பணி என அரசு கூறுகிறது. நாட்டில் ஊழல்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளும் அதிகாரிகள், தங்களது அயல் நாடுகளில் உள்ளதை விட இது குறைவானதே என வாதிடுகிறார்கள்.

எவ்வாறிருப்பினும் ஊழல்களை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற ஈடுபாட்டுடன் அரசு செயற்பட்டு வருகிறது என ஜனாதிபதியின் பேச்சாளர் லூசியன் ராஜகருணநாயக்க கூறு கிறார்.

தற்போது பொருளாதார மீட்சியினை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் இலங்கைக்கு மஹிந்த ராஜபக்ஷவினது தலைமைத்துவம் அத்தியாவசியமானது ஒன்று என தெற்கில் அரச வேலையில் உள்ள வர்களும் தனியார் துறையினரும் கூறுகிறார்கள்.

"ராஜபக்ஷ சகோதரர்கள் அதிகாரம் பொருந்திய பதவிகளிலும் பொறுப்புக் களிலும் இருக்கிறார்கள் தான். ஆனால் இது ஒரே இரவில் இடம்பெற்ற மாற்றமன்று. 1931 ஆம் ஆண்டு முதல் எங்களது குடும்பம் அரசியலில் ஈடுபட்டு வருகிறது'' என மஹிந்தவின் சகோதரியும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிரூபமா ராஜபக்ஷ கூறுகிறார். (உ)

*நன்றி: புதினப்பலகை.*

## அறிவித்தல்

*மானிப்பாய் கிராம உப அலுவலகம்*
*ஆதனப் பெயர் மாற்றம்*
*வட்டாரம் 04*
*சுதுமலை வீதி,*
*ஆதன இல.87*

வட்டாரம் 04 சுதுமலை வீதி ஆதன இலக்கம்.87இல் அமைந்துள்ள ஆதனமானது பெருமாள் காயம்புவும் பெண் செல்வராணியும் என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு கனகசிங்கம் உதயச்சந்திரன் பெண் வதனி என்பவர்களால் 648-19.05.1990ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி,எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து கனகசிங்கம் உதயச்சந்திரன் பெண் வதனி எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

## விதை உருளைக்கிழங்கு கொள்வனவு விலை நிர்ணயம் தொடர்பான விசேட கலந்துரையாடல்

*யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன பிரதிநிதிகளும் கொழும்பு றொபிக்கல் சிட் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் விதை உருளைக்கிழங்கு கொள்வனவு விலை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் செ.நவரட்ணராஜா தலைமையில் 11.11.2010 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு குப்பிளான் விவசாயிகள் சம்மேளன முன்றிலில் நடை பெறவிருப்பதால் அனைத்து உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர்களையும் கலந்து தம் கருத்துக்களை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.*

விவசாயிகள் கூடம், பலாலி
வீதி, திருநெல்வேலி.
தொடர்பு:- 0772477977
0789111553

தலைவர்,
யாழ்.மாவட்ட தேச வள
விவசாயிகள் சம்மேளனம்.

(105834)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பும், வள்ளுவர் சிலை திறப்பு விழாவும் சாவகச்சேரி பிரதேச சபையினால் கச்சாய் பொது நூலகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபைச் செயலாளர் வே. சிவராஜலிங்கம் தலைமையில் இடம்பெற உள்ளது. (த-15)


## விநியோகத்தர்கள் தேவை

PREMIER Brands

எமது நிறுவனம் PREMIER என்ற பெயரில் குடிநீர் / பழரசம் /அயடின் கலந்த உப்பு/ மலிகை பொருட்கள் / சோயாமீட்/ சோஸ் வகைகள் என்பன சந்தைக்கு விடப்பட்டுள்ளன. இது ISO/SLS/HACCP மற்றும் சுகாதார அமைச்சின் சான்றிதழ் பெற்ற உற்பத்திகளின் முன்னணி நிறுவனமாகும் எமது சந்தைப்படுத்தல் துறையை நாடு பூராகவும் பரவச் செய்வதற்காக வடக்கு / கிழக்கின் எல்லா பிரதேசங்களிலும் விநியோகத்தர்கள் தேவை.

பிரதேசம் : யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, வவுனியா உட்பட வடமேற்கு அனைத்து பிரதேசங்கள்

தேவைப்படுவது :
பிணைக் கட்டணம் செலுத்தக்கூடிய வசதி
சொந்தமான வாகனம் / களஞ்சிய வசதி
பிரதேசம் பற்றிய அறிவு

உயர்ந்த பிரதிபலன் மற்றும் விசேட சலுகைகள். மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள் அல்லது விண்ணப்பியுங்கள்

Premier Water Marketing (Pvt) Ltd
1067, 3ம் மாடி, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை.
Tel : 0777-641946, 0776-424393 Fax : 011 - 2774125

STANDARDS CERTIFIED COMPANY


உ

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக*

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் ஐப்பசி 26 ஆம் நாள் (12.11.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 9.37 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள உத்தராடமும் சப்தமியும் தனுலக்னமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி உருத்திராபதி கௌரிமனோகரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
*மகீத் குமார் (Maheeth Kumar)*
அவர்களுக்கும்

திரு.திருமதி நடராசா லீலாவதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
*சுபாஷினி (Subashini)*
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும்மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

*திரு.திருமதி*
*உருத்திராபதி கௌரி மனோகரி*
*இல.19, நாயன்மார் வீதி,*
*நல்லூர்.*
*தொ.பே: 0112-514275* (இருவீட்டார் அழைப்பு)

*திரு.திருமதி சரவணபவானந்தன் குடும்பம் (Civil Engineer)*
*திரு.திருமதி தவநேசன் குடும்பம் (கிராம அலுவலர்,J/101, நீராவியடி)*
*திரு.என்.ரவிதரன் (கதிரவன் நகைமாடம்)*
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
கொக்குவில் மேற்கு, கேணியடி லேன். கொக்குவில்.
தொ.பே: 0214590429, 0213207920


CeyLabs Solutions (Pvt) Ltd.

குறைந்த கட்டணத்தில் தரமான கண்காணிப்பு கமரா பொருத்தும் சேவை

வணிகநிறுவனத்தை பாதுகாக்க.

வேலையாட்களை கண்காணிக்க.

* இணையத்தினூடாக எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
* 100m வரை தெளிவான வீச்சு.
* காட்சி சேமிப்பு வசதி.
* சுழற்சி கமராக்கள்.
* Remote Zooming.

ஒரு வருட உத்தரவாதம்.

CeyLabs Solutions (Pvt) Ltd.
204, Brown Road,
Jaffna.
Hotline : 021-2221807
General : 077-2517223
Web : www.ceylabs.com
Email : contact@ceylabs.com


## நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான திருக்கல்யாண விழா



நாளை (12.11.2010) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று எம் பெருமானுக்கு திருக்கல்யாணம் நிறைவேற்றப்பட்டு வள்ளி,தெய்வானை சமேதராக அழகிய பூந்தண்டிகையில் விசேட தவில் நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க வீதியுலா வருவார். அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் விசேட நிகழ்ச்சியாக தென்னிந்தியக் கலைஞர்களுடன் யாழ். புகழ்பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

தவில்:
1.கலைமாமணி கோவிலூர் (தமிழ்நாடு) கே.ஜி.கல்யாண சுந்தரம்
2.லயஜன இளவல் என்.நந்தகுமார்
3.லயஜன பாலன் பி.எஸ். செந்தில்நாதன்
4. எஸ்.துளசிபரன்

நாதஸ்வரம்:
1. நாதஸ்வர வித்துவான் எஸ்.சிவகுமார் (வழக்கம்பரை-தொல்புரம்)
2. ஈழநல்லூர் நாதஸ்வர கானவினோதன் பி.எஸ்.பாலமுருகன்
3. நாதஸ்வர வித்துவான் கே.இராமதாஸ்
4. நாதஸ்வர வித்துவான் என்.கோபன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஒலி, ஒளி அமைப்பு சாள்ஸ் சஜீவன் (நவாலி)

நவாலி. திருக்கல்யாண திருவிழா உபயகாரர்

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

09.11.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2316

வெற்றி எழுத்து: J வெற்றி எண்கள்: 4 0 1 4 1 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J | 4 | 0 | 1 | 4 | 1 | 8 | ரூபா.16,095,900/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 0 | 1 | 4 | 1 | 8 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 0 | 1 | 4 | 1 | 8 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 1 | 4 | 1 | 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 127 |
| 4 பரிசுகள் | | | | | 4 | 1 | 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1277 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 8 | ரூபா. 100/= | பரிசுகள் 13035 |
| 6 பரிசுகள் | | | | | | | 8 | ரூபா. 20/= | பரிசுகள் 129184 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 0 | 1 | 4 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 4 | 0 | 1 | 4 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 132 |
| 9 பரிசுகள் | | 4 | 0 | 1 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1304 |
| 10 பரிசுகள் | | 4 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12942 |
| 11 பரிசுகள் | J | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 51653 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 12,006,740.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 17,195,717.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலமாகும் உறவு...



சந்திப்பு: அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஐ.நா.தலைமைச் செயலகத்துக்கு வந்திருந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகூ(இடது), செயலாளர் நாயகம் பான் கீ - மூனை சந்தித்துப் பேசுகிறார்.

# எரிமலைக் குமுறலால் வெளியேறிய பலர் குழந்தைகளைத் தவறவிட்டுப் பரிதவிப்பு

## இந்தோனேஷியாவில் அவலம்

ஜகர்த்தா,நவ.11

இந்தோனேசியாவில் மெராபி எரிமலையின் சீற்றத்துக்குப் பயந்து ஊரைக் காலி செய்த மக்கள் பலர் உறவினர்களையும், குழந்தைகளையும் காணாமல் தவித்து வருகின்றனர்.

இந்தோனேசியாவின் ஜாவாத் தீவிலுள்ள மெராபி எரிமலை கடந்த ஒரு மாதமாகக் குமுறிக் கொண்டிருந்தது. கடந்த இரண்டு வாரங்களாக அந்த எரிமலை தீக்குழம்பைக் கக்குவதோடு, சூடான சாம்பலையும் வாயுவையும் வெளியேற்றி வருகிறது.

தீக்குழம்புடன் சாம்பல் வீசியெறியப்பட்டதால் அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த 151 பேர் பலியாகியுள்ளனர். எரிமலையைச் சுற்றியுள்ள 18 கிலோ மீற்றர் பரப்பளவில் சாம்பல் படிந்துள்ளது.

காற்றில் சாம்பல் பறப்பதால் மக்கள் சுவாசிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். சமீபத்தில் பெய்த மழையால் சாலையில் படிந்த சாம்பல் படலம் சகதியாக மாறிவிட்டது.

மீண்டும் இந்த எரிமலை சீற்றமடையும் வாய்ப்புள்ளதால், எரிமலையைச் சுற்றியுள்ள 20 கிலோ மீற்றர் பகுதி அபாயகரமான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், எரிமலைக்கு அருகேயுள்ள கிராமங்களில் தங்கியிருந்தவர்கள் அவசரமாக ஊரை விட்டு வெளியேறினர்.

இந்த பதற்றத்தில் பலர், தங்கள் குழந்தைகளையும் உறவினர்களையும் தவறவிட்டு விட்டனர். மெராபி மலையை சுற்றியுள்ள பகுதியிலிருந்து, 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் ஜாவாவின் யோக்யகர்த்தா நகருக்கு அருகே குடிபெயர்ந்துள்ளனர்.

இவர்களில் ஆயிரம் பேர் தங்கள் உறவினர்களையும், குழந்தைகளையும் தவறவிட்டு விட்டு தேடிக்கொண்டிருக்கின்றனர்.

# மன்னராக முடி சூடிக்கொள்ள இருக்கும் காம்பியா ஜனாதிபதி

டக்கர்,நவ.11

ஆபிரிக்காவிலுள்ள காம்பியா நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர் யாஹியா ஜம்மே. 45 வயதான இவர் புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றினார்.

அதன்பின்னர் 2 ஆண்டுகளில் தேர்தலை நடத்தி அதில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போது அவர் 3ஆவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக ஆட்சி நடத்தி வருகிறார்.

கடந்த ஆண்டு எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்து விட்டதாக அவர் அறிவித்தார். தன்னை டாக்டராகவும், அறிஞராகவும் அழைத்துக் கொள்ளும் அவர் மன்னராக முடி சூட்டிக்கொள்ள விரும்புகிறார்.

அவர் மன்னராக முடிசூடிக் கொள்ளும் விழா விரைவில் நடக்கவிருக்கிறது. மன்னராக முடிசூடிக் கொள்வதற்கு ஆதரவு தேடுவதற்காக பழங்குடி இனத் தலைவர்கள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார்கள்.

யாஹியா ஆட்சியில் நாடு செழிப்பாக இருக்கிறது. அதனால் அவர் முடிசூடிக் கொள்வதற்குத் தகுதி இருக்கிறது என்று கூறி பிரசாரம் செய்து வருகிறார்கள்.

# வயல்வெளியில் ஓடி விளையாடினேன்

## இந்தோனேஷிய குழந்தை பருவத்தை நினைவு கூர்ந்த ஒபாமா



இந்தோனேசியா வந்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் (இடது), இந்தோனேசிய ஜனாதிபதி சுசீலோபாபாங் யுதோயூனோவும் இணைந்து தலைநகர் ஜகர்த்தாவில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசுகின்றனர்.

ஜகர்த்தா,நவ.11

இந்திய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா செவ்வாய்க் கிழமை இந்தோனேஷியா சென்றடைந்தார். அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

குழந்தை பருவத்தின்போது சுமார் 4 ஆண்டுகள் அவர் இந்தோனேஷியாவில் வாழ்ந்து இருக்கிறார். அப்போது நடந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார்.

ஜகர்த்தாவில் 6 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

இந்தோனேஷியா எனது வாழ்க்கையின் ஒரு பகுதி, இந்தோனேஷியரை எனது தாய் மணந்தார். என்னை மகனாகப் பெற்றார். பின் இங்கேயே (ஜகர்த்தாவில்) கண் மூடிவிட்டார்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் முஸ்லிம் நாடான இங்கிருந்து அமெரிக்கா சென்று தற்போது அந்நாட்டு ஜனாதிபதியாகி இருக்கிறேன்.

குழந்தை பருவத்தில் ஜகர்த்தாவில் வாழ்ந்தபோது பட்டம் பறக்க விட்டு இருக்கிறேன். நெல்விளையும் வயல்களில் வெறுங்கால்களுடன் சேற்றில் ஓடி விளையாடி இருக்கிறேன்.

இந்தோனேஷிய வருகையை ஏற்கனவே 2 தடவைகள் ஒத்திவைத்தேன். தற்போது கூட மெராபி எரிமலை வெடித்ததில் சாம்பல் பரவியது. இதனால் விமானப் போக்குவரத்தில் தடைஏற்பட்டுள்ளது.

ஆசியாவில் சக்திவாய்ந்த நாடுகளில் ஒன்றாக இந்தோனேஷியா திகழ்கிறது. வேற்றுமையில் ஒன்றுமை காண்பதில் இந்தோனேஷியா முன்னிலை வகிக்கிறது. இக் கொள்கையில் உலகத்துக்கே இது முன் உதாரணமாக உள்ளது.

எனவே 21ஆம் நூற்றாண்டில் இந்தோனேஷியா முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு ஒபாமா கூறினார்.

இதைத் தொடர்ந்து அவர் ஜகர்த்தாவிலுள்ள தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய இஸ்திக்பால் மசூதிக்குச் சென்றார்.

அங்கு ஒபாமாவையும், அவரது மனைவி மச்செலையும் இமாம் ஹாஜி முஸ்தபா அலி யாகூப் அழைத்துச் சென்றார்.

# பிரேஸில் சிறைச்சாலையில் கலவரம்; 18 கைதிகள் பலி!

பிரேசிலியா,நவ.11

பிரேஸில் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் 18 கைதிகள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

பிரேஸிலின் வடகிழக்கு மாகாணமான மாரான்ஹோகாவிலுள்ள மத்திய சிறைச்சாலை யில் 4 ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இங்கு திடீரென கலவரம் ஏற்பட்டதில் கைதிகளிடையே மோதல் ஏற்பட்டது.

இதில் ஒருவரை ஒருவர் பயங்கர ஆயுதங்களால் சரமாரி யாகத் தாக்கிக்கொண்டனர். இந்தக் கலவரத்தில் 18 கைதி கள் கொல்லப்பட்டனர். சிறைத் தலைமைக் காவலர் காயமடைந்தார். மேலும் 5 சிறைக்காவலர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கலவரத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. எனினும், அதிக எண்ணிக்கையிலான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதே கலவரத்திற்குக் காரணம் என உள்ளூர்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஒற்றுமை மேம்பாட்டுக் கட்சி மியான்மர் தேர்தலில் வெற்றி

## முறையான முடிவுகள் வெளியாகவில்லை

யாங்கூன், நவ. 11

மியான்மர் தேர்தலில், 80 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக ஆளும் ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டு கட்சி தெரிவித்துள்ளது.

மியான்மரில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 7ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது.

ஜனநாயக தேசிய லீக் கட்சி தலைவரான ஆங் சாங் சூகியை இத்தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவில்லை. எனவே, இவரது கட்சி இத்தேர்தலை புறக்கணித்து விட்டது. மற்ற கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையில் போட்டியிட்டனர்.

அனைத்துத் தொகுதிகளிலும் ஆளும் ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டுக் கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர். எதிர்க்கட்சியினருக்குப் பிரசாரம் செய்வதற்கும், மனுத் தாக்கல் செய்வதற்கும் போதிய கால அவகாசம் அளிக்கப்படவில்லை.

வெளிநாட்டுப் பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரும் அனுமதிக்கப்படவில்லை.

தற்போது நடந்த தேர்தலில், 80 சதவீத வாக்குகள் பெற்றுதான் அமோக வெற்றி பெற்றுள்ளது என ஆளும் ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டு கட்சியைச் சேர்ந்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## நடுக்கடலில்...



அந்தரிப்பு: அமெரிக்க சொகுசு கப்பலொன்று மெக்ஸிக்கோ கடற்கரைக்கப்பால் இயந்திரக் [illegible] 4,466 பயணிகள் உள்ளார்கள். இவர்களுக்கான உணவு, தண்ணீர் [illegible] நீக்கும்பொருட்டு அமெரிக்க கடற்படை நிவாரணப் பொருள்களோடு ஹெலிகொப்டர்களை அனுப்பி வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் வடக்கு வீரர்களுக்கு 4 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், நவ.11

வென்னப்புவவில் நடைபெற்றுவரும் தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில் வடமாகாண வீரர்கள் நான்கு பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

இலங்கை விளையாட்டு அமைச்சின் கீழ் உள்ள இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்தும் தேசிய கராத்தே சுற்றுப்போட்டி, வென்னப்புவ அல்பேட் பீரிஸ் அரங்கில்நடைபெற்றுவருகின்றது.

இப்போட்டியில் வடமாகாணத்துக்கு இரு வெள்ளிப் பதக்கங்களும் இரு வெண்கலப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.

13 வயது பெண்கள் பிரிவு காட்டாப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வே. சுகிர்தா இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும்-

11 வயது ஆண்கள் பிரிவு காட்டாப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கனுஷன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்-

பெண்கள் பிரிவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பி.துவாரகா, குமித்தேப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும்-

12 வயது ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆழிக்குமரன், குமித்தேப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (ஒ-23-16)

# சென்.ஜோன்ஸ் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 16 வயதுப் பிரிவினருக்குக்கான உதைபந்தாட்டப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி மோதியது.


இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் தன்னை எதிர்த்து விளையாடிய சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (த-23)




## சாதனை




மக்கள் வங்கி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 2010ஆம் ஆண்டுக்கான பிராந்திய மற்றும் வலய மட்டங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு குருநாகல் வெலகெதர மற்றும் மாலிகபிட்டிய மைதானங்களில் கடந்த 5 ஆம், 6 ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய கிரிக்கெட் அணியும் வலைப்பந்தாட்ட அணியும் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்தின. இதில் வலைபந்தாட்ட அணி மிகவும் திறமையாக விளையாடி - 4 புள்ளிகள் வித்தியாசத்தில் - இரண்டாம் இடத்தைப் பெற்று யாழ்.பிராந்தியத்துக்குப் பெருமை சேர்த்தது. (த)

# சென்.சாள்ஸ் ம.வியை வென்று சம்பியனாகியது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.கோட்டப் பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றுக் கோட்டமட்டச் சம்பியனாகியது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். சாள்ஸ் மகா வித்தியாலய அணி மோதியது.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காத நிலையில் கடுமையாக மோதிக் கொண்டன.

இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமலேயே முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது. இரு அணியினரும் சளைக்காமல் விளையாடினார்கள்.

இரண்டாவதுபாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல்களைப் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. போட்டி வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் தன்னை எதிர்த்து விளையாடிய சென்.சாள்ஸ் மகா வித்தியாலய அணியைவெற்றிகொண்டு கோட்ட மட்டச் சம்பியனானது. (த-23)

# கிரிக்கெட் போட்டி நாளை

யாழ்ப்பாணம், நவ.11

அகில இலங்கை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதினருக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

இப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

# முத்துத்தம்பி ம.வி. சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.11

நல்லூர் கோட்ட மட்ட பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று நல்லூர் கோட்ட மட்ட சம்பியனாகியது.

செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முத்துத்தம்பி மகாவித்தியாலய அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி 3:1 என்ற கோல் கணக்கில் தன்னை எதிர்த்து விளையாடிய யாழ். இந்துக்கல்லூரி அணியை வெற்றி கொண்டு நல்லூர் கோட்ட மட்டச் சம்பியனாகியது. (த-23)

# துசிகரனுக்கு வெள்ளிப்பதக்கம்



*யாழ்ப்பாணம், நவ.11*

*இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே அண்மையில் தியகமவில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தடகளப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.*

*ஆண்கள் பிரிவில் யாழ். பல்கலைக்கழக மாணவன் கு.துசிகரன் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.* (த-23)

# சிறந்த மெய்வன்மை வீரர்கள்

பருத்தித்துறை, நவ.11

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வலய மட்ட மெய்வன் மைப் போட்டிகளில் சிறந்த மெய்வல்லுநர் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆண்களில் 11 வயதுப் பிரிவில் வி.ரவிக்குமார் (கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை), 13 வயதுப் பிரிவில் எஸ்.மதுசன் (வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி), 15 வயதுப் பிரிவில் ஆர். தர்சன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), 17வயதுப் பிரிவில்ரி.தயாபரன் (கம்பர்மலை அ.த.க.வித்தியாலயம்), 19 வயதுப் பிரிவில் ரி.கோபிராஜ் (உடுப்பிட்டிஅமெரிக்க மிஷன் கல்லூரி), 21 வயதுப் பிரிவில் எஸ்.ரஜீவ்குமார் (விக்னேஸ்வராக் கல்லூரி) ஆகியோர் சிறந்த மெய்வல்லுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்களில் 11 வயதுப் பிரிவில் ஏ.அபிநயா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 13 வயதுப் பிரிவில் எஸ்.ஆரணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 15 வயதுப் பிரிவில் எஸ்.சுகன்யா (பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி), 19 வயதுப் பிரிவில் எஸ்.பஷீதி (பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சிந்துஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 21 வயதுப் பிரிவில் எஸ்.பாமினி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோர் சிறந்த வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள வலய மட்டப் பரிசளிப்பு விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (த-190)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.கோட்டப் பாடசாலைகளின் 14, 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**18 வயதுப் பிரிவு**

* கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
* நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலயம் எதிர் சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்.

**14 வயதுப் பிரிவு**

* யாழ்.மத்திய கல்லூரி எதிர் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.
* சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி. (த-23)





காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 13 ம் திகதி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் மோதவுள்ள தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்களும், வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவஜீவன் விளையாட்டுக்கழக வீரர்களும் தத்தம் பிரிவு பொலிஸ் அதிகாரிகளுடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாம் சொல்வது போல் நட, இல்லையேல் உனது வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும்"

## இப்படி மிரட்டல் விடுத்தமையால்தான் ஹைதர் லண்டனுக்கு ஓட்டம்

கராச்சி, நவ. 11

''பாகிஸ்தான் அணியைத் தோற்கடிப்பதற்காக சூதாட்டத்தில் ஈடுபடு. இல்லையேல், உனது வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் என்று என்னை மிரட்டியமையால்தான், தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலிருந்து பாதியிலேயே வெளியேறி லண்டனுக்கு சென்றுவிட்டேன்.''

- இவ்வாறு பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளரான ஹைதர் கூறியுள்ளார்.

கடந்த திங்களன்று துபாயில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான 5ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டியின்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இளம் விக்கெட் காப்பாளரான ஜூல்கர்னைன் ஹைதர் திடீரென மாயமானார்.



விசாரணையில், அவர் சூதாட்டக் கும்பலின் மிரட்டலுக்குப் பயந்து எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் லண்டனுக்குச் சென்றமை தெரியவந்தது. இந்த விவகாரம் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் மீண்டும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது ஒரு நாள் போட்டியில் கடைசிவரை களத்தில் நின்று பாகிஸ்தான் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றவர் ஹைதர்.

ஆனால், அந்த ஆட்டத்தில் அணியைத் தோற்கவைக்க சூதாட்டத்தில் ஈடுபடும்படி சூதாட்டக் கும்பல் அவரை அணுகியுள்ளது. இதற்கு அவர் மறுத்தமையால் தொலைபேசி உள்ளிட்ட வழிகளில் அவருக்கு கொலை மிரட்டல் வந்தது.

இதனால், பாதுகாப்புக் கேட்டு இங்கிலாந்தில் தஞ்சமடைந்துள்ள ஹைதர், இதுதொடர்பாக பாகிஸ்தான் செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியவை வருமாறு:-

சாப்பிடுவதற்காக இரவு ஹோட்டலை விட்டு வெளியே சென்றபோது, மர்ம நபர் ஒருவர் என்னைஅணுகினார். அவருடன் மேலும் இரண்டு மூன்று பேர் இருந்தனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது மற்றும் 5ஆவது ஆட்டங்களில் சூதாட்டத்தில் ஈடுபடும்படி அந்த நபர் வற்புறுத்தினார். எங்களுடன் ஒத்துழைப்புக் கொடு அல்லது பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டி வரும் என்று மிரட்டினார்.

தங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தால் நிறையப் பணம் சம்பாதிக்கலாம். இல்லாவிட்டால் அணியில் நீண்ட காலம் நீடிக்க முடியாது. வாழ்க்கை உனக்கு ரொம்ப கஷ்டமாகிவிடும் என்றும் மிரட்டினர். அந்த நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் உருது மொழி பேசினார்.

நாடு என்பது நமது தாய் மாதிரி. சூதாட்டத்தில் ஈடுபடுவது நாட்டை விற்பதற்குச் சமம். ஒரு முறை நாட்டை விற்று விட்டால் அதன் பிறகு வாழ்க்கையில் அதனைத் திரும்பப் பெற முடியாது. நான் எனது தாயை யும், தாய் நாட்டையும் விற்கவிரும்பவில்லை. அதனால்தான், அணியை விட்டு வெளியேறினேன். எனக்கு எது சரி என்று பட்டதோ அதைச் செய்துள்ளேன்.

4ஆவது ஒரு நாள் போட்டியின்போது அதில் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டேனோ அதனை நான் செய்யவில்லை. அணியில் வேறு எவருக்கும் சூதாட்டத்தில் தொடர்பு உண்டா, இல்லையா என்பது பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன். அதுகடவுளுக்குமட்டுமேதெரியும்.

என்னை மர்ம நபர் அணுகியமை - மிரட்டல் விடுத்தமை குறித்து அணி நிர்வாகத்திடம் சொல்வதில் எனக்குப் போதுமான நம்பிக்கை ஏற்படவில்லை. அவ்வாறு சொல்லி அணியின் சக வீரர்களுக்குப் பிரச்சினை ஏற்படுவதை நான் விரும்பவில்லை. இதனால்தான் அணி நிர்வாகத்திடமும் சொல்லாமல் என்பாட்டுக்கே வந்துவிட்டேன்.

தவறு செய்யாமல், குற்றவாளியாக இல்லாமல் இருந்தால் இங்கிலாந்தில் பாதுகாப்பு வழங்கப்படும் என்பது அந்த நாட்டு சட்டவிதியில் இருக்கிறது. இது எனக்குத் தெரியும். இதனால்தான் நான் அங்கு சென்றேன். ஆனால், இங்கிலாந்தில் அரசியல் தஞ்சம் பெறுவதுகுறித்து இன்னும் யோசிக்கவில்லை. வழக்கறிஞர் ஒருவரை நியமித்துக்கொள்ளக் கூட என்னிடம் போதுமான பணம் இல்லை. தற்போது எனது கவலையெல்லாம் லாகூரில் உள்ள எனது குடும்பத்தைப் பற்றித்தான்.

- இவ்வாறு ஹைதர் கூறினார்.

# மேற்கிந்திய -இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்கான கிண்ணம் அறிமுகம்!

கொழும்பு, நவ. 11

இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான ஈ.ஆர்.ஐ. டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான கிண்ணம், பீங்கானால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தங்கம் மற்றும் பிளாட்டினத்தால் கவசமிடப்பட்டுள்ளது.

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக் கிடையில் 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு 'இருபது-20' கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெறவுள்ளது.

முதலில் நடைபெறவுள்ள 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின், முதலாவது போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப்போட்டி குறித்த செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதன்போதே சம்பியன் கிண்ணம் காட்சிப்படுத்தப்பட்டது.




கிரிக்கெட் தொடர் ஒன்றில், பீங்கானினால் தயாரிக்கப்பட்ட கிண்ணம் வழங்கப்படுவது இதுவே முதல்தடவையாகும்.

இச்சுற்றுப்போட்டிக்கு என்வயர்மன்ட் ரிசோர்ஸ் இன்வெஸ்ட்மன்ட் நிறுவனம் பிரதான அனுசரணை வழங்குகிறது.

இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டெரன் சமி ஆகியோரும் இச்செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர்.

2005ஆம் ஆண்டு நடந்த போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கையில் கடைசியாக விளையாடியது. அதன் பிறகு தற்போது தான் அந்த அணி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

# அதிர்ச்சியால் ஓய்வு!

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் தமது முடிவை பாகிஸ்தான் அயின் விக்கெட் காப்பாளரான ஹைதர் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

பாகிஸ்தான் விக்கெட் காப்பாளரான ஹைதர் (வயது-24) 2007ஆம் ஆண்டு அணியில் முதல்முறையாக இடம்பிடித்தார். அப்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான 'இருபது-20' கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்தது.

இதனால், அணியிலிருந்து கழற்றிவிடப்பட்ட ஹைதர், பின்னர் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடி, தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்தார்.

ஆட்டத்திறன் இழந்திருந்த விக்கெட் காப்பாளரான கம்ரன் அக்மலுக்குப் பதிலாக, 3 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பாகிஸ்தான் அணிக்கு அழைக்கப்பட்டார் ஹைதர். மூன்று மாதங்களுக்கு முன்பு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் அறிமுகமானார். இந்த ஒரே டெஸ்டில் மட்டுமே ஆடியிருக்கும் அவர் அதில் முதல் இன்னிங்ஸில் 'டக்-அவுட்' முறையில் ஆட்டமிழந்தாலும், 2ஆவது இன்னிங்ஸில் 88 ஓட்டங்களைக் குவித்தார்.

இதேபோல் இதுவரை 4 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 48 ஓட்டங்களும், மூன்று 'இருபது-20' போட்டிகளில் விளையாடி 23 ஓட்டங்களையும் சேர்த்துள்ளார்.

இந்நிலையில் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் தமது முடிவை நேற்றுமுன்தினம் அறிவித்தார். இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தானில் உள்ள எனது குடும்பத்தினருக்கு இன்னும் மிரட்டல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதேபோல எனக்கும் நிறைய நெருக்கடியும், மிரட்டல்களும் வருகின்றன. இதனை என்னால் சமாளிக்க முடியவில்லை.

எனவே, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற முடிவு எடுத்திருக்கிறேன். இது தவிர சிறந்த வழி எதுவும் இல்லை. இந்தச் சூழ்நிலையில் என்னால் விளையாட முடியாது.

ஆனால், முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து விளையாட விரும்புகிறேன். எனது முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு விரைவில் அனுப்பி வைப்பேன்'' - என்றார்.




# தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தார் அம்லா! சச்சின், ஷேவாக் இருவரும் ஒருபடி முன்னேற்றம்

துபாய், நவ. 11

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடிய தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லா முதல் இடத்தைப் பிடித்துள்ளார். அவர் 854 புள்ளிகளைப் பெற்றுள்ளார். சக வீரரான டிவில்லியர்ஸ் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். அவர் 809 புள்ளிகளைக் பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் வீரர்களின் தர வரிசைப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதில், தென்னாபிரிக்க வீரரான அம்லா முதலிடத்தைப் பிடிக்க, இதுவரை முதலிடத்திலிருந்த சக வீரரான டி வில்லியர் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்.

மைக்ஹஸி (ஆஸ்திரேலியா) 796 புள்ளிகளைப் பெற்று 3ஆவது இடத்திலும், டோனி (இந்தியா) 786 புள்ளிகளைப் பெற்று 4ஆவது இடத்திலும், கிறிஸ்கெய்ல் (மேற்கிந்தியத் தீவுகள்) 5ஆவது இடத்திலும், டில்ஷான் (இலங்கை) 6ஆவது இடத்திலும் உள்ளனர். ஷேவாக், சச்சின் இருவரும் முறையே 7, 8ஆவது இடங்களில் உள்ளனர்.

பந்து வீச்சுத் தர வரிசையில், நியூஸிலாந்து அணித்தலைவர் வெற்றோரி 766 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார். சகீப் அல்ஹசன் (பங்களாதேஷ்) 681 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்திலும், ஸ்வான் (இங்கிலாந்து) 669 புள்ளிகளைப் பெற்று 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

பிராட் (இங்கிலாந்து), குலசேகர (இலங்கை), பிரைஸ் (சிம்பாப்வே), போலிஞ்சர் (ஆஸ்திரேலியா), மில்ஸ் (நியூஸிலாந்து), ஆண்டர்சன் (இங்கிலாந்து) ஜேக்கப் ஓரம் (நியூஸிலாந்து) ஆகியோர் 4 முதல் 10ஆவது இடங்களில் உள்ளனர்.

# விசாரணைகள் ஆரம்பம்

ஹைதர் விவகாரத்தை சர்வதேச கிரிக்கெட் சபையும் (ஐ.சி.சி.) உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. ஸ்கொட்லாந்து பொலிஸாரும், ஐ.சி.சியின் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் ஹைதரிடம் சூதாட்டத் தரகர்கள் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தினார்கள்.

லண்டனில் தற்காலிகமாக ஒரு மாதம் தங்கியிருக்கத் திட்டமிட்டிருக்கும் ஹைதரிடம் நாடு திரும்பியதும் விசாரணை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவுசெய்துள்ளது.

மிரட்டலைத் தொடர்ந்து லாகூரில் உள்ள ஹைதரின் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு விளிம்பில் .......

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. நீங்கள் உயர் குருதியமுக்க நோயி னால் (Hypertension) பாதிக்கப்பட்டிருப்பின் உங்கள் குருதி அமுக்கத்தைக் கிரமமாகப் பரிசோதிப்பதுடன் அதற்குரிய மருந்துகளை ஒழுங்காக உட்கொள்வதும் அவசியமாகும்.

6. உங்கள் குருதியிலுள்ள கொலஸ்ரோலின் அளவு அதிகரித்திருப்பின் தகுந்த உணவுப் பழக்க வழக்கங்களின் மூலமும், மருந்துப் பாவனையின் மூலமும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்.

7. உங்கள் மனதை மகிழ்ச்சியாக எது வித உளநெருக்கீடுகளுக்கும் இடம் கொடுக்காது அமைதியாக வைத்திருங்கள். இதற்கு யோகா அப்பியாச முறைகள், தளர்வுப்பயிற்சிகள் என்பன பெரிதும் உதவுகின்றன.

8. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளின் மூலம் உங்கள் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை சாதாரண நிலைக்கு கொண்டுவர முடியாத விடத்து வைத்திய ஆலோசனைப்படி மருந்துகளை உள்ளெடுப்பதன் மூலம் சாதாரண நிலைக்கு கொண்டு வரலாம்.

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நீரிழிவு நோயின் ஆரம்ப நிலையில் உள்ள ஒருவர் நீரிழிவு நோய் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்வதுடன் அதனுடன் சேர்ந்த ஏனைய பாதிப்புக்களான மாரடைப்பு (Heart attack), பாரிசவாதம் (Stroke), சிறுநீரகம் பழுதடைதல் (Kidney Failure) போன்றவற்றையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

★

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்
A/L.2011.
Paper Class
★அரசியல்
ஆரம்பம் 12.11.2010
Mon,Fri 6.15 am
s.s.செந்தூரன்
★அளவையியல்
Mon.Thur 4.pm
s.ரோபேஷியன்
★புலமைப் பரிசில்
G.R 05 (ஆசிரி பரீ வைகுந்தன்)
*ICT,சிங்களம்

## மரண அறிவித்தல்கள்

### லயன் ச. இராசரத்தினம் J.P



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இராசரத்தினம் நேற்று முன்தினம் (09.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் இராசம்மா, நாகம்மா, பொன்னம்பலம், லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலேந்திரன் (பிரான்ஸ்), தாரணி (பிரான்ஸ்), நகுலன் (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் தந்தையும், அஜந்தினி (பிரான்ஸ்), தேவசகாயம் (பிரான்ஸ்), காந்தரூபன் (தேர்தல் அலுவலகம், யாழ்.) ஆகியோரின் மாமனாரும் திலோயினி, தீபிகா, தினேகா, திரிசிகா, சுபனா, பிரஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு, கொடிகாமம்.* (சி/572779)

தகவல் : குடும்பத்தினர்.

### இராமலிங்கம் தில்லைநாதன்



பிறவுண் வீதி, 1ம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 2ம் ஒழுங்கை, புதிய குடியிருப்பு, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும்கொண்ட இராமலிங்கம் தில்லைநாதன் (04.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பொன்னம்பலம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சிவகுமாரின் பாசமிகு தந்தையும், சுவிதாவின் அன்பு மாமனாரும், சிவலக்சி, கஜலக்சன், சிவப்பிரியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 05.11.2010. வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

687/6,மானிப்பாய் வீதி, ஒட்டுமடம். (105840)

தகவல். *கமலாதேவி (மனைவி), சிவகுமார் (வள்ளி-மகன்).*

## கடை வாடகைக்கு

*இல. 19, சிறாம்பியடி லேனில் இரண்டு மாடிக் கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.*

தொடர்பு-0778429303, 0778958263

## CALL SERVICE
T.P : 021-222 4459, 0774192275

Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

## கணனி வகுப்புகள்
T.P : 021-222 4459, 0774192275

*MS Office, DTP, Hardware Technology, Internet & E-Mail, Visual Basic,* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும், *(Personal & Group Classes)* பரீட்சை முடிவின் பின்னர் பெறுமதியான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம். தொழில் புரிபவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. *(DURATION 01,MONTH)*

STR COMPUTER SYSTEM
384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள LH 20 டொயோடா ஹய் ஏஸ் 4 கதவு வெள்ளை வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0773510064,0772683602

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
*செல்வி ஆரபி பாலசிங்கம்*
அவர்களின் பெரிய தாயார்
திருமதி **நரசிங்கவேல் அம்பாலிகை**
அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்

கிளி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,
4 ஆம் கட்டை, பூநகரி.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் மகேந்திரன்



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேந்திரன் கடந்த 01.11.2010 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், ரஞ்சினி (கனடா), சாந்தினி, ரவீந்திரன் (லண்டன்), சுபாசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசம்மா, சின்னத்துரை, மயில்வாக னம் ஆகியோரின் பெறாமகனும் இராமலிங்கம், கனகரத்தினம், சின்னம்மா, மாணிக்கம் ஆகியோரின் மருமகனும் ரவீந்திரராசா (அராலியூர்), சிவநேசராசா ஆகியோரின் மைத்துனரும் விதுஷன், சமுத்திரா ஆகியோரின் சித்தப்பாவும் சுபீஷரன் சுபர்ணிஹா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2010) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி பி.ப. 6 மணிக்கு ஜேர்மனியில் Haupt fridorf, In mamuel - Kaiit str - 5244803 böchm முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.
*T.P:021 321 1766* (சி/572784)

தகவல்: சுப்பிரமணியம் (தந்தை)

### திருமதி தம்பிராஜா சிவபாக்கியம்

மடத்தடி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராஜா சிவபாக்கியம் நேற்று முன்தினம் (09.11.2010) செவ்வாய்க்கிழமை சாயிபதமடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பிராஜாவின் (சமாதான நீதவானும் மரண விசாரணை அதிகாரியும்) அன்பு மனைவியும் பிரான்ஸில் வசிப்பவர்களான பத்மினி, பவானி, சிறீதரன், பாமா, சிறீரங்கன், சிறீஜெகன், சிறீகாந்தன் (சுவிஸ்), ராகினி (திருகோண மலை) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசிங்கம் (இந்தியா) காலஞ்சென்ற பாலகிருஷ்ணர் மற்றும் மிதுலா, ராஜரட்ணம் சந்திரிகா (சுவிஸ்), சுந்தரலிங்கம் (மேலதிக பணிப்பாளர், தொழில்நுட்ப வியல் கல்லூரி, யாழ்ப்பாணம்) கமலேஸ்வரி, சசிரேகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல் :*
வை.சுந்தரலிங்கம் *(மருமகன்) தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

*76, கிறீன் றோட், திருகோணமலை.* (105831)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கணபதிப்பிள்ளை பொன்னையா**
(கரணவாய் சோளங்கன்)

தோற்றம்: 12.01.1935
மறைவு: 04.11.2008

எங்கள் ஐயா!
அன்பிற்கு இலக்கணமாய்
பண்பிற்கு பிறப்பிடமாய்
ஏழைகளுக்கு உதவி செய்ய
நல்லமனம் உள்ளவராய்
வளமுடன் வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மை வழிநடத்தி சென்றவரே
நீங்கள் எமது வாழ்வில் பொன்னாக
இருந்து ஒளி வீசியவரே
அன்றும் எமக்கு காட்டிய அன்பும் ஆதரவும்
இன்றும் எம்மை காத்து வழிநடத்துகிறது
நீங்கள் இறுதிவரை எம்மோடு
இணைந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடை நடுவில் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்கள் ஐயா

என்றென்றும் உங்கள்
நீங்காத நினைவில் வாடும்:
*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பெறாமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்.*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

## ஹாக்ரோஸ் 'டில்லர் கோல்ட்'



2009 ஆம் ஆண்டு பரீட்சார்த்தமாக ஹாக்ரோஸ் 'டில்லர் கோல்ட்' எனது வயலுக்குப் பிரயோகித்து குலவரகு உட்பட சகல அகன்ற இலை களைகள் மற்றும் கோரை இனங்கள் உட்பட அனைத்துக்களைகளையும் முற்றாகக் கட்டுப்படுத்தினேன்.
சின்னப்பிள்ளை வேலாயுதம்

இவரைப் போலவே பல விவசாயிகள் ஹாக்ரோஸ் டில்லர் கோல்ட் பாவித்து பயன் பெற்றுள்ளார்கள்.




வயலின் செழுமைக்கும் பொன் போன்ற விளைச்சலுக்கும் ஹாக் ரோஸ் 'டில்லர் கோல்ட்'

ஹரிசன்ஸ் கெமிக்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
330, டி.பி.ஜயா மாவத்தை, கொழும்பு-10.
யாழ்.நகரில் பிரதான விநியோகஸ்தர்:
ஸ்ரீ சச்சிதானந்த என்ரபிறைஸ் கைதடிச் சந்தி, கைதடி.
021 3213253, 0772991823.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடைச் சிறையில் 'ஜம்பர்'களுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு,நவ.11

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 'ஜம்பர்களுக்கு' (சிறைச்சாலை உடை) நிலவும் தட்டுப்பாடு காரணமாக ஆயிரம்பேர் வரையிலான கைதிகள் சாதாரண உடைகளுடன் காணப்படுவதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், குறைந்த கால சிறைத் தண்டனைக்கு உள்ளாகியுள்ள சிறைக் கைதிகளே இவ்வாறு சாதாரண உடைகளுடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும் எண்ணிக்கையிலான கைதிகள் சாரங்கள் மற்றும் அரைக்காற்சட்டைகளை அணிந்துள்ளதைக் காணமுடிவதுடன் உடம்பின் மேற்பகுதியை மூடி உடையணிவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைய ஒவ்வொரு சிறைக்கைதியும் ஜம்பர் அணிய வேண்டும் என்பது விதியாக உள்ளபோதிலும் தினசரி சிறைத் தண்டனைகளைப் பெற்றுச் சிறைக்கு வரும் அனைவருக்கும் ஜம்பர்களை வழங்கும் வசதி இல்லை என சிறைச்சாலைகள் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் கருத்துத் தெரிவித்தார்.

# கந்தசஷ்டி விரதம்

## இன்று (11.11.2010)வியாழக்கிழமை கந்தசஷ்டி விரதம் நிறைவு பெறுகின்றது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது



''வையந் தோறும் தெய்வந் தொழு'' என்பது ஔவையார் அருளிய கொன்றை வேந்தன் அருளிய இவ்வையத்தே தோன்றிய ஒவ்வொரு மனிதரும் கடவுளை தொழு வது இன்றியமையாதது.

இந்து மக்களாகிய நாம் உருவ வழிபாட்டின் மூலம் எமது பக்தியை வளர்த்தெடுக்கின்றோம். இந்த உருவ வழிபாட்டை எம்மிடையே உனர்த்தி மெருகூட்டுவது விரதங்களே யாம்.

விரதமாவது நோன்பு, உபவாசம், எனப் பல பொருள் படுகிறது.

விரதத்தினை மேற்கொள்ளும்போது உணவினை ஒரு பொழுதேனும், இருபொழுதேனும், முழுப்பொழுதேனும் உணவினை விடுத்து விரத்ததை அனுஸ்டிக்க வேண்டும். முழு நாளும் உணவை விடுத்து உபவாசம் இருத்தல் என்பது விரதத்தின் சிறப்பாகும்.

முருகப் பெருமானுக்குரிய விரதங்கள் அனைத்தும் கந்த விரதங்கள் ஆகும். இவை சுக்கிர விரதம் (வெள்ளிக்கிழமை விரதம்) கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம், ஆகியன்.

இவற்றுள் கந்தசஷ்டி விரதமானது ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாள்கள் கந்தசஷ்டி விரத நாட்களாகும்.முருக பக்தர்கள் இவ் விரதத்தை கடுமையாக அனுஷ்டித்து வழிபடுகின்றனர்.

அனுஷ்டிக்கும் முறையாவது கந்தசஷ்டி ஆறு நாட்களும் உணவின்றி உபவாசமிருப்பர். முதல் நாள் அமாவாசையன்று ஒரு நேர உணவுண்டு உபவாசமிருந்து மறுநாள் பிரதமை அதிகாலை நீராடி நித்திய அனுட்டானங்களை முடித்துக் கொண்டு ஆலயம் சென்று அங்கேயே ஆறு நாட்களும் பஜனை, தியானம், புரானம் கேட்டல் ஆகிய புண்ணிய செயல்களை மேற்கொள்ள வேண்டும். ஆலயத்தில் வழங்கப்படும் பிரசாதத்தையே உண்பர். 7ம் நாள் அதிகாலை நீராடி நித்திய அனுட்டானங்களை நிறைவேற்றி அடியார்களுக்கு உணவளித்து பாரனை செய்வார். ஆலயங்களில் தர்ப்பை அணிந்து காப்புக் கட்டி சங்கல்ப்பம் செய்து கொண்டும் விரதமிருக்கலாம். நிறை நாளில் தர்ப்பையுடன் தாம்பூல தட்சனை குருவிற்கு வழங்குவர்

முழு உபவாசம் இருக்க இயலாதவார்கள் 5 நாள்கள் ஒரு பொழுது உணவு உட்கொண்டு சஷ்டியன்று முழு உபவாசமிருந்து மறுநாள் பாரனை செய்யலாம்.

இவ்வரதம் ஆறு ஆண்டுகள் அல்லது 12 ஆண்டுகள் கைக்கொள் ள வேண்டும்.

இவ் விரதத்தை இந்து மக்களாகிய நாமும் எமது இயல்பிற்கு ஏற்ப தமிழ் கடவுளாகிய முருகனை நினைந்து இருந்து பரிமைகள் கிடைத்து மகிழ்வோமாக.

# வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் பாதசாரிகள் பயணிப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர் சந்தியில் தேங்கி நிற்கும் மழை நீரால் பொது மக்களும் வாகனங்களும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் ஸ்ரான்லி வீதியில் முக்கிய சந்தியில் பெரியளவிலான குழி ஒன்று ஒரு மாதத்துக்கும் மேலாக காணப்படுகின்றது. தற்போது பெய்துவரும் மழையால் மேற்படி குழிக்குள் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனால் மேற்குறிப்பிட்ட வீதியில் வாகனங்கள் போக்குவரத்துச் செய்யும் வேளையில் குறிப்பிட்ட குழிக்குள் வாகனச்சில்லு விழும்போது அவ்வீதியால் செல்லும் பாதசாரிகள் மீது அசுத்தமான நீர் தெறிக்கின்றது. அத்துடன் அருகில் உள்ள வர்த்தக நிலையங்களும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக வீதி அபிவிருத்தி திணைக்களம் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-201-86)

# போதனா வைத்தியசாலையில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குடி தண்ணீருக்குப் பெரும் தட் டுப்பாடு நிலவுவதாக நோயாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்குரிய குடிதண்ணீர் விநியோகம் கடந்த சில நாள்களாக யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டதால் வைத்தியசாலையில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடிதண்ணீர் தட்டுப்பாட்டினால் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதனால் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் உள்ள குடிதண்ணீர் விநியோகக் குழாய் மூலம் குடிதண்ணீரை எடுத்துச் சென்று பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணப் பணியின் போது நிலத்தடி தண்ணீர்க் குழாய் ஒன்று சேதமடைந்ததால் உள்ளகத் தண்ணீர் விநியோகப் பணிகளும் நேற்றுப் பாதிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## நால்வர் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ.11

மீசாலைப் பகுதியில் வீதியோரத்தில் குப்பை கொட்டிய நான்கு பேர் பொலிஸ் விசேடகுழுவிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்த நால்வரும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

(207)

# பாடசாலைகளில் உணவூட்டல் திட்டம் அடுத்த ஆண்டிலும் நடைமுறையில்

## ஐ. நா. உணவுத் திட்டம் தெரிவிப்பு

பருத்தித்துறை, நவ.11

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் அடுத்த ஆண்டும் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் என ஐக்கிய நாடுகள் உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

ஏனைய மாவட்டங்கள் சிலவற்றில் பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை அடுத்த ஆண்டு நிறுத்தவுள்ள போதிலும், யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் வலய ரீதியாக பாடசாலை அதிபர்களுக்கும், பாடசாலையில் இந்நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கும் பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சித்திட்ட பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதே வேளை யாழ். மாவட்ட வலயக்கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு கொழும்பிலுள்ள கல்வி அமைச்சில் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளன.

மேலும் இந்த உணவுத் திட்டத்தில் மாணவர்களுக்கு மரக்கறி கொள்வனவுக்காக வழங்கப்பட்டு வரும் இரண்டு ரூபாவை அதிகரிப்பது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. (201-190)


யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

பொதுக் கூட்டம் - 2010

தலைவர் :- திருமதி வே.பேரின்பநாதன்
(அதிபர். யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி)

இடம் :- கல்லூரி மண்டபம்

காலம் :- 17.11.2010

கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 17.11.2010 (புதன்கிழமை) பி.ப. 3 மணிக்கு நடைபெறவிருப்பதால் இக்கூட்டத்துக்கு அனைத்து பழைய மாணவர்களையும் வருகை தந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோன்.

திருமதி வே.பேரின்பநாதன்
அதிபர், யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

(சி/572/85)



UNIVERSITY OF JAFFNA TEACHER'S ASSOCIATION

**UJTA Seminar**

*Topic : Upgrading the University*

*Speakers : Open to VC candidates and other Academicians*

*Date : 11.11.2010 (Thursday) at 2.30 p.m.*

*Participants : Open to Members of the University Community.*

*Vanue : A Hall near UJTA office*

*All are invited*

Prof. C. Elankumaran
President / UJTA


## மனனப் போட்டியில் பொஸ்கோ மாணவி 2ஆம் இடம்



யாழ்ப்பாணம், நவ.11

மாகாண மட்ட திருக்குறள் மனனப் போட்டியில் யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தரம் 4ஐச் சேர்ந்த திஷானா கற்லின் ரவிச்சந்திரன் என்னும் மாணவியே இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மேற்படி போட்டி வவுனியாவில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


**தவறிவிட்டது**

அருளையா குலனேஸ்வரன் (சிவாஜி) ஆகிய எனது தே.அ.அட்டை, விசேட அடையாள அட்டை, காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப்பத்திரம், நகை அடைவு சீட்டை மற்றும் ஒருதொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் கட்டைப்பிராய்க்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் [illegible] தருமாறு தயவாக அறியத்தருவதுடன் சன்மானம் வழங்கப்படும். விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. தொ.பே. 0777111740



# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் நல்லதம்பி

### (மேசன் இராசேந்திரம்)

போக்கறுப்பு, முள்ளியானையைப் பிறப்பிடமாகவும், தாவளை, இயற்றாளையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நல்லதம்பி நேற்று (10.11.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தவமலர்- குணரத்தினம் (CTB), செல்வமலர், இராசமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுந்தரலிங்கம், சிவசோதி, சிவராசா, சற்குணநடராசா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.11.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 2 மணியளவில் கொடிகாமம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவளை, இயற்றாளை, கொடிகாமம்.* (105855) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்திலும் இந்த விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

நீர்வேலியில் கிராம முன்னேற்றச் சங்கத்தில் இந்த விசாரணை நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் அது மாற்றப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

இன்று ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்க 80 பேர் வரையிலானோர் தமது விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். எனினும் பதிவு செய்யாதவர்களும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியங்களைப் பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

(ஒ-15-72)

## அல் ஜசீராவில் போர்க் குற்ற ஆதாரங்கள்

கொழும்பு,நவ.11

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமையை சித்திரிக்கின்றன என்று கூறப்படும் புகைப்படங்கள் அல்- ஜசீரா தொலைக்காட்சிக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படு கிறது.

ஆயினும் இவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது என்று இத்தொலைக்காட்சி சேவை தெரிவித்துள்ளது.

தமிழர்கள் சிலரிடம் இருந்து இப்படங்கள் அல் ஜசீராவுக்கு கிடைத்துள்ளன.

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னிப்பு குறித்து ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்'' என்றும் அவர் அனோமா பொன்சேகாவிடம் உறுதியளித்துள்ளார்.

இரண்டாவது தடவையாக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்பதை முன்னிட்டு சரத்பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கப்படலாம் என்று பீடாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டனர்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மேல் நீதிமன்றத்தில் நடந்தது. சரத்பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா மேல் நீதிமன்றத்திற்கு நேற்று வருகை தந்திருந்தார். (இ-05)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5,221 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 594 பேர் சிறுவர்கள்.

புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள இந்த முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைந்து மீண்டும் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான சகல உதவிகளையும் இந்தக் குழு முன்னெடுக்க உள்ளது. இந்தக் குழுவின் செயற்பாடுகளுக்கென பல கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்று தெரிவித்தார். (எ-14)

## கட்டுநாயக்கா முதலீட்டு வலயத்தில் தீ

கட்டுநாயக்க முதலாம் முதலீட்டு வலய தொழிற்சாலை ஒன்றில் நேற்றுப் பகல் தீவிபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீவிபத்து உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இந்தச் சம்பவத்துக்கு மின் சார ஒழுக்கே காரணம் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பருவால்கரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ரி.ஆர்.மானவடு, தெரிவித்ததாவது:-

சிறுமி கடைக்குச் சென்று திரும்புகையில் 21 வயதுடைய திருமணமான சந்தேகநபர் ஒருவர் கடத்திச்சென்று வல்லுறவில் ஈடுபட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து எமக்குக் கிடைத்த இரகசிய தகவலில் பேரில் பாதிக்கப்பட்ட சிறுமியை மீட்டோம். சந்தேகநபரான இளைஞனையும் கைது செய்தோம். பாதிக்கப்பட்ட சிறுமி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவ சோதனைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் - என்று குறிப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்

## விபசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகில் உள்ள குப்பைகளையெல்லாம் இங்கு கொண்டு வந்து அவற்றை சட்டரீதியாக்கி முறையாக ஒழுங்குபடுத்தவே அரசு முயற்சி செய்கிறது. அதற்காகவே சூதாட்ட விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை அரசு கொண்டு வருகின்றது.

இந்த நாட்டில் சட்டவிரோதமான முறையில் இயங்கிவரும் விபசார விடுதிகளை முறையாக ஒழுங்குபடுத்தவும் இச்சட்டமூலம் ஊடாக அரசு முயற்சி செய்கிறது. வெளிநாட்டுப் பெண்கள் பலர் இங்கு விபசாரத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

விபசாரத் தொழில் உள்ளிட்ட பல மோசமான விடயங்களை முறையாக ஒழுங்குபடுத்தி அதில் இருந்து நாட்டுக்கு அதிக பணம் கிடைக்கின்றது என்று அரசு நாட்டுக்குச் சொல்லப் போகின்றது. இது ஒரு தர்மராஜ்யம் அல்ல. - என்றார்.

(ஒ-சி-07)

## அத்துமீறி நாவற்குழியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார அமைச்சுக்கு அறிவித்துள்ளார் எனவும் சபையின் யாழ். மாவட்ட பொது முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

''மீளக்குடியமருமாறு கேட்டு நாம் யாழ்ப்பாணம் வந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்ட போதும் அதிகாரிகள் எங்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வேறு வழியில்லாததால் இந்தக் காணிகளில் கொட்டில்களை அமைத்துக் குடியேறத் தீர்மானித்தோம்'' - என்று நாவற்குழியில் குடியேறும் முனைப்புக்களில் மும்முரமாக இருந்த சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

தமது ஊர்களில் இருந்து எடுத்து வரப்பட்ட கம்புகள், தடிகளைக் கொண்டே கொட்டில்களைத் தாம் அமைக்கின்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

''எமக்கு யாரும் இதுவரை உதவி செய்யவில்லை. யார் என்ன சொன்னாலும், தடுத்தாலும் நாம் இங்குதான் குடியேறுவோம்'' - என்றும் அவர்கள் அடித்துச் சொன்னார்கள்.

அவர்கள் கொட்டில்கள் அமைத்து வரும் காணிகளில் ஆயிரக்கணக்கான கம்புகள், தடிகள் கொண்டு வந்து கொட்டப்பட்டுள்ளன. நேற்றுப் பிற்பகலுக்குள் சுமார் 25 கொட்டில்கள் போடப்பட்டிருந்ததை எமது செய்தியாளர் நேரில் கண்டார்.

சிங்கள மக்களது மீள்குடியமர்வு குறித்து அப்பகுதிக் கிராம அலுவலர் ஆ.நடராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது. அவர் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் இரவு முதலே அப்பகுதியில் வாகனங்களின் இரைச்சல் கேட்ட வண்ணம் இருந்தது. விடிந்த பின்னர் அங்கு சென்று பார்த்த போது ஏராளமான தடிகள் பறிக்கப்பட்டிருந்தன.

பல சிங்கள மக்கள் அங்கு நின்றதை அவதானிக்க முடிந்தது. அவர்கள் அந்த இடத்தில் கொட்டில்களை அமைத்துக் கொண்டிருந்தனர். உடனடியாக இது குறித்து யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாருக்கும் சாவகச்சேரி பிரதேச செயலர் சாந்தசீலன் அஞ்சலிதேவிக்கும் அறிவித்தேன் - என்றார்.

சிங்கள மக்களின் நடவடிக்கை குறித்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட பொது முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:-

எமது அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சிங்கள மக்கள் கொட்டில்கள் அமைத்துக் குடியேறுவதற்கு முயற்சிப்பதை அறிந்து, நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் அங்கு சென்று நிலைமைகளை அவதானித்தேன்.

தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணிக்குள் எந்தவித அனுமதியும் பெறாது அவர்கள் கொட்டில்களை அமைத்து வருகின்றனர். இது குறித்து சபையின் கொழும்புத் தலைமையகத்திற்கு உடனடியாகத் தகவல் அனுப்பினேன்.

நாவற்குழியில் அதிகார சபைக்குச் சொந்தமான 90 ஏக்கர் காணி உள்ளது. அதில் 30 ஏக்கர் காணி ஏற்கனவே 300 வீட்டுத் திட்டத்திற்கு என வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 60 ஏக்கர் காணியை அதிகார சபை பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகிறது.

சிங்கள மக்கள் அந்தக் காணியில் குடியேறுவதற்கு முயற்சிப்பது குறித்து வீடமைப்பு அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறேன் - என்றார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்ததாவது:-

நாவற்குழியில் சிங்கள மக்களை குடியேற்றுவது குறித்து எனக்கு எந்தவித அறிவித்தலும் கிடைக்கவில்லை. அவர்கள் குடியேற முயற்சிப்பது தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்த மான உறுதி உள்ள காணி. அதனால் அவர்கள் தான் இது தொடர்பில்நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

வீடமைப்பு அதிகார சபையின் இந்தக் காணியில் 1990 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பலர் குடியேறி இருந்தனர். பின்னர் போர்ச் சூழல் காரணமாக அவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றிருந்தனர். அதன் பின்னர், அந்தப் பகுதியில் தாம் குடியிருப்பதற்கு அனுமதிக்குமாறு 100 தமிழ்க் குடும்பங்கள் 2003, 2004 காலப் பகுதியில் கோரிக்கை விடுத்திருந்தன. ஆனால், அப்போது வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளரால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-9)


**காணியும் வீடும் விற்பனைக்கு**

உடுவில், டச்சு வீதியில் அமைந்துள்ள 6 பரப்புக் காணியும் வீடும், பயன்தரு மரங்களுடனும் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

T.P : 0785389338

**தேவை**

ஒவ்செற் மெசின் மைண்டர் (OFF - SET MACHINE MINDER) தேவை. அலுவலக நேரங்களில் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சிநெறி**

அதிபர், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள்
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள்
50% கட்டணத்துடன் பயிற்சியில் சேர
13.11.2010 சனிக்கிழமை கடைசிநாள்

MyWay English 182, Stanley Rd Jaffna 0773363456

**தொழிற் பயிற்சிகள்**

★ ரேடியோ,ரெலிவிஷன் நிரப்பிய றிப்பியறிங்
★ Mobile Phone Repairing ★ ஏயர் கொண்டிசனிங்

சகல பயிற்சிகளுக்கும் முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். தொழில் வாய்ப்பும் வழங்கப்படும்.

ஆரம்பம்: 13.11.2010, 15.11.2010

Jaffna Technical Institute

விவரங்களுக்கு:
45, மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் முன்வீதி),
தொ.பே: 0718561654

கிளை:
New Asian Center
56/15, ஸ்ரான்லி வீதி,
(சம்பத் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.0779254078

(சி/572769)

**FOR SALE** UNREGISTERED SUZUKI ALTO (JAPAN)

unregistered SUZUKI ALTO
2007 Last, Pearl white, 23000km only
Full option Brand new condition
Personally Imported from JAPAN.



Contact-0777725258, 021 222 5766.
Wellawatte.

**UK, CANADA போன்ற நாடுகளின் அரச கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்க,**

**நாம் JAUNARY தயாராகிறோம்**

★ Interlink College.
★ Thames College of Technology.
★ Victoria College of London.
★ English time Langue School
★ Union College
★ London Richmound College
★ LEEDS International

★ IELTS அவசியமற்ற அனுமதி.
★ முற்கட்டணம் எதுவும் இல்லை.
★ கல்லூரிக் கட்டணம் 2,000 பவுண்ஸிலிருந்து
★ Sponsor Ship - 1,30,000/=
★ நம்பிக்கை மிக்கது.

தேவைக்கேற்றாற்போல் தமது திறனையும் விருத்தி செய்யலாம்

January In TAKE - To Canada, UK

தொடர்புகளுக்கு :- European College of higher Studies,
315-½, Paramashwara Junction,
Palay Road, Jaffna.

T.P : 0773537378, 0773823872, 0213734747

(105852)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.